
சுவடி : 44
ஏடு : 6
திசம்பர் 2019
*
ஆசிரியர்
**வே.ஆனைமுத்து**
*
ஆசிரியர் குழு
**க. முகிலன்**
**வாலாசா வல்லவன்**
**வையவன்**
**சி. பெரியசாமி**
**கோவிராமலிங்கம்**
**சி. நடராசன்**
**மங்கலம் அரசன்**
**தி.துரைசித்தார்த்தன்**
**ஆ. முத்தமிழ்ச்செல்வன்**
*
அனைத்துத் தொடர்புகளுக்கும்
**‘சிந்தனையாளன்’**
பெரியார்-நாகம்மை நூலகம்
மனை எண்.277/2
சென்னை-திருவள்ளூர் நெடுஞ்சாலை,
அம்பத்தூர், சென்னை - 600 050.

தொடர்புக்கு :
**94448 04980**
**95975 26990**

மின்னஞ்சல் :
sinthanaiyalantamilmonthly
@gmail.com
*
இதழ் வடிவமைப்பு :
**சன் நகலகம்,** சென்னை-5.
9840015179
*
இணையத்தில் படிக்க
**www.keetru.com**
*

# எதிரியைப் புரிந்து கொள்ளுவோம்! நம் கடமையை உணருவோம்!



**சு**யமரியாதை இயக்கம் வேண்டும் என்கிற எண்ணம் ஈ.வெ.இரா. அவர்களுக்கு திடீர் என்று தோன்றிவிடவில்லை. தீண்டாமைக் கொடுமைக்கு ஆட்பட்ட மக்களுடைய இழிநிலையைப் பார்த்துத் தான்-நாடார், பள்ளர், பறையர், சக்கிலியர் ஆகிய எல்லாத் தீண்டப்படாதவர்கள்பால் இரக்கம் கொண்டார்.

30.10.1922-இல் அருப்புக்கோட்டைக்குப் பக்கத்தில் பாலையம்பட்டியில் நடந்த காங்கிரசு மாநாட்டு முடிவில் - அதன் கணக்கு வழக்கைப் பார்ப்பதற்காக - தமிழ்நாடு காங்கிரசுச் செயலாளர் ஈ.வெ.இரா. அங்குத் தங்கியிருந்தார். அதை அறிந்த அருப்புக்கோட்டை நாடார் வாலிபர்கள் சிலபேர், ஈ.வெ.இரா. அவர்களை அங்குக் கண்டு பேசினர்.

அங்கு, 15 அருப்புக்கோட்டை நாடார் வாலிபர்கள் ஈ.வெ.இரா. அவர்களை நேர்காணல் செய்தார்கள். அவர்கள், “நாங்கள் தென் மாவட்டங்களில் கோயிலில் நுழையக்கூடாது எனத் தடுக்கிறார்களே! இந்தத் தீண்டாமையை நீக்குவதற்குக் காங்கிரசு பாடுபடுமா” என, ஈ.வெ.இரா.விடம் கேட்டார்கள். “ஓ! பாடுபடுமே” என ஈ.வெ.இரா. அவர்கள் உறுதியளித்தார். இது நடைபெற்றது 31.10.1922இல் ஆகும்.

21.12.1922-இல் திருப்பூரில் வாசுதேவ அய்யர் தலைமையில் தமிழ்நாடு காங்கிரசு மாநாடு நடந்தது. அம்மாநாட்டில் ஈ.வெ.இரா., பி. வரதராசுலு நாயுடு இருவரும் இணைந்து, “தீண்டாமையையும் கோயில் நுழைவுத் தடையையும் நீக்கக் காங்கிரசு பாடுபடும்” எனத் தீர்மானம் முன்மொழிந்தனர்.

சி. இராசகோபாலாச்சாரி உட்பட்ட பார்ப்பனர்கள் “இது மத சம்பந்தப்பட்டது; இதை நீக்கக் காங்கிரசு பாடுபடாது” என்று கூறித் தீர்மானத்தை அனுமதிக்க முடியாது என மறுத்துவிட்டனர். அதுகண்டு சினங்கொண்டார் ஈ.வெ.இரா.

**21.12.1922 அன்று இரவு, திருப்பூரில் நடந்த காங்கிரசுப் பொதுக் கூட்டத்தில், “தீண்டாமையையும் வருணத்தையும் - இராமாயணமும், மனுநீதியும் காப்பாற்றுகின்றன; இவற்றை எரிக்க வேண்டும்” என்று ஈ.வெ.இரா. தன் வாழ்நாளில் முதன்முதலில் பேசினார்.**

திருப்பூரிலிருந்து ஊருக்குத் திரும்பும் பொழுது, ஈ.வெ.இரா.வும் இராசகோபாலாச்சாரியும் ஒரே மகிழுந்தில் பயணம் செய்தனர். ஈ.வெ.இரா.வைப் பார்த்து, இராசகோபாலாச்சாரியார், “இன்றைக்கு உங்கள் பேச்சு செம டோஸ்” என்று குறிப்பிட்டார். அதைக்கேட்ட ஈ.வெ.இரா. “இந்த மடப்பசங்களுக்கு இது என்ன? இதைவிட ஸ்ட்ராங்க் டோஸ் தேவை” எனக் காட்டமாகப் பதிலளித்தார்.

இராமாயணத்தையும் மனுநீதியையும் முதல் முதலில் காப்பாற்றியவன் புஷ்யமித்ர சுங்கன்.

அசோகனின் கொள்ளுப்பேரன் பிருகத்ரதன் ஆட்சிக் காலத்தில், அவனிடம் படைத்தளபதியாக இருந்த புஷ்ய மித்ர சுங்கன் எனும் பார்ப்பனன் பட்டப்பகலில் தன் அரசன் பிருகத்ரதனை வாளால் வெட்டிவிட்டு, அன்றே தான் அரசன் என்று அறிவித்தான்.

அவன் 1) பாடலிபுத்திரம், வைசாலி முதலான பகுதி களிலிருந்த பவுத்தத் துறவிகளின் தலைகளை வெட்டிக் கொண்டு வருவோருக்கு மதிப்பு மிக்க பரிசுகள் அளித் தான். அப்படி வெட்டிக் கொடுக்கப்பட்ட பல்லாயிரக் கணக்கான பவுத்தத் துறவிகளின் தலைகளைக் கொதிக் கும் நெய்க்கொப்பரையில் போட்டுக் கருக்கி எடுத்து, வீசி எறிந்தான்.

பவுத்தம், புத்தர், பவுத்தத் துறவிகள் பேரில் மக்களுக்கு வெறுப்பு உண்டாக வேண்டி, அவ்வளவு கொடுமை களைச் செய்தான்.

**2. புஷ்யமித்ர சுங்கன் தான், அன்று வரையில் செவிவழிக் கதையாக வழங்கி வந்த இராமன் பற்றிய செய்திகளைத் தொகுக்கச் செய்து - இராமாயணத்துக்கு முதன்முதலாக ஒரு வடிவம் கொடுத்தான்.**

தென்னாட்டில் பார்ப்பான் அரசனாக வரும் வாய்ப்பு நேரவில்லை.

ஆனால், கி.பி.7-ஆம் நூற்றாண்டுக்குப் பிறகு பல்லவர், சோழர், பாண்டியர் ஆட்சிகளிலும், நாயக்கர், மராட்டியர், நவாபுகள் ஆட்சிகளிலும்-பார்ப்பான் முதல மைச்சனாக, படைத் தலைவனாக, அரச குருவாக, கோவில் அர்ச்சகனாக, வரி செலுத்த வேண்டாத வள மான நில உடைமைகளைப் பெற்றவனாக அரசர்களால் ஆக்கப்பட்டான். அரசனே பார்ப்பனர்களை வளர்த்தான்; மதித்தான்; புரந்தான்.

இத்துடன் நில்லாமல், தமிழகத்தில் ஆங்காங்கே வேதபாடசாலைகளை நிறுவி, வேத சாத்திரங்களைப் பார்ப்பனர்கள் கற்றிட எல்லா வசதிகளையும் அரசனே செய்து தந்தான்.

கி.பி.12-ஆம் நூற்றாண்டுக்குப் பிறகு இராமாயணம் நாடக வடிவிலும், கீர்த்தனைகள் வடிவிலும் தமிழ் மக்களிடம் பரப்பப்பட்டது. இராமன் 'கடவுள்' என்னும் நிலைக்கு உயர்த்தப்பட்டான். அவன் பிறவி இழிவு மறைக்கப்பட்டது.

மேலும் 1835-க்குப் பிறகு பொதுக்கல்வி என்கிற பேரால்-தொடக்கக் கல்வி, உயர்நிலைக் கல்வி, கல்லூரிக் கல்வி, ஆராய்ச்சிக் கல்வி ஆகியவற்றில் இராமாயணம், மகாபாரதம் முதலான இதிகாசங்கள் பாடமாக இன்று வரை கற்பிக்கப்படுகின்றன.

இருந்தாலும் தந்தை பெரியார் அவர்கள் 'இராமகாதை' என்கிற வால்மீகி இராமாயணத்தின் 27 வகையான பதிப்புகளை ஆய்ந்து படித்தவர்.

**அதில், இராமன், பார்ப்பானுக்கு யாகம் மூலம் பிறந்தவன் எனக் கண்டுள்ளது.**

பண்டித மன்மதநாத தத்தர், கவுசல்யை எப்படி இராமனைப் பெற்றாள் என்கிற செய்தியை வால்மீகி இராமாயணத்தில் உள்ளபடி, பின்வருமாறு ஆங்கிலத் தில் மொழிபெயர்த்திருக்கிறார்.

"Kausalya with three strokes slew that horse, experiencing great glee. Kausalya with an undisturbed heart passed one night with that horse. The Hotas, Adhwaryus and the Ugatas jointed the King's wives."

இதன் பொருள் வருமாறு :

**"கோசலை மூன்று வெட்டில் அந்தக் குதிரையை மிக உற்சாகத்தோடு கொன்றாள். அவள் கலங்கா நெஞ்சோடு ஒரு நாளிரவை அக்குதிரையோடு கழித்தாள். ஹோதா, அத்வர்யு, உகதா முதலிய ரித்விக்குகள் இராஜபார்யைகளைப் புணர்ந்தார்கள்.**

இந்த இழிந்த பிறவியுடைய-இராமன், ஒரு கடவுள் என இந்துக்களால் வணங்கப்படுவதைக் கண்டனம் செய்து, 1928 முதல் 1973 வரை, தந்தை பெரியார், பரப்புரை செய்தார்; பல கட்டுரைகள் எழுதினார். ஆனால் பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் பெரியார் எழுதிய இராமாயணம் பற்றிய கட்டுரைகள் கட்டாயப் பாடங் களாகக் கற்பிக்கப்படவில்லை.

இந்தியா 1947-இல் விடுதலை பெற்றது.

இந்திய ஆட்சிக் கருவி, பார்ப்பனரிடம் வந்தது.

ஆட்சிக் கருவி பார்ப்பனர்களின் கைக்கு வந்தவுடன், முதலாவதாகச் செய்த கேடான பணி, "இந்திய அரச மைப்புச் சட்டம் 1950-இல் நடப்புக்கு வந்த பிறகும், நெடுங்காலமாக இங்கு நடைமுறையில் இருந்துவந்த -வருகிற எல்லா மதப் பழக்கவழக்கங்களும் செல்லும்" என்று அரசமைப்புச் சட்டம் செய்ததுதான்.

இதனைக் காஞ்சி சங்கராச்சாரி சந்திரசேகரேந்திர சரசுவதியின் தூதுவராகத் தில்லிக்குச் சென்ற அக்னி கோத்ரம் இராமாநுச தாதாச்சாரியின் அறிவுரையை ஏற்றுக்கொண்டு, அரசமைப்புச் சட்ட வரைவுக் குழு

உறுப்பினர்கள் அல்லாடி கிருஷ்ணசாமி அய்யர், என்.ஜி.கோபாலசாமி அய்யங்கார், டி.டி. கிருஷ்ணமாச் சாரி, கே.எம். முன்ஷி முதலான பார்ப்பனர்கள் நிறை வேற்றி வைத்தனர். இச்செய்தி, அப்போதே தந்தை பெரியார் அவர்கட்கும் தெரியும்.

**இதன்படி மதப்பழக்க வழக்கங்களுக்கு அளிக் கப்பட்ட பாதுகாப்பு - இந்திய அரசமைப்புச் சட்ட விதிகள் 13, 25(2-அ), 372(1) இவற்றில் கெட்டி யாக உள்ளது.**

1919 முதற்கொண்டு காங்கிரசில் இருந்த பெரியார், 1922-இல் காங்கிரசுப் பொதுக் கூட்டத்திலேயே இராமா யணத்தையும் மநுநீதியையும் எரிக்க வேண்டும் என முழங்கினார். அன்று சி. இராசகோபாலாச்சாரி அதற்கு அங்கேயே சாட்சியாக இருந்தார்.

**1944 முதல் இராமாயணம், மகாபாரதம், பெரிய புராணம் இவற்றிலுள்ள மூட நம்பிக்கை களை விளக்கி எண்ணற்ற ஆய்வு நூல்களை வெளியிட்டார், பெரியார். 1956-இல் இராமன் படத்தை எரித்தார். 10.4.1965-இல் தமிழ்நாட்டில் ஊர்தோறும் இராமாயணத்தைக் கொளுத்தச் செய்தார். “இராமாயணம்” என எழுதிய தாளை 11.8.1966 அன்று தமிழ்நாட்டில் பல இடங்களில் எரிக்கச் செய்தார்.**

பெரியார் ஈ.வெ.இரா. இராமாயணத்தை எரிக்க வேண்டும்; மநுநீதியை எரிக்க வேண்டும் என 1922-இலேயே கூறினார்.

ஆனால் இந்தியாவை ஒரு இந்துக்கள் நாடாக - இராமன் ஆட்சி செய்யும் நாடாக அமைக்க வேண்டும் என்று, 1925 அக்டோபர் மாதம் விசய தசமி நாளில் டாக்டர் கேசவ பலிராம் ஹெட்கேவர் ஆர்.எஸ்.எஸ். அமைப்பை நிறுவினார். ஹெட்கேவருக்குப் பின், தலைவராக நீண்ட காலம் இருந்த எம்.எஸ். கோல் வால்கர், ஆர்.எஸ்.எஸ். அமைப்பின் தத்துவத் தந்தை யாகக் கருதப்படுகிறார். (திருச்சியில் 1970-வாக்கில் இரண்டு தடவைகள் டாக்டர் கோல்வால்கர் உரை யாற்றியதைத் தேசிய உயர்நிலைப்பள்ளி வளாகத்தில் திருச்சி வே.ஆனைமுத்து, நோபிள் கு. கோவிந்தராசலு இருவரும் நேரில் கேட்டு, அதன் சாரத்தைத் தந்தை பெரியாரிடம் நேரில் கூறினர்).

இன்று ஆர்.எஸ்.எஸ். நிலைமை என்ன?

பாரதிய சனதா கட்சி 303 மக்களவை உறுப்பினர் களையும், கூட்டணிக் கட்சிகள் 50 பேர்களையும் ஆக 353 உறுப்பினர்கள் கொண்ட கெட்டியான அடித்தளத் தோடு மோடி அவர்கள் ஆட்சி அமைத்துள்ளார்.

2014 முதல் 2019 செப்டம்பர் முடிய உள்ள காலத்தில் 13,584 ஷாகாக்கள் அமைக்கப்பட்டுள்ளன. கடந்த பத்து ஆண்டுகளில் 19,584 ஷாகாக்கள் அமைக் கப்பட்டன. நாடு முழுவதும் 57,411 ஷாகாக்கள் உள்ளன என்று அண்மையில் புவனேசுவரில் நடைபெற்ற ஆர்.எஸ்.எஸ். பொதுக்குழு, செயற்குழுவை ஒட்டி வெளி யிட்ட அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

**57,411 ஷாகாக்கள் நாள்தோறும் 40 மணித் துளிகள் உடற்பயிற்சி, 20 மணித்துளிகள் கொள் கைப் பயிற்சி அளிக்கப்படுகிறது.** இதுதவிர, வாரம் ஒருமுறை நடக்கும் ஷாகாக்கள் 18,923 இருக்கின்றன. மொத்த ஷாகாக்களில் 60 விழுக்காட்டில் 20 அகவைக் குக் குறைவான மாணவர்கள், இளைஞர்கள் இருக் கின்றனர். இவர்களே பா.ச.க.வின் முக்கிய பொறுப்பு களில் நியமிக்கப்படுகின்றனர்.

இந்த இக்கட்டான சூழ்நிலையில் பெரியாரிய உணர் வாளர்கள் 05.01.2020 ஞாயிறு அன்று சென்னையில் கூடி, இணக்கமான வேலைத் திட்டங்களை வகுத்திடு வோம். வாருங்கள் என, மாநாட்டுக் குழுவினர் சார்பில் - மா.பெ.பொ.க. சார்பில் அன்போடு அழைக்கிறேன்.

**1.12.2019** **- வே. ஆனைமுத்து**

## வரகூர் நாரயாணசாமி அவர்களின் 91வது பிறந்தநாள்விழா



மார்க்சியப் பெரியாரிய பொதுடைமைக் கட்சியின் பெரம்பலூர் மாவட்டச் செயலாளரும், தோழர் அறிஞர் ஆனைமுத்து அவர்களின் கொள்கைச் செயல்பாட்டளரும், முது பெரும் பெரியார் தொண்டர் வரகூர் நாரயாணசாமி அவர்களின் 91ஆவது பிறந்தநாள்விழா பெரம்பலூர் துறைமங்கலம் அவரின் மகன் இல்லத்தில் நடைபெற்றது. விழாவில் து.பொதுச்செயலாளர் பெரியசாமி,பெரம்பலூர் நடத்தி.க.தலைவர் அக்ரி ந.ஆறுமுகம், கவிஞர் முத்தரசன், பூலாம்பாடி வரதராசன், புலவர் அரங்க நாடன்,புதுச்சேரி இரா.திருநாவுக்கரசு, திருச்சி இரா.கலியபெருமாள், திருச்சி ந.கருணாகரன், தோழியர் முத்தமிழ்செல்வி, அசோகன், கவிஞர் அறிவுமழை, இளவரசன், கழனிவாசல் ரெங்கசாமி, அரியலூர் மாவட்டச் செயலாளர் புலவர் இரா.கலியமூர்த்தி ஆகியோர் வாழ்த்திப் பேசினார்கள். வரகூர் நாரயாணசாமி அவர்கள் ஏற்புரை நிகழ்த்தினார்.

- செய்தி : திருச்சி **ந.கருணாகரன்**

## பெரம்பலூரில் நடு மகன் வீட்டில் தங்கியிருக்கும்

## வரகூர் தோழர் **மா. நாராயணசாமி** 91 அகவையைக் காண்பதை ஒட்டி,

## அரியலூர் மாவட்ட மா.பெ.பொ.க. செயலாளர் புலவர் **இரா. கலியமூர்த்தி** எடுத்த நேர்காணல்



வரகூர் தோழர்
**மா.நாராயணசாமி**

இரா.கலியமூர்த்தி : வணக்கம் ஐயா! (ஆப்பிள் பழத்தைக் கையில் கொடுத்தல்).

மா.நாராயணசாமி : வணங்கிய படியே வாங்க! வாங்க! (பழத்தைப் பெற்றுக் கொள்கிறார்).

இரா.க. : கையில் என்ன? ஊசி போட்டுக் கொண்டதற்கான அடையாளம் இருக்கிறதே!

மா.நா. : 10 நாள் உடல்நலம் இல்லாமல், சளித் தொல்லை, மூச்சுவிட முடியவில்லை. தனலட்சுமி-சீனிவாசன் மருத்துவ மனையில் சிகிச்சை எடுத்துக்கொண்டேன். கடைசியாக அறுவை சிகிச்சை செய்ய வேண்டும். துணைக்கு யார் வந்திருக்கிறார்கள்? என்றனர். யாரும் இல்லை என்றேன். துணையோடு வாருங்கள் என்று அனுப்பிவிட்டனர்; வந்துவிட்டேன் (என்றார்).

இரா.க. : வயது என்ன? 90 இருக்குமா?

மா.நா. : **ஆமாம். 90 தான் நடக்கிறது. 30.11.2019-இல் 91 ஆரம்பம்.**

இரா.க. : இதற்கு மேல் அறுவை சிகிச்சை வேண்டாம். பெருந்தொல்லை.

மா.நா. : நானும் அப்படித்தான் நினைக்கிறேன். ஆனாலும் மூச்சுவிட முடியவில்லை. 10 அடி கூட நடக்க முடியவில்லை. நடுமகன் மேகநாதன்தான் பார்த்துக் கொள்கிறான். வீட்டில் உள்ள பேரன், பேத்திகள், மருமகள் எல்லாரும் சாப்பிடுங்கள், சாப்பிடுங்கள் என்று நச்சரிக்கிறார்கள். முடியவில்லை. அவ்வப்போது மாத்திரை போட்டுக் கொள்கிறேன். சரியாகவில்லை.

இரா.க. : உங்கள் இளமைக் காலம் பற்றிச் சொல்லுங்கள்.

மா.நா. : எங்கள் தாத்தா நாராயணசாமி காலத்தில் பெரிய வெண்மணியில் இருந்து வரகூருக்கு வந்திருக்கிறார்கள். தாத்தாவுக்கு மூன்று மகன்கள், ஒரு பெண். மூத்த மகன் நா. கோவிந்தசாமிக்கு 1. மாரிமுத்து, 2. இராமாயி இருவர் மட்டுமே.

என் பெற்றோர்கள் மாரிமுத்து - செல்லம்மாளுக்கு பிறந்த பெண் குழந்தைகள் அடுத்தடுத்து இறந்து போகவே, நான் 6ஆவது குழந்தை. இன்று 30-11-2019இல் நாராயணசாமி (91) ஆகிய நான் மட்டுமே உயிருடன் இருக்கிறேன்.

இரா.க. : எதுவரை படித்தீர்கள்?

மா.நா. : உள்ளூரில் இருந்த தொடக்கப் பள்ளியில் 5ஆம் வகுப்பு வரை படித்தேன். மேற்கொண்டு படிக்க என் தந்தையார் ஒத்துக்கொள்ளவில்லை. 10 ஏக்கர் நிலம், நிறைய கால்நடைகள் இவற்றைப் பார்த்துக் கொள்ள நான் பயன்பட்டேன்.

இரா.க. : பெரியாரை எங்கே, எப்போது பார்த்தீர்கள்?

மா.நா. : எனக்கு வயது 19 நடந்தது. 1948-இல் எங்க மூத்த அக்கா அலமேலு, மாமா இ.க. தங்கவேல் இலந்தங்குழிக்கு அடிக்கடி போவேன். மாமா சிவபக்தர். அவரைப் பார்த்து நானும் பக்தனானேன். அப்போதுதான் பெரியார் அரியலூர் வருகிறார் எனத் தெரிந்து நானும், மாமாவும் ஆ.செ.தங்கவேல் மற்றும் சிலரும் அரியலூருக்குப் பெரியாரைப் பார்க்கப் போனோம். பெருமாள் கோயில் தெருவில் பி.ஆர்.சின்னசாமி தலைமையில் கூட்டம் நடந்தது.

பெரியார் கடவுள், மதம், புராணம், சமுதாயம் எதையும் விட்டுவைக்கவில்லை. அதில் உள்ள வண்டவாளங்களை ஆதாரத்துடன் விளக்கிப் பேசினார். அதைக் கேட்ட எங்களுக்குப் பேரதிர்ச்சி! என்னடா இப்படிப் பேசுகிறார்? பயங்கரமாக இருக்கிறதே. மறுக்கமுடியாத அளவுக்கு ஆதாரமும் இதோ கையில் வைத்திருக்கிறேன் என்கிறாரே! வியப்பாக இருந்தது. மூன்று மணி நேரம் பேசினார். அவர் பேச்சைக் கேட்ட எல்லாரும் கல் சிலை போல் உட்கார்ந்து இருந்தனர். எந்த ஒரு சலசலப்பும் இல்லை. பேச்சு முடிந்தது வீட்டுக்கு வந்தோம். அவ்வளவுதான்; அன்றுமுதல் சுயமரியாதைக்காரனாக மாறிவிட்டேன்.

இரா.க. : எப்போது திருமணம்? குடும்பம் பற்றிச் சொல்லுங்கள்.

மா.நா. : 1950-இல் பெரிய திருக்கோணம் தாய்மாமன் மகள் அலமேலுவைக் கட்டி வைத்தனர். மூன்று மகன்கள், ஒரு மகள். முதல் மகன் நா.பாண்டியன் - பொறியாளர், 2 ஆண்டுகளுக்கு முன் இறந்து போனார். 2ஆவது மகன்

மேகநாதன், 3ஆவது மகன் காமராசு, 4ஆவது பெண் அறிவுக்கண்ணு. மகளுக்குப் பெரியார் பெயர் வைத்தார்.

இரா.க. : இயக்கப் பணிகள் - நடவடிக்கைகள் பற்றிச் சொல்லுங்கள்.

மா.நா. : பெரியார் பேச்சைக் கேட்ட பின்னர் நெற்றியில் விபூதி பூசுவது போச்சு. பெயருக்குப் பின்னால் போடும் சாதிப் பட்டம் போச்சு. சாதி மறுப்பில் தீவிரம். உள்ளூரில் சேரி கந்தனுக்கு சுயமரியாதைத் திருமணம் நடத்தி வைத்தோம். சாதி இல்லை; தீட்டு இல்லை என்கிறீர்களே - 'சாப்பிட்டுவிட்டுப் போங்கள்' என்றனர். அவ்வாறே சாப்பிட்டு நான், அந்தூர் கி. இராமசாமி, ஆ.செ.தங்கவேல், கூடலூர் சுப்பையா வீடு திரும்பினோம். சாதிக் கட்டுப்பாடு செய்துவிட்டார்கள். எனக்கும் அச்சமாக இருந்தது. ஆனால் நம் தோழர்கள், எதற்கும் கவலைப்படாதீர்கள்; நாங்கள் இருக்கிறோம் என்றார்கள். காலப்போக்கில் எல்லாம் சரியாயிற்று.


புலவர் **இரா.கலியமூர்த்தி**

இரா.க. : உங்கள் பொதுத் தொண்டு பற்றித் தெரிந்து கொள்ள ஆசைப்படுகிறேன்.

மா.நா. : என்னை 3 முறை ஊராட்சித் தலைவராகத் தேர்ந்தெடுத்தனர் (1. 1960-65, 2. 1970-75, 3. 1985-90). அந்தூரில் இருந்து பிரித்து தனிப் பஞ்சாயத்து ஆக்கினேன். 1967-இல் வரகூரில் இருந்த 110 வீடுகள் தீயிக்கு இரையாயின. ஊர் கமிட்டி அமைத்து மாவட்ட ஆட்சியரிடம் முறையிட்டும் பலனில்லை. நேரே அறிஞர் அண்ணாவிடம் சென்று மனுக்கொடுத்தேன. 3 மாதம் கழித்து உரு.1,10,000/- வழங்கி ஆணை வந்தது. பெரம்பலூர் M.P. J.S. இராசு அவர்கள், "எப்படி ஐயா இந்தக் காரியத்தைச் சாதித்தீர்கள் எனக் கட்டிப்பிடித்துக் கொண்டு" பாராட்டினார். தெரு மேம்பாட்டு வசதி, குடிதண்ணீர் வசதி, சாலைகள், பாலங்கள் என அன்றைக்குச் செய்ததை விட, இன்று வரைக்கும் ஒரு கொம்பனும் ஒன்றும் செய்யவில்லை.

இரா.க. : அறிஞர் வே. ஆனைமுத்துவுடன் எப்போது இருந்து தொடர்பு ஏற்பட்டது?

மா.நா. : குன்னத்தில் வீரானந்தபுரம் கணபதி ஆசிரியர் வேலையில் இருந்தார். அந்தப் பகுதியில் பல பேரைப் பகுத்தறிவாளராக மாற்றிய பெருமை அவரையே சாரும். அவரை நானும் மற்ற தோழர்களும் அடிக்கடி சந்திப்போம். பெரம்பலூர் வட்ட தி.க. கூட்டம் குன்னத்தில் 2 நாள் மாநாடு போல நடந்தது. அது முதல் ஆனைமுத்துவுக்கும் எனக்கும் தொடர்பு.

அதனைத் தொடர்ந்து, நடந்த 26.11.1957-இல் சாதி ஒழிப்புப் போராட்டம், தேசப்பட எரிப்புப் போராட்டம் (1960), இராமாயண எதிர்ப்புப் போராட்டம் (1966) கலந்து கொண்டு கைதாகி விடுதலையானேன்.

எஸ்.டி.விவேகி, ஆனைமுத்து, கூடலூர் சுப்பையா, அந்தூர் இராமசாமி, ஆ.செ.தங்கவேலு இவர்களைக் கொண்டு திராவிடர் கழகக் கூட்டங்கள் நடத்தினேன்.

6.6.1966-இல் வரகூருக்குப் பெரியாரை அழைத்துக் கூட்டம் நடத்தினேன். அணைக்கரை டேப் தங்கராசை வைத்தும் கூட்டம் நடத்தினேன்.

ஆனைமுத்து ஆரம்பித்த பெரியார் சமவுரிமைக் கழகம், பின் மார்க்சியப் பெரியாரியப் பொதுவுடைமைக் கட்சி என்னை அவருடன் நெருக்கம் கொள்ளச் செய்தது. 2017 வரை பெரியார் பிறந்த நாள் கூட்டம், அம்பேத்கர், பாரதிதாசன் பிறந்த நாள் கூட்டம், மலர் வெளியீடு மாநாடு பணியாற்றி இருக்கிறேன்.

2000-த்தில் மனைவி இறந்த பிறகு, உடல்நலம் கெட்டது. 2012-இல் நாராயணசாமி அலமேலு கல்வி அறக்கட்டளை பதிவு எண்.53/2012 நிறுவி ஆண்டுதோறும் 10ஆம் வகுப்பில் முதல், இரண்டு, மூன்று மதிப்பெண் பெறும் மாணவர்களுக்கு ரூ.3000, ரூ.2000, ரூ.1000 பரிசு அளித்து வருகிறேன்.

200-க்கும் மேற்பட்ட சுயமரியாதைத் திருமணங்கள் நடத்தியிருக்கிறேன். ஆதித்திராவிட மாணவர்களை கோயில் நுழைவு நடத்தியிருக்கிறேன்.

இரா.க. : கலியமூர்த்தியுடன் எப்போது தொடர்பு ஏற்பட்டது?

மா.நா. : அரியலூரில் ஆ.செ.தங்கவேல், பெரியார் அங்காடி தேநீர்க் கடை நடத்தினார். அங்கே வந்த போதுதான், ஆனைமுத்துவுடன் உங்களை 1976-இல் சந்தித்தேன். அதுமுதல் நமது நட்பு தொடர்கிறது.

இரா.க. : 30-11-2019-இல் தங்களுக்கு 91-ஆவது பிறந்த நாள் வருகிறது. அன்றைக்கு இரா.கலியமூர்த்தி, அரியலூர் புலவர் அரங்கநாடன், தமிழ்க்களம் இளவரசன், காட்டுமன்னார்குடி தி. சித்தார்த்தன் பிறந்த நாள் விழா கொண்டாட முடிவு செய்திருக்கிறோம் என்ற மகிழ்ச்சியைத் தெரிவித்துக் கொள்கிறேன். மீண்டும் சந்திப்போம். வணக்கம்.

மா.நா. : வணக்கம் ஐயா, போய் வாருங்கள்.

**- இரா. கலியமூர்த்தி**

# அயோத்தி பாபர் மசூதி - உச்ச வழக்குமன்றத் தீர்ப்பு

## இது நீதித்துறை வரலாற்றுப் பிழை - உடனடியாகத் திருத்தப்பட வேண்டும்!

### (விலங்காண்டிக் கால விதி "வல்லான் வகுத்ததே சட்டம்" என்பதன் அடியொற்றியதே)

இரா. பச்சமலை

2019, நவம்பர் 9-ஆம் நாளில் உச்ச வழக்கு மன்றம் அயோத்தி பாபர் மசூதி வழக்கில் தன் தீர்ப்பை அளித்துவிட்டது. இது அய்ந்து நடுவர்களைக் கொண்ட அரசமைப்புச் சட்ட அமர்வால் வழங்கப்பட்டுள்ளது. தீர்ப்பின் தன்மையை ஆய்வுக்கு எடுத்துக் கொள்வ தற்கு முன் வழக்கின் தன்மை, அடிப்படை, வரலாற்றுப் பின்னணி போன்றவற்றைச் சற்று பார்த்துக் கொள்வோம்.

உத்தரப்பிரதேச மாநிலத்தில் அயோத்தியில் 450 ஆண்டுகளுக்கும் மேலாக பாபர் மசூதிக் கட்டடம் இருந்து வந்தது. அந்த மசூதி எழுப்பப்பட்ட இடத்தில்தான் இராமன் பிறந்தான் என்றும் இராமன் (மானுடனாகப் பிறந்தவன், மனிதன் என்ற அடிப்படையில் குறிக்கப் படுகிறான்) கோவில் இருந்ததாகவும், அது தகர்க்கப்பட்டு அதன் மீதுதான் மசூதி கட்டப்பட்டுள்ளதாகச் சொல்லியும் அந்த இடம் இந்துக்களுக்கே உரியதாகும் என உரிமை கோரி வழக்குத் தொடுக்கப்பட்டும் நிலுவையில் இருந்து வந்தது.

அந்நிலையில் இந்துத்துவப் பார்ப்பனியச் சங்பரிவார் கும்பல் வன்முறையைக் கட்டவிழ்த்துவிட்டு சட்டத்தைத் தங்கள் கையில் எடுத்துக் கொண்டு மசூதியை இடித்துத் தரைமட்டமாக்கியது. இதைத் தொடர்ந்து வகுப்புவாதம், பயங்கரவாதம் தலைவிரித்து ஆடியது. அதில் 2000-க்கும் அதிகமான இசுலாமியர்கள் பழிவாங்கப்பட்டனர். இந்தக் கொடுமைகளுக்கெல்லாம் பாரதிய சனதாக் கட்சி, அதன் தலைவர்கள் அத்வானி, முரளி மனோகர் ஜோசி உள்ளிட்டோர் துணை நின்றனர் எனக் குற்றம் சாட்டப்பட்டுள்ளனர். உலக வரலாற்றில் இந்த வன் கொடுமை அரங்கேறிய நாள் 6.12.1992, இக்கொடுஞ் செயல் நடைபெற்ற போது அதற்கு எதிரான எவ்வித எதிர்வினையும் மேற்கொள்ளாமல் பல்லாயிரக்கணக் கான பாதுகாப்புப் படையினர், காவல் துறையினர் வெறும் பார்வையாளர்களாக அதே இடத்தில் இருந்தனர்.

அன்றைய நரசிம்மராவ் தலைமையிலான இந்திய ஒன்றிய காங்கிரசு அரசும், உத்தரப்பிரதேச மாநில பா.ச.க.வின் கல்யாண் சிங்கின் தலைமையிலான அரசும் பட்டப்பகலில் ஒரு சிறுபான்மைச் சமயத்தின் வழிபாட்டு இடமான அந்த மசூதி இடிக்கப்பட்டுத் தரை மட்டமாக ஆக்கப்பட்டதிற்குப் பார்வையாளர்களாகத் தான் இருந்தனர் என்பதுதான் உலக வரலாற்றில், உச்சக்கட்ட வன்கொடுமை. இந்தக் கொடும் வன்முறை யில் ஈடுபட்டவர்கள் மீது வழக்குகள் தொடுக்கப்பட்டு அவையும் வழக்கு மன்றங்களில் நிலுவையில் இருந்து வருகின்றது. வரலாற்றில் உண்மையில் நிகழ்த்தப் பட்ட வெறிச் செயல்களுக்கு அடிப்படையாகச் சொல்லப் படுவது கடவுளின் அவதாரமான மனிதனான இராமன் என்பவனை அவன் தாய் மசூதி இருந்த இடத்தின் மய்யப் பகுதியில் பெற்றெடுத்தாள் என்ற மக்கள் நம்பிக்கை கொண்டதுதான்.

யார் அந்த இராமன்? வால்மீகி என்பவர் வடித்தெடுத்த காவிய (இதிகாச)மான இராமாயணத்தின் காவியத் தலைவன்தான் இவன். காவியம் (இதிகாசம்) என்றாலே உலகளவில் எல்லா மொழி இலக்கியங்களும் ஏற்றுக் கொண்டது போன்று, இதுவும் ஒரு கற்பனைக் கதை யாகும். அதாவது காவியம் என்றால் அதில் வரும் காவியத் தலைவன் மாந்தர்கள் இயற்கையான, இயல்பான தன்மையில் இன்றி இயற்கை மீறிய தன்மை உடையவர்களாகவும் அதில் வானிலே, தரைக்குள்ளே பயணம் இருப்பது போன்றும், பல உவமைகளைக் கொண்டதாகவும் போன்ற பல கூறுகளை உள்ளடக்கிய எல்லையில்லாத கற்பனை வளம் மிக்க கதையைக் கொண்டதாகவும், இயற்றப்பட வேண்டுமென்பது அதற் குரிய விதிகள்.

அதே தன்மையில்தான் வால்மீகி தன் இராமாயணக் காவியக் கதையையும் காவியத் தலைவன் மற்றும் மாந்தர்களையும் படைத்திருக்கிறார். இது எவ்வளவு கற்பனை மிகுந்தது என்பதற்கு இராமாயணம் துளசி தாசர், தமிழில் கம்பராமாயணம் போன்று 26 வகை யான இராமாயணக் கதைகளும், அதில் இடம்பெறும் காவிய மாந்தர்களுக்கிடையேயான உறவுகளும் கதை ஓட்டமும் அமைப்பும் ஒன்றுக்கொன்று முற்றிலும் மாறு பட்டவையாகவும் (காட்டாக இராவணனுக்கு சீதை மகளாகவும், இராமனுக்குச் சீதை சகோதரியாகவும்) உள்ளன. மேலும் இராமாயணக் கதை உண்மையாக நிகழ்ந்தவை என்பவர்கள், அதன் காலம் பல இலக்கம் ஆண்டுகளுக்கு முன்னையது என்றும் சொல்வர். அறிவியல் கண்ணோட்டத்தில் பார்த்தால் மனித இனம் உருவாதல் அடிப்படையில் தற்போதுள்ள மனிதனின் தோற்றமே 50000-70000 ஆண்டுகளுக்கு முன்பு தான் உருப் பெற்றதாக உறுதி செய்யப்பட்டுள்ளது. எனவே மனித வரலாற்றுக்குள் வராத கற்பனைக்கும் எட்டாத தன்மை யுடையதுதான் இராமாயணக் கதை என்பது என்ற உறுதியான முடிவுக்கு வரலாம்.

இந்தப் பின்னணியில் மட்டுமின்றி, குறிப்பாக இராமன் பிறப்புப் பற்றியும் பல இராமாயணங்கள், பலவாறான கதைகளைக் கொண்டுள்ளன. அதாவது இராமன் கருவுற்றதே இயற்கையான மாந்தர்களிடை உறவு வழிப்பாற்பட்டது அன்று என்றும், கதைகள் உள்ளன. எனவே இராமன் என்பது நம்பிக்கை என்று சொல்லிக் கொள்ளக் கூடத் தக்க தகுதியற்ற ஒன்றாக உறுதியாகக் கூறமுடியும், எனவே இதை முற்றிலும் வெறும் வெற்று நம்பிக்கை என்றுதான் கொள்ள வேண்டும்.

வரலாற்றுப் பதிவுகளிலிருந்து அயோத்தியில் கட்டப் பட்ட மசூதி முதலில் 1523-இல் லோடி மசூதி என்ற பெயரில்தான் கட்டப்பட்டதாகத் தெரிகின்றது. பின் லோடி தோல்வியுற்றதையடுத்து அது பாபர் மசூதி என்ற பெயரில் கட்டி முடிக்கப்பட்டுள்ளது. அதே காலக்கட்டத்தில் வாழ்ந்த, துளசிதாசர் இராமாயணக் கதையை எழுதியவர். அவர் அயோத்தியில் மசூதி கட்டப்பட்ட இடத்தின் அருகில் அனுமன் கோவில் கட்டவேண்டுமென்று மொகலாய அரசனிட மிருந்து நிலத்தைப் பெற்று அனுமனுக்குக் கோவில் கட்டியுள்ளார். இராமாயணக் கதையெழுதிய அவரின் காவியத் தலைவன் இராமன் பிறந்த இடம் அந்த அயோத்தியிலுள்ளது என்ற எண்ணமோ கருத்தோ இல்லாதவராக இருந்ததால்தான் அங்கு அனுமன் கோவில் கட்ட முற்பட்டார் என்ற உறுதியான முடிவுக்கு வரவேண்டியுள்ளது. எனவே இராமன் அங்கு பிறந்தான், அங்கு இராமன் கோவில் கட்டப்பட்டிருந்தது என்று சொல்வதெல்லாம் வெறும் கட்டுக்கதை என்று தெளிவாகின்றது.

இந்த மசூதியில் 1849 முதல் இசுலாமியர்கள் இறை வழிபாடு மேற்கொண்டு வந்துள்ளனர். அதன் பின்னர்தான் 1859-இல் அந்த இடத்தில் இராமன் கோவில் இருந்ததாய் ஒரு புரளியைப் பரப்பி வந்துள்ளனர். அயோத்தியில் பாபர் மசூதி இருந்த இடத்தின் மய்யத்தில் தான், இராமன் பிறந்தான் என்று ஏன் சொல்லப் பட்டது? 1857-இல் ஆங்கிலேயர் ஆட்சிக்கு எதிரான புரட்சியை ஒடுக்குவதற்கு சமூகங்களுக்கிடையே வேறு பாடுகளை ஏற்படுத்தி அவர்களைத் துண்டாடுவது என்ற நோக்கத்துடன் ஆங்கிலேய ஆட்சி ஒரு குழு மூலம் இந்த இராமன் பிறப்பு மசூதி உள்ள இடத்தில் தான் நடந்தது என்று பரப்பியது. அந்தக் குழுதான் பின்னாளில் இந்துத்துவப் பார்ப்பனியக் காவி வெறிக் கும்பலாக மாறியுள்ளது. இந்த அற்ப உணர்வை, வெறும் வெற்று நம்பிக்கையை மக்கள் மத்தியில் விதைத்து அதன்வழி அவர்களை வெறியூட்டித் தங்கள் அரசியல் சமுதாயத்திற்காகப் பயன்படுத்துவதற்குக் கையில் எடுத்துக் கொண்டது.

இந்த இராட்டிர சுயம் சேவக் சங்கம். இப்பொழுது பாரதிய சனதாக் கட்சி, விசுவஇந்து பரிசத் என இந்த இந்து மதவெறிக் கூட்டம், இவர்களால் வெகுமக்களான இந்து மக்களாக உள்ள மக்களின் நலன்கள் மேம்பாட்டுக் காக உண்மையான எந்தத் திட்டங்களுமின்றி இது போன்று மதவெறியூட்டி அவர்களைப் பலிவாங்கு கின்றனர்.

மேற்சொன்ன கூட்டம், மசூதி கட்டப்பட்டுள்ள இடம் இந்துக்களுக்கானது என வழக்கு மன்றங்களில் வழக்குத் தொடர்ந்தது. அதன் தொடர்ச்சியாக இராமன் பிறந்த இடம் என்பது மக்கள் நம்பிக்கை எனச் சொல்லி இராமர் கோவில் கட்டுவோம் என்று நச்சுப் பரப்புரை செய்து வந்தனர். இசுலாமியர்களும் வரலாறு அடிப்படையி லும் மசூதி கட்டப்பட்ட காலம் தொட்டு தங்கள் கட்டுப் பாட்டில் உள்ள இடம் என வாதிட்டு அந்த நிலத்தின் மீதான உரிமையைத் தக்க வைத்துக் கொள்வதற்கு எதிர் வழக்குகள் தொடுத்தனர். இவ்வழக்குகள் நிலுவை யிலிருந்ததின் ஊடே திடும் என, 1949-இல் சங் பரிவாரக் கூட்டம் இராமன் பொம்மையை மசூதியின் மய்யப் பகுதியில் வைத்துவிட்டது. இருப்பினும் அவர்கள் மசூதிக்குள் அனுமதிக்கப்படவில்லை. ஆனால் மசூதியின் வெளிப்பகுதியில் இராமன் வழிபாடு செய்து கொள்ள லாம் என வழக்கு மன்றங்களால் அனுமதிக்கப்பட்டது. இதற்கு எதிர்ப்பு எழுந்ததால் அதன் அடிப்படையில் அந்த வழிபாட்டு இடத்திற்குள் நுழையக்கூடாது பூட்டுப் போட்டு மூடி வைக்கப்பட்டது.

அடுத்து நாட்டின் பல அரசியல் மாற்றங்களினால் முதன்மை அமைச்சர் இந்திராகாந்தி 1984 கொலை செய்யப்பட்டார். அவரை அடுத்து முதன்மை அமைச்ச ரான இராசிவ் காந்தி திடீரென 1986-இல் இராமன் கோவில் வழிபாட்டைத் தொடரும் வகையில் பூட்டப் பட்டிருந்ததை திறந்துவிட அனுமதித்தார்.

இந்த நிகழ்வை அடுத்து, பாரதிய சனதாக் கட்சி இதை, கையில் எடுத்துக்கொண்டு “இராமராஜ்யம் அமைப்போம்!” என இராஜ் யாத்திரையை, அதன் தலைவர் அத்வானி, பிற தலைவர்கள், இவர்களின் கூட்டாளிகளான பல இந்துமத அமைப்புகளைத் திரட்டிக் கொண்டு அயோத்தி நோக்கி மேற்கொண்டு, நாடு முழுதும் கலவரமான, அமைதியற்ற சூழலை ஏற்படுத்தும் வகை யில் சட்டம் ஒழுங்கை நிலைகுலையச் செய்தனர்.

நாடு முழுதுமிருந்து இந்த மக்களுக்கு இந்துமத வெறியூட்டி அவர்களை வன்முறைக் கும்பலாக்கினர். இராமன் கோவில் இடிக்கப்பட்டு அந்த இடத்தில் மசூதி கட்டப்பட்டதாகவும், அதைத் தகர்த்துவிட்டு அங்கேயே இராமன் கோவில் கட்டுவோம் என்ற நச்சு உணர்வு அங்கு திரளாகக் கூட்டப்பட்டிருந்த வெறியூட்டப்பட்ட மக்களுக்கு ஊட்டப்பட்டது. அந்த வெறிபிடித்த கும்பல்-காவிக் கயவர் கூட்டம் எதிர்பார்த்தபடி, 450 ஆண்டு களுக்கும் மேலாக அங்கிருந்த பாபர் மசூதியைத் தகர்த்துத் தரைமட்டமாக்கினர். அதுதான் உலக வரலாற்றின்

கருப்பு நாளான 6.12.1992. சட்டத்தின் ஆட்சி தவிடு பொடியானது.

பல்லாயிரக்கணக்கான ஒன்றிய அரசின் பாதுகாப்புப் படையினர், மாநில அரசின் ஆயிரக்கணக்கான காவலர்கள் இன்னும் பல்வகையான பாதுகாப்புத் துறைகளின் சீருடைக் காவல் புரிந்தவர்கள் ஆகியோர் மவுனம் காத்துப் பார்வையாளர்களாக இருக்க- உலகம், இந்திய ஒன்றிய அரசு மற்றும் மாநில அரசு ஆகியவை எவ்விதப் பதைபதைப்பும் கொள்ளாமல் இருந்த நிலையில், 450 ஆண்டுகளுக்கும் மேலாக இருந்து வந்த பாபர் மசூதிக் கட்டடம் இந்த இந்துத்துவப் பார்ப்பனக் காவிக் கும்பல் சாதாரண மக்களையும் மதவெறியூட்டி பல்வகைக் கொலைக் கருவிகளான கம்பிகளையும், கடப்பாறைகளையும், சம்மட்டிகளையும் அவர்கள் கைகளில் எடுக்க வைத்து, பட்டப்பகலில் இடித்து உடைத்து நொறுக்கப்பட்டுத் தரைமட்டமாக்கப்பட்டது. இதற்கான எதிர்வினையைக் காரணம் காட்டி, இவ்வளவு கொடுமைக்கும் தொடர்ச்சியாக நாடெங்கிலும் பயங்கரவாதம் கட்டவிழ்த்து விடப்பட்டு ஆயிரத்திற்கும் மேலான இசுலாமிய மனித உயிர்கள் பலியிடப்பட்டன. இவையெல்லாம் உலக வரலாற்றின் இந்திய ஒன்றிய வரலாற்றின் கொடும் கருப்பு வடுக்கள்; மானுடத்தின் மேல் புண்ணான, அழிக்க முடியாத கரும்புள்ளிகள்.

இதில் கொடுமை என்னவென்றால், இந்தக் காவிக் கயமைக் கும்பலின் இந்துத்துவ மதவெறி பொது மக்களையும் கொலைகாரர்களாக ஆக்கிவிட்டதே! இதே நிலைதான் குசராத்தில் கோத்திரா ரயில் எரிப்புக்கு எதிர்விளைவு எனக் கூறி, இதே இந்துத்துவ இந்துக் கொலை வெறிகொண்ட பார்ப்பனச் சங் பரிவாரக் கும்பலால் பொதுமக்களும், பெண்களும் வெறியர்களாகத் தூண்டப்பட்ட ஆயிரத்திற்கும் மேற்பட்ட இசுலாமியப் பெண்கள், கருவுற்ற பெண்மணிகள், சிறுவர்கள், கருப்பையிலிருந்த கருக்கள் என எல்லோரையும் படுகொலை செய்து, கொலைகாரக் கொடுங்கோலர்களாக மாற்றப்பட்டனர்.

மதத்தின் பெயரால், மத நம்பிக்கை என்பதின் பெயரால் மதவெறியூட்டப்பட்டு-வன்முறை கட்டவிழ்த்து விடப்பட்டு வரலாற்றுச் சின்னமான மசூதி இடிக்கப்பட்டு, பல ஆயிரம் இசுலாமியர்கள் படுகொலை செய்யப்பட்டு இந்தக் காவிக் கொலைகாரக் கும்பல் பெற்ற பயன் என்ன? வரலாற்றில் மாறாத வடுக்களை ஏற்படுத்தியதைத் தவிர.

ஆனால் அரும்பெரும் மக்கள் வளம் கொண்ட **இந்த இந்து மக்களை 80-85 விழுக்காட்டளவில் கொண்ட இந்திய ஒன்றியம், குறிப்பாக இந்துத்துவக் கொலைகாரக் கும்பலின் பிடியிலுள்ள மாநிலங்களான உ.பி., ம.பி., பீகார், இராசசுத்தான்-ஏன் குசராத்தும் மக்கள் மேம்பாட்டுப் பல்வேறு குறியீட்டளவில், உலகிலேயே ஆப்பிரிக்க நாடுகள் தவிர்த்து கடைநிலையிலேதான் இருக்கின்றன.**

**ஆனால் பெரியாரின் மக்கள் பற்றுக்கொண்ட சமூக நீதிக் கோட்பாடு கடைப்பிடிக்கப்படுவதால், தமிழ்நாட்டிலுள்ள 80-85 விழுக்காட்டு இந்துக்கள் எனப்படும் மக்கள் வாழ்க்கைத் தரத்தில் அய்ரோப்பிய வளர்ந்த நாடுகளுக்கிணையான மக்கள் மேம்பாட்டுக் குறியீட்டு அளவுகளை எட்டிப்பிடித்துக் கல்வி, மருத்துவம், வேலை வாய்ப்பு போன்றவற்றில் ஒன்றிய மாநிலங்களிடையே ஒப்பீட்டளவில் உயர் நிலையில் உள்ளனர். இது மதத்தின் பேரால் கிட்டியவை அல்ல. மாறாக, மாறா மக்கள் பற்றும், மானுட மேன்மையையும் போற்றி அதற்காக வாழ்நாள் முழுதும் அர்ப்பணிப்புடனான கோட்பாட்டுடனும், கொள்கையுடனும் கூடிய பெரியார் அவர்களின் தொடர் செயல்பாடுகளின் விளைவாகத்தான். பெரியார் மதத்தை, கடவுளைச் சாடினார். உண்மைதான் - வெகுமக்களான ஒடுக்கப்பட்ட இந்துக்களின் வாழ்வு மேம்பட. ஆனால் இந்துத்துவப் பார்ப்பனக் காவிக் கும்பல் மதவெறியூட்டி நாட்டையும் அவர்களின் இந்துமத மக்களையும் பிளவுபடுத்தி, இழிவுபடுத்தி பெரும் திரளான ஒடுக்கப்பட்ட இந்து மக்களைக் குறிப்பாக இந்திய ஒன்றியத்தின் வடமாநிலங்களில் தாழ் இழிநிலையிலான வறுமைப் பிணியின் பிடியிலேயே வைத்துக் கொள்வதையே குறிக்கோளாகக் கொண்டு செயல்படுகின்றனர்.**

இப்போது கட்டுரையின் தலைப்பிற்குள் வருவோம். அதாவது இந்திய ஒன்றிய நாட்டின் வெகுமக்களின் கடைசிப் புகலிடமாக கருதப்படக் கூடிய உச்ச வழக்கு மன்றத்தின் அய்ந்து நடுவர்கள் அடங்கிய அரசமைப்புச் சட்ட ஆயம் அயோத்தி-பாபர் மசூதி வழக்கில் வழங்கிய தீர்ப்பை ஆய்வோம் (இதற்கு முன்னதாக இந்த வழக்கில் அலகாபாத் உயர்வழக்கு மன்றம் அளித்த தீர்ப்பைப் பேசுபொருளாகக் கொள்ளவில்லை).

தீர்ப்பு : (அ.அ) : விவாதத்திற்கு உள்ளாயிருந்த பாபர் மசூதி இருந்த 2.77 ஏக்கர் நிலம் இராமன் கோவில் கட்டப்படுவதற்காக இந்திய ஒன்றிய அரசே ஒரு குழு அமைத்து அதன் மேற்பார்வையில் அந்தப் பணியைத் தொடரும் வகையில் அதனிடம் கையளித்திடப்பட வேண்டும்.

(ஆ.ஆ) : இசுலாமியர்கள் வேறொரு இடத்தில் மசூதி கட்டிக் கொள்வதற்கேற்ப அயோத்தியில் 5 ஏக்கர் நிலம் அளிக்கப்பட வேண்டும். இந்த முடிவுக்கு வருவதற்கு சொல்லப்படும் பொது நிலைபாடுகள் :

அ) வரலாற்றுத் தவறுகளைத் திருத்தியமைத்திட வழக்கு மன்றம் முனையாது.

ஆ) நம்பிக்கை என்ற ஒன்றின் அடிப்படையில் முடிவு எட்டப்படாது.

இ) நிலம் தொடர்பான ஆவணங்களின் அடிப்படை யாக இருக்கும்.

ஈ) சட்டத்தின் ஆட்சியே அடிப்படையாக அமையும்.

ஆனால் எந்தக் கருதுகோள்களின் அடிப்படையில் இம்முடிவுகள் எட்டப்பட்டது என, வழக்கு மன்றம் முன் வைத்தவை.

(அஅ) : வழக்கிலுள்ள நில எல்லைக்குள் இராமன் வழிபாடுகள் நடந்து வந்துள்ளன. மசூதிக்குள் வைக்கப் பட்ட இராமன் பொம்மை அகற்றப்படாமல் அங்கேயே இருந்துள்ளது. நெடுங்காலமாக இராமன் தாய் அவனை அந்த இடத்தில்தான் பெற்றெடுத்தாள் என்ற மக்கள் நம்பிக்கை, அதே நேரத்தில் இராமன் கோவில் மசூதிக் குக் கீழ் இருந்தது என்பதற்கு எந்த வரலாற்றுச் சான்றும் இல்லை. இராமன் கோவில் இருந்ததை இடித்துவிட்டு, அதன்மீது மசூதி கட்டப்பட்டதாக சொல்ல எந்த ஆதாரமும் அடிப்படையும் இல்லை. இந்நிலத்திற்கு உரிமை கோரு வதற்கு இந்துக்களிடம் எந்த ஆவணங்களோ, தரவு களோ இல்லை.

வழக்கு மன்றமே இந்த நிலத்திற்கு இந்துகள் உரிமை கோருவதற்கு எவ்வித வரலாற்றுச் சான்றுகள், நிலம் தொடர்பான ஆவணங்கள், தரவுகள் என உறுதியான (Solid) சான்றுகள் ஏதுமில்லை என்ற தெளிவான முடிவுக்கு வந்துள்ளது.

இருப்பினும், இராமனின் தாய் அவனை அந்த இடத்தில்தான் பெற்றெடுத்தாள் என்று நெடுங்காலமாக நிலவும் மக்களின் நம்பிக்கை ஒன்றுதான் இந்தத் தீர்ப்பை வழங்குவதற்கு அடிப்படையாக அமைந்துள்ள தாகத் தெரிகின்றது. அதே நேரத்தில் மேலே சொல்லப் பட்ட இரு காரணங்களும் நிலத்திற்கு உரிமை கோரத் தக்கவையாகக் கொள்ள முடியாது. இராமன் பொம்மை மசூதிக்குள் வைக்கப்பட்டுள்ளது என்பதைத் தவிர, அதை அணுக எவரும் மசூதிக்குள் அனுமதிக்கப்பட வில்லை என்பதால் அதை ஒரு காரணமாகக் கொள்ள முடியாது. அதேபோன்று மசூதிக்கு வெளியில் இராமன் வழிபாடு அனுமதிக்கப்பட்டதாலேயே மொத்த நிலப் பகுதிக்கும் உரிமை கோர அதுவும் அடிப்படையாகாது. எனவே நில உடைமை உரிமை வழங்கி அளிக்கப்பட் டுள்ள இந்தத் தீர்ப்பு சட்டத்தின் ஆட்சியின் அடிப்படை யில் தரப்படவில்லை என்பது தெளிவு. அவ்வாறு சட்டப் படியாக அளிக்கப்படாத தீர்ப்பு வெறும் வெற்று நம்பிக் கையில் கட்டுரையின் தொடக்கத்தில் விளக்கப்பட்டுள் ளது. அடிப்படையில் வழங்கப்பட்டுள்ள இத்தீர்ப்பு அரசமைப்புச் சட்டத்திற்கு முற்றிலும் அடிப்படையில் முரணானது, எதிரானது என்ற முடிவுக்குத்தான் வர வேண்டியுள்ளது. இது உச்ச வழக்கு மன்றத்தால் வர லாற்றில் இழைக்கப்பட்ட பெரும் பிழையாகத்தான் அமைந்துவிட்டது. இந்த நீதி வரலாற்றுப் பிழையை அனுமதிப்பது கூடாது என்பது இது ஒரு கொடும் முன்காட்டாக அமைந்துவிடக்கூடும் என்பதுடன், இந்த வரலாற்றுப் பிழைகள் தொடருவதற்கு வழிகோலி வரும். எனவே இந்தத் தீர்ப்புக்குச் சீராய்வு வேண்டி வழக்குத் தொடர்ந்து வரலாற்று பிழை நீக்கப்பட வேண்டும். அவ்வாறு நிகழவில்லை எனில், வாய்ப் பிருப்பின் உச்ச வழக்கு மன்றமே தாமே முன்வந்து தீர்ப்பைத் திருத்தி வரலாற்று பிழை நீக்கிடல் வேண்டும். அல்லது இன்னும் அதிக நடுவர்களைக் கொண்ட அரசமைப்புச் சட்ட ஆயத்திற்கு மேல்முறையீடு செய்து இந்தத் தீர்ப்பு செல்லத்தக்கதல்ல என்றாக வேண்டும். இனி அயோத்தியில் 450 ஆண்டுகளுக்கும் மேலாக பாபர் மசூதி இருந்து வந்த 2.77 ஏக்கர் இடத்தை இசுலாமியர்களிடம் கையளிக்கப்படாததற்கு உச்ச வழக்காடு மன்றம் தம் தீர்ப்பில் சொல்லியுள்ள காரணங்களைக் காணலாம்.

(ஆஆ):இந்த நிலத்திற்கு உரிமை கோர ஆவணச் சான்றுகள் ஏதும் தரப்படவில்லை : மசூதியும், மசூதி உள்ள இடமும் எந்த விதி இடையூறுமின்றி (இராமன் பொம்மை 1959-இல் மசூதிக்குள் வைக்கப்பட்டது அகற் றப்படவே இல்லை. மேலும் மசூதியின் சுற்றுவெளி யில் இராமனுக்கு வழிபாடு நடத்தப்பட்டு வந்துள்ளது) முழுமையாக இசுலாமியரின் அனுபவ உடைமை, உரிமை உடையதாக இல்லை. இதில் இசுலாமியரின் உரிமை குறித்துப் பேசும் போது பல்வேறு செய்திகள் சொல்லப்படுகிறது. மசூதி 1528-லிருந்து 450 ஆண்டு களாக இருந்து வருகின்றது.

மசூதியில் 1859-லிருந்து தொடர்ந்து இசுலாமிய வழிபாடு நடந்து வருகிறது. மசூதி இருந்த இடத்தின் கீழ் இந்து வழிபாடு தொடர்பான கோவிலோ, பொருள் களோ கிடைக்கப் பெறவில்லை என இந்திய ஒன்றியத் தொல்லியல் துறை தெளிவுபடுத்தியுள்ளது. மசூதி, அந்த இடத்தில் இந்த கோவில் இருந்து அதை இடித்துத் தள்ளி விட்டு, அதன்மீது கட்டப்படவில்லை என்று தீர்ப்பில் தெளிவுபடுத்தப்பட்டுள்ளது.

இதற்கு மேலாகவும் தீர்ப்பு சொல்வது : மசூதிக்குள் இராமன் பொம்மையை வைத்தது சட்டத்திற்கெதிரான அடாவடிச் செயல். மசூதிக்கு வெளிப்புறத்தில் இருந்த இராமன் கோவில், மசூதி தொடர்பான வழக்குகள் வழக்கு மன்றத்தின் நிலுவையில் இருந்த போது பூட்டி

வைக்கப்பட்டிருந்ததை திறந்து விடப்பட்டு அங்கு வழிபாடு அனுமதிக்கப்பட்டது சட்டப்படி தப்பு என்கிறது. இதற்கெல்லாம் மேலாக வழக்கு மன்றங்களில் கேள்விக்குள்ளான மசூதி, நிலம் தொடர்பான வழக்குகள் நிலுவையில் இருந்த போது சட்டத்திற்கு எதிராகச் சட்டத்தைத் தம் கையில் எடுத்துக்கொண்டு வன்முறையாக மசூதி 6.12.1992 அன்று மக்களால் தகர்க்கப்பட்டு இடிக்கப்பட்டது கடும் கண்டனத்திற்குரியது என்றும் தீர்ப்பு பதிவு செய்கிறது.

இங்கு வியப்பிற்குரியது என்னவெனில், மசூதிக்குள் அத்துமீறி நுழைந்து இராமன் பொம்மை வைக்கப் பட்டது, மசூதி தகர்க்கப்பட்டு தரைமட்டமானதைக் கண்டித்த உச்ச வழக்கு மன்றம் தம் தீர்ப்பில் இந்த வன்முறை செயல்களில் ஈடுபட்டவர்கள் மீது கடுமையாகத் தண்டிக்கப்பட வேண்டும் என்று குறிப்பிட்டிருக்க வேண்டிய பொறுப்பிலிருந்து எப்படி விலக்கிக் கொண்டு விட்டது என்பது மிகவும் நெருடலாகக் கருதப்படுகின்றது.

இவை தொடர்பான வழக்குகள் தனியே வழக்கு மன்றங்களில் நிலுவையில் இருந்து வருகின்றது. இருப்பினும் வன்முறையில் ஈடுபட்டவர்களைப் போகிற போக்கில் குறிப்பிட்டுவிட்டுச் செல்வது எப்படி நியாயமாகும்? அந்த வழக்குகள் மீது தொடர்புடைய வழக்கு மன்றங்கள் நடவடிக்கை எடுத்து, குற்றவாளிகள் என்று நிறுவப்பட்டவர்களுக்குத் தண்டனை விதிப்பார்கள் என்பது இப்போது உச்ச வழக்கு மன்றம் தன் தீர்ப்பில் தன்னால் சொல்லப்பட்ட பல செய்திகளுக்குத் தன் முரண்பாட்டை வெளிப்படுத்திவிட்டு அவற்றிற்கு எதிரான நிலைபாட்டைக் கடைப்பிடித்து முடிவு எடுத்துள்ளதை விவரிக்க வேண்டும்.

1. வரலாற்றுப் பிழைகளை நேர்படுத்துதல் வாக்கு மன்றங்களின் பொறுப்பல்ல என்கிறது. ஆனால் இந்த மசூதி வழக்கில் வரலாற்றுப் பிழை ஏதும் நடத்துவிட்டதாக சொல்லப்படவே இல்லை. உண்மையில் வரலாற்றின்படி பாபர் மசூதி முறையாகத்தான் கட்டப்பட்டிருந்தது எனக் காணமுடிகின்றது. ஆனால் அதன்படி பாபர் மசூதி இருந்த இடத்தை இசுலாமியர்களுக்கு உரிமையாக வழங்கியிருக்க வேண்டும். மாறாக உச்ச வழக்கு மன்ற வரலாற்றில் பிழை இழைத்து அவர்களுக்கு அதை வழங்கிடாமல் ஆணையிட்டுவிட்டது. மாறாக உரிமையற்றவர்களுக்கு அதை அளித்து பெரும் பிழையிழைத்துவிட நேர்ந்துவிட்டது.

2. அடுத்து உச்சவழக்கு மன்றம் வெறும் நம்பிக்கைகளை அடிப்படையாகக் கொண்டு முடிவெடுக்காது என்றும், சட்டத்தின் ஆட்சியை மட்டும் நிலைநிறுத்தும் படியான முடிவை எடுக்கும் என்றுரைத்துவிட்டு, மேற்சொன்ன தன் முரண்பாட்டு நிலையையே மேற்கொண்டு சமயப் பற்று, நம்பிக்கைக்கு அடிப்படையில்லாத வெற்று நம்பிக்கையான, முற்றிலும் கற்பனையான கதை மாந்தனான இராமனை அவன் தாய் மசூதியின் மய்யப் பகுதியில் பெற்றெடுத்தார் என்ற அடிப்படையிலேயே அந்த இடத்தில் இராமன் கோவில் கட்டிட இந்திய ஒன்றிய அரசைக் கேட்டுக் கொண்டுள்ளது இந்தத் தீர்ப்பு.

3. சட்டத்தின் ஆட்சி நிறுவப்படும் என்ற நிலைப்பாட்டைச் சொல்லிவிட்டு, அதன் அடிப்படையாக இருக்க வேண்டிய சில வரலாற்றுச் சான்று, இடத்திற்கான அனுபவ உரிமையைப் பெற்றிருந்த இசுலாமியர்களுக்கு அந்த நிலத்தை அளித்திட ஆணையிடாமல் எவ்விதச் சான்றும் ஆவண ஆதாரமற்ற எதிர்வழக்காளிக்குக் கொடுத்துவிட்டது இத்தீர்ப்பு.

4. இந்துத்துவப் பார்ப்பனியக் காவிக் கும்பல் இந்த நிலத்திற்கு உரிமை கோருவதற்குக் காரணமாகச் சொல்லப்பட்டவை, இராமன் இந்த இடத்தில் பிறந்தான்; இந்த இடத்தில்தான் இராமன் கோவில் இருந்தது; அந்த இராமன் கோவில் இடிக்கப்பட்டு அதன் மீதுதான் அந்த இடத்திலேயே மசூதி எழுப்பப்பட்டுள்ளது; இராமன் பிறப்புப் பற்றி பேசிவிட்டோம்; ஆனால், இராமன் கோவில் இருந்தது என்பதற்கு எந்த ஆதாரமும் இல்லை என்று தொல்லியல் துறையே ஆய்வு தெரிவித்துவிட்டது. பின் எங்கே இராமன் கோவில் இடிப்பு என்ற கேள்வி எழும்? அதற்குப் பின்னும் எப்படி இடிக்கப்பட்ட கோவில் மீதுதான் மசூதி எழுப்பப்பட்டது என்ற கேள்வியே எழாது அல்லவா என முழுமையாகப் பொய்யுரைத்து பொய்யுரிமை கோரிய இந்துக்களின் வழக்கு தானே தகர்ந்துவிடும் அல்லவா. எனவே மசூதி இருந்த இடம் இசுலாமியர்களுக்கே வழங்கப்பட்டிருக்க வேண்டும்.

இவற்றிற்கெல்லாம் மேலாக கேள்விக்குள்ளான மசூதியுள்ள இடம் குறித்த வழக்குகள் வழக்கு மன்றத்தில் நிலுவையில் உள்ள நிலையில் சட்டத்தின் ஆட்சியின் படியான தீர்ப்புக்காகக் காத்திராமல், இந்துத்துவப் பார்ப்பனக் கும்பல் மக்களுக்கு மதவெறியூட்டி சட்டத்தைத் தம் கையில் எடுத்துக் கொண்டு பாபர் மசூதியைத் தகர்த்துத் தரைமட்டமாக்கிவிட்டனர். இதற்கு இசுலாமியர்கள் எதிர்வினையாற்றியதைக் காரணம் காட்டி, உத்திரப்பிரதேசத்திலும் நாட்டின் பிறபகுதிகளிலும் இந்து பயங்கரவாதத்தைக் கட்டவிழ்த்துவிட்டு ஆயிரத்துக்கும் அதிகமான இசுலாமிய மக்களைப் படுகொலை செய்துவிட்டனர். இப்படிச் சட்டத்தை தம் கையில் எடுத்துக்கொண்டு சட்டத்திற்கு எதிரான செயல்களையும், படுகொலைகளையும் செய்த கொலைக்காரக் கும்பலுக்கும் அவர்களுக்கு ஊக்கமளித்து வன்முறையைத் தூண்டிய தலைவர்களைக்

கொண்ட அமைப்புகளின் கைகளில் இந்நிலம் கையளிக் கப்பட்டுள்ளது.

மொத்தத்தில் இத்தீர்ப்பின் பின்னணியில் உள்ளவை :

இந்த நிலம் தொடர்பான சிக்கலுக்கான முடிவு, தீர்வு மேலும் தொடர்ச்சியான அமைதியற்ற சூழலை ஏற்படுத்திவிடக் கூடாத வகையில் தீர்ப்பு அமைத்திட வேண்டுமென அனைத்துத் தரப்பு மக்களாலும் தலை வர்களாலும் பொதுவெளியில் வேண்டப்பட்டது என் பதை அடிப்படையாகக் கொண்டு தீர்ப்பு வெளியிடப்பட் டுள்ளது என்று எண்ணத் தோன்றுகின்றது.

எந்தவித ஆதாரமும் இன்றி வெறும் பொய்ப்புரை களையே பரப்பி, எந்த வரன்முறைக்கும் உட்படாத வகையில் இராமன் பொம்மையைத் திருட்டுத்தனமாக பாபர் மசூதிக்குள் வைப்பது, அதைக் காரணம் காட்டி அதன் வெளிப்புறத்தில் இராமனை வழிபடுதல் என்று நாடகம் நிகழ்ச்சி. அதன் தொடர்ச்சியாய் வழக்குகள் வழக்கு மன்றத்தில் நிலுவையில் இருந்து வருவ தையும் பொருட்படுத்தாமல் வன்மமான திட்டம் தீட்டி இந்திய ஒன்றிய அரசமைப்புச் சட்டம் போற்றிக் காத்து வருகிற மதச்சார்பற்ற மதநல்லிணக்கம் பேணப்பட்டு வரும் நாட்டில் அவற்றையெல்லாம் நொறுக்கித் தவிடு பொடியாக்குவது போல் எந்த அடிப்படை அறநெறிகளுக் கும் சட்டப்படியான நடவடிக்கைகள் எதற்கும் கட்டுப் படாமல் தான்தோன்றித்தனமாக சட்டத்தைத் தம் கையில் எடுத்துக் கொண்டு மதவெறியை ஊட்டி சாதாரண பொது மக்களையும் வன்முறையில் ஈடுபடச் செய்து பட்டப்பகலில் 450 ஆண்டுகளுக்கும் மேலாக இருந்து வந்த இசுலாமிய சமயத்தாரின் வழிபாட்டு மசூதியை இடித்து தரைமட்டமாக்கி நாட்டையே தலைகுனியச் செய்து அச்சத்தில் உறைய வைத்திவிட்டனர்.

இந்த வன்முறையாளர்கள், தீவிரவாதிகளாகக் கருதப்படும் நக்சலைட், மாவோயியக்கத்தார் என எந்த குழுவினரானாலும் அக்குழுவினர்கள்தான் சட்டத் தைக் கையில் எடுத்துக் கொண்டு செயல்பட்டு தங்களை முன்னிறுத்தி விளைவுகளை எதிர்கொள்பவர்களைக் காட்டிலும் (சட்டமீறலை மேற்கொள்ளும் இவர்கள் சட்டத்தின்படி தண்டனைக்குரியவர்கள்) அப்பாவிப் பொது மக்களையும் மதவெறியூட்டி வன்முறையாளர் களாக மாற்றிச் சட்டத்தை நொறுக்கவும், அவர்களை யொத்த அப்பாவி மக்களைக் கொலைப் பலிவாங்கவும் செய்பவர்களாக உள்ளவர்கள் ஆவர். இவர்கள் மக்களி டையே அமைதியை விரும்பாதவர்கள். எப்போதும் அமைதி குலைந்த நிலையிலேயே அமெரிக்க ஒன்றியம் உலக நாடுகளிலெல்லாம் அமைதிக் குலைவை ஏற்படுத்திப் பதட்டத்தில் வைத்து அவர்களை எப்போதும் சுரண்ட லுக்கு ஆளாக்கி வருவது போன்று - நாட்டை வைத்து தங்கள் நலன் மட்டும் பேணுபவர்கள் ஆவர். எனவே இந்தத் தீர்ப்பு அவர்களை வன்முறை வழிகளிலிருந்து மீட்காது என்பது போல்தான் இப்போதும் இவர்கள் மதவெறிக் கருத்துகளை விதைத்து வருகின்றனர்.

மாறாக சமயப் பற்று, சமய நம்பிக்கை அடிப்படை யிலின்றி இந்தத் தீர்ப்பு சட்டத்தின் ஆட்சிப்படி அளிக்கப் பட்டு அதனால் ஏற்படும் எதிர்விளைவுகளை எதிர் கொண்டிருந்தால் இந்த மதவெறி வன்முறையாளர்கள் கட்டுக்குள் வைக்கப்பட்டிருந்திருக்கலாம் என நம்பிக்கை கொள்ளலாம். அப்பொழுதுதான் ‘வல்லான் வகுத்ததே வழி’ என்ற விலங்காண்டிக் காலவிதி முறியடிக்கப்படும்.

சமய நம்பிக்கை, சமய நல்லிணக்கச் சூழல் பாழா காதவாறும் சிதையாதவாறும் சமயங்களுக்கப்பாற்பட்டு அனைத்து மக்களிடையேயும் அமைதியைப் போற்றிப் பாதுகாக்கும் தன்மையில்தான் இருந்திடல் வேண்டும் என்ற புரிதலை, இந்திய ஒன்றியச் சமூகம் பெற்றிட வைப்பது அனைவரின் தலையாய கடமை, பொறுப்பு என்று உணர வேண்டும்; உணர்த்த வேண்டும். இதில் வழக்கு மன்றங்களின் பங்கு அளப்பரியது என்பதில் மாற்றுச் சிந்தனை இருக்க வாய்ப்பே இல்லை என்பதை மக்கள் பற்றுள்ள மன்ற நடுவர்கள் உள்ளிட்ட அனைத் துத் தளத்திலுமுள்ளோர் உணர்வர்.

## திருச்சி ஓவியர் சாமி. கங்காதரன் அவர்களின்
## 10ஆம் ஆண்டு நினைவு நாள்



திருச்சி ஓவியர் சாமி. கங்காதரன் அவர்கள் மறைந்து 10ஆம் ஆண்டு நினைவு நாளில் அவரது மகன், மகள், குடும்பத்தி னர் அனைவரும் 1.12.2019 அன்று "சாமி. கங்கா தரன்-சரோஜா "அறக் கட்டளை தொடங்கினார். தலைமை ஆசிரியர் இரா.எட்வின், பெரியார் தொண்டர் தோழர் நற்குணம், தோழர் இராசேந்திரன், திருச்சி மா.பெ.பொ.க. மாவட்டச் செயலாலர் இரா.கலிய பெருமாள், ந.கருணாகரன் ஆகியோர் அறக்கட்டளை மேன்மேலும் வளர வாழ்த்தி பேசினர் ஓவியரின் மகன்கள் ஜவகர், இராஜஇராஜ சோழன், மகள்கள் காந்திமதி, அம்மையார் சரோஜா ஆகியோர் அறக் கட்டளை தொடங்கியதன் மகிழ்வாக சிந்தனையாளன் வளர்ச்சி நிதியாக ரூ.500/- வழங்கினார்.

# பாபர் மசூதி - இராமஜென்ம பூமி வழக்கு

# உச்சநீதிமன்றத்தின் சமரசத் தீர்ப்பு


- க. முகிலன்

கிட்டத்தட்ட எழுபது ஆண்டுகளாக, நீதிமன்றத்தில் நிலுவையில் இருந்து வந்த பாபர் மசூதி - இராமஜென்ம பூமி நில உரிமை குறித்த வழக்கில் உச்சநீதிமன்றத்தின் அய்ந்து நீதிபதிகள் கொண்ட அமர்வு, 9.11.2019 அன்று 1045 பக்கங்கள் கொண்ட தீர்ப்பை வழங்கியது. இந்த வழக்கின் உச்சநீதிமன்ற அமர்வில் தலைமை நீதிபதி ரஞ்சன் கோகாய், நீதிபதிகள் எஸ்.ஏ. பாப்டே, டி.ஒய். சந்திரசூட், அசோக்பூஷன், எஸ். அப்துல் நசீர் ஆகியோர் இருந்தனர். இந்த நிலத்தின் உரிமை கோரி "ஸ்ரீராம் விராஜ்மன்" எனப்படும் ராம் லல்லா (குழந்தை இராமன்), முசுலீம் சன்னி வக்பு வாரியம், நிர்மோகி அகாரா ஆகியோர் வழக்குத் தொடுத்திருந்தனர்.

இந்த வழக்கு 2.77 ஏக்கரின் நிலவுரிமை சார்ந்ததாக மட்டும் இல்லாமல், இந்திய நாட்டில் 85 விழுக்காட்டினராக இருக்கும் இந்து சமூகத்திற்கும், 12 விழுக்காட்டினராக உள்ள முசுலீம் சமூகத்திற்கும் இடையிலான வழக்காகக் கடந்த முப்பது ஆண்டுகளில் உருவாக்கப்பட்டிருந்தது. பாபர் மசூதி-இராமஜென்மபூமி சிக்கலையொட்டி, இந்து-முசுலீம் மோதல்களும், உயிரிழப்புகளும், சொத்துகள் அழிப்பும், குண்டு வெடிப்புகளும் நிகழ்ந்துள்ளன. மத உணர்வை மய்யமாகக் கொண்ட இந்த வழக்கின் தீர்ப்பால் கலவரங்கள் மூளுமோ என்கிற அச்சம் நிலவியது.

தீர்ப்பு எப்படி இருந்தாலும் அதை ஏற்போம் என்று சன்னி வக்பு வாரியமும், பிற முசுலீம் அமைப்புகளும் பல ஆண்டுகளாகக் கூறிவந்தன. 2018 வரையில் சங்கப் பரிவாரங்கள் நீதிமன்றத் தீர்ப்பை ஏற்பதாக வெளிப்படையாகக் கூறவில்லை. "பாபர் மசூதி உள்ள இடத்தில் தான் இராமர் பிறந்தார் என்பது ஒட்டுமொத்த இந்துக்களின் நம்பிக்கை; இது உயர்நீதித் துறையின் அதிகார வரம்புக்கும் அப்பாற்பட்டது" என்று நீண்டகாலமாகக் கூறிவந்தன.

உச்சநீதிமன்ற அமர்வு இந்த வழக்கை 2019 ஆகத்து 6 முதல் அக்டோபர் 16 வரையிலான காலத்தில், தொடர்ந்து 40 நாள்கள் விசாரித்தது; தீர்ப்பு பின்னர் வழங்கப்படும் என அறிவித்தது. தலைமை நீதிபதி ரஞ்சன் கோகாய் நவம்பர் 17 அன்று பதவியிலிருந்து ஓய்வு பெறுவதால், அதற்கு முன் தீர்ப்பு வெளியாகும் என்று எதிர்பார்க்கப்பட்டது. இந்திய ஒன்றிய அரசின் ஆட்சிப் பொறுப்பில் இருப்பதால் நரேந்திர மோடி 27.10.18 அன்று தன்னுடைய 'மனதின் குரல்' வானொலி உரையில், "அயோத்தி வழக்கில் 2010இல் அலகாபாத்



*பாபர் மசூதி இடிக்கப்பட்டபின் அவ்விடத்தில் எழுப்பப்பட்ட தற்காலிக இராமர் கோயில் படம் 1992 திசம்பர் 10*

உயர்நீதிமன்றம் தீர்ப்பளித்த போது அரசியல் கட்சிகள், அமைப்புகள், பொது மக்கள் அமைதி காத்தனர். அது போல இப்போது உச்சநீதிமன்றத் தீர்ப்பின் போதும் அமைதியைப் பேண வேண்டும்" என்று வேண்டுகோள் விடுத்தார். இதேபோன்ற வேண்டுகோளை உத்தரப் பிரதேச மாநிலத்தின் முதல்வர் யோகி ஆதித்தநாத்தும் விடுத்திருந்தார்.

தில்லியில் நடந்த ஆர்.எஸ்.எஸ்.-இன் உயர்மட்டக் கூட்டத்தில் அதன் தலைவர் மோகன் பகவத், அயோத்தி தீர்ப்பு இந்துக்களுக்கு வெற்றியாக அமைந்தாலும் ஊர்வலங்கள், கொண்டாட்டங்கள் நடத்தக் கூடாது என்று கட்டளையிட்டார். நீதிமன்றத் தீர்ப்பை மதித்து ஏற்க வேண்டும் என்று பேசுகிற இவர்கள், 2018-இல் உச்சநீதிமன்றம் சபரிமலையில் அனைத்து அகவைப் பெண்களும் வழிபடலாம் என்று அளித்த தீர்பபை இன்றளவும் எதிர்ப்பது ஏன்?

எப்போதும் இல்லாத தன்மையில், தலைமை நீதிபதி ரஞ்சன் கோகாய் உ.பி. அரசின் உயர் அதிகாரிகளை அழைத்து சட்டம்-ஒழுங்கு ஏற்பாடுகள் குறித்துக் கேட்டறிந்தார். வடஇந்தியாவில் சில நகரங்களில் 144 தடை ஆணை பிறப்பிக்கப்பட்டது. தீர்ப்பின் விளைவாக ஏற்படக்கூடிய அசாதாரணச் சூழ்நிலையை எதிர்கொள்ள காவல்துறையை அணியமாக வைக்குமாறு ஒன்றிய அரசு மாநில அரசுகளுக்கு அறிவுறுத்தியது. நவம்பர் 13 அன்று தீர்ப்பு வெளியாகும் என்று எதிர்பார்க்கப்பட்ட நிலையில், நவம்பர் 9 அன்று தீர்ப்பு வழங்கப்படவுள்ள

தாக நவம்பர் 8 அன்று உச்சநீதிமன்றம் அறிவித்தது. வழக்கத்துக்கு மாறாக விடுமுறை நாளான சனிக்கிழமை அன்று தீர்ப்பு வழங்கப்பட்டது.

இத்தீர்ப்பின் பத்தி 796-இல், ''தனித்தன்மையான முக்கியத்துவம் வாய்ந்த இந்த வழக்கில் தீர்ப்பு வழங்கும் பொறுப்பு இந்த நீதிமன்றத்திடம் ஒப்படைக்கப்பட்டது. மத நம்பிக்கையின் அடிப்படையில் அல்லாமல், சான்றாதாரங்களின் அடிப்படையில்தான் நில உரிமை குறித்து முடிவு செய்யப்பட்டுள்ளது. அசையாச் சொத்துகள் தொடர்பான வழக்குகளில் எந்த அடிப்படையில் முடிவெடுக்க வேண்டும் என்கிற அளவீடுகள் சட்டத்தில் வகுக்கப்பட்டுள்ளன. அந்தக் கோட்பாடுகளின் அடிப்படையில் இந்த வழக்கில் தீர்ப்பு அளிக்கப்பட்டுள்ளது'' என்று கூறப்பட்டுள்ளது. இத்தீர்ப்பு மதநம்பிக்கையின் அடிப்படையில் அளிக்கப்பட்டிருக்கிறதா? சான்றுகளின் அடிப்படையில் வழங்கப்பட்டிருக்கிறதா? என்பது குறித்துப் பின்னர் பார்ப்போம்.

இத்தீர்ப்பின் சுருக்கம் : 1, பாபர் மசூதி இருந்த 2.77 ஏக்கர் நிலம் பகவான் ஸ்ரீராம் விராஜ்மன் என்கிற ராம் லல்லாவுக்கு உரியதாகும். ஒன்றிய அரசு மூன்று மாதங்களுக்குள் ஓர் அறக்கட்டளையை நிறுவி அந்த இடத்தில் இராமர் கோயில் கட்டும் பொறுப்பை அறக்கட்டளையிடம் அளிக்க வேண்டும். அதற்கான விதிமுறைகளை ஒன்றிய அரசு வகுக்க வேண்டும்.

2. முசுலீம்கள் வழிபட்டு வந்த இடத்தை இழந்ததற்கு இழப்பீடாக, அய்ந்து ஏக்கர் நிலத்தை 1993இல் அயோத்தியில் ஒன்றிய அரசு கையகப்படுத்திய 67.7 ஏக்கர் நிலத்திலிருந்தோ அல்லது உ.பி. அரசு அயோத்தியில் முதன்மையான இடத்தில் உள்ள நிலத்திலிருந்தோ முசுலீம்கள் மசூதி கட்டிக்கொள்வதற்காகச் சன்னி வக்பு வாரியத்துக்கு அளிக்க வேண்டும். 2.77 ஏக்கர் நிலத்தை அறக்கட்டளையிடம் ஒப்படைக்கும் போதே 5 ஏக்கர் நிலத்தை முசுலீம்களுக்கு அளிக்க வேண்டும்.

3. நிர்மோகி அகாரா நிலத்தின் மீதான உரிமையைக் கோரவில்லை. பூசை செய்யும் உரிமையையும் இராமர் பிறந்த இடத்தை நிர்வாகம் செய்யும் உரிமையையும் கோரியிருந்தது. அதனால் நிர்மோகி அகாராவின் வழக்குத் தள்ளுபடி செய்யப்படுகிறது. ஆயினும் இராமர் கோயில் கட்டுவதற்காக அமைக்கப்படும் அறக்கட்டளையில் நிர்மோகி அகாராவுக்குப் பொறுப்பு வழங்கலாம்.

இத்தீர்ப்பை நவம்பர் 9 அன்று காலை 10.30 மணிக்கு உச்சநீதிமன்றத்தின் தலைமை நீதிபதி ரஞ்சன் கோகாய் படித்தார். இத்தீர்ப்பு வெளியானதும், பிரதமர் மோடி தனது சுட்டுரையில், ''சட்டத்தின்முன் அனைவரும் சமம் என்பதை அயோத்தி வழக்கில் உச்சநீதிமன்றம் வழங்கிய தீர்ப்பு தெளிவுபடுத்தியுள்ளது. இராமரை



*அயோத்தியில் கரசேவபுரத்தில் இராமர் கோயில் கட்டுவதற்காக தயாராக உள்ள கல்தூண்கள்*

வழிபடுபவராகவோ, இரஹீமை வழிபடுபவரோ, எவராக இருந்தாலும் நாம் அனைவரும் தேச பக்தியை வலுப்படுத்த வேண்டும். அயோத்தி வழக்கின் தீர்ப்பை எவருக்குமான வெற்றியாகவோ அல்லது தோல்வியாகவோ பார்க்கக் கூடாது'' என்ற பதிவு செய்தார். சங் பரிவாரங்கள் ஆரவாரமில்லாத மகிழ்ச்சியுடன் இத்தீர்ப்பை வரவேற்றன. காங்கிரசுக் கட்சியும், பொதுவுடைமைக் கட்சிகளும், தி.மு.க. உள்ளிட்ட அனைத்து மாநிலக் கட்சிகளும் இத்தீர்ப்பை ஏற்பதாகக் கூறியதுடன், மக்கள் அமைதியையும் நல்லிணக்கத்தையும் பேணவேண்டுமென்று கேட்டுக் கொண்டன. தமிழ்நாட்டில் வாக்கு அரசியல் கட்சிகளில் விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் தலைவர் தொல். திருமாவளவன் மட்டும், மதநம்பிக்கையை அடிப்படையாகக் கொண்டு வழங்கப்பட்டுள்ள இத்தீர்ப்பு நாட்டின் மதச்சார்பின்மைக்கும், சிறுபான்மையினரின் உரிமைகளுக்கும் எதிரானது என்று கருத்துரைத்தார். சன்னி வக்பு வாரியமும் பெரும்பாலான முசுலீம் அமைப்புகளும் தங்களுடைய நீண்டகால நிலைப்பாட்டின் படி, இத்தீர்ப்பை ஏற்பதாக அறிவித்தன.

இத்தீர்ப்பு வெளியாவதற்குச் சில நாள்களுக்கு முன்பிருந்தே நாளேடுகள், காட்சி ஊடகங்கள் வாயிலாக, அயோத்தி தீர்ப்பை ஏற்கும் மனநிலை உருவாக்கப்பட்டிருந்தது. ஒன்றிய அரசு இதைத் திட்டமிட்டுச் செய்தது. வாட்ஸ்-அப் போன்றவற்றிலும் தீர்ப்பு குறித்து எவரும் கருத்துப் பதிவிடக் கூடாது என்று எச்சரிக்கப்பட்டது. அதனால் இந்தியா முழுவதும் இத்தீர்ப்பு வெளியான அன்றும், அதன் பின்னரும் அமைதி நிலவியது. இங்கு ஒரு கேள்வி எழுகிறது. **ஒருவேளை, இத்தீர்ப்பு சங் பரிவாரங்களுக்கு எதிராக அமைந்திருப்பின் இதே போன்ற அமைதி நிலவியிருக்குமா? இந்தக் கேள்விக்**

**குக் கடந்த ஆண்டு சபரிமலையில் பெண்கள் வழி படலாம் என்று உச்சநீதிமன்றம் அளித்த தீர்ப்புக்குச் சங் பரிவாரங்கள் எவ்வாறு எதிர்வினையாற்றி என்பதே விடையாக நிற்கிறது.**

பாபர் மசூதி-இராமஜென்ம பூமி சிக்கல் தொடர்பாகக் கடந்த முப்பது ஆண்டுகளுக்கும் மேலாக நிகழ்ந்த மோதல்களையும், அதனால் சமூகத்திலும் அரசியலிலும் பிளவுபடுத்தும் சக்திகள் வளர்ச்சி பெற்றதையும், நாட்டின் எதிர் காலத்தையும், சமூக அமைதியையும், மதநல்லிணக்கத்தையும் கருத்தில் கொண்டே உச்சநீதிமன்றத்தின் அய்ந்து நீதிபதிகளும் ஒரு சமரசத் தீர்ப்பை ஒருமனதாக வழங்கியிருக்கிறார்கள். இத்தன்மையில் இது மதிக்கப்பட வேண்டிய-ஏற்கப்பட வேண்டிய தீர்ப்பு தான்.

ஆயினும் எந்தவொரு தீர்ப்பும் திறனாய்வுக்கு அப்பாற்பட்டது அன்று. திறனாய்வு செய்வதும் மாறுபட்ட கருத்தை வெளியிடுவதும், அதற்கான உரிமை இருப்பதும் சனநாயகத்தின் சாரமாகும். மதச்சார்பின்மை, சட்டத்தின் ஆட்சி, சனநாயகம் ஆகியவற்றின் அடிப்படையில் இத்தீர்ப்பின் போதாமைகளை-குறைகளைச் சுட்டிக்காட்டுவது தேவையானதாக இருக்கிறது.

**பாபர் மசூதி-இராமஜென்ம பூமி வழக்கின் வரலாறு**

இராம பக்தி இயக்கம் 12-ஆம் நூற்றாண்டில் வட இந்தியாவில் பரவத் தொடங்கியது. இராமபக்தர்களில் இராமானந்தர் என்கிற பிரிவினர் இருந்தனர். தீவிர இராம பக்தர்களான இராமானந்தர்கள் 14, 15-ஆம் நூற்றாண்டுகளில் கூட குறிப்பிடத்தக்க அளவில் அயோத்தியில் இல்லை. 18-ஆம் நூற்றாண்டில்தான் பெருமளவில் அயோத்தியில் வாழ்ந்தனர். அதன்பிறகே அயோத்தியில் பல இராமர் கோயில்கள் உருவாயின என்று கே.என். பணிக்கர், ரோமிலாதாப்பர் போன்ற வரலாற்று அறிஞர்கள் கூறுகின்றனர்.

இராமானந்தர்களில் ஒரு பிரிவு நிர்மோகி அகரா எனப்பட்டது. 1700 முதல் அயோத்தியில் பாபர் மசூதி உள்ள இடத்தில்தான் இராமர் பிறந்தார் என்கிற நம்பிக்கை மக்களிடம் பரவியது. பாபர் மசூதி 1528-இல் பாபரின் படைத் தளபதி, மீர்பாகியால் கட்டப்பட்டது. 1855-இல் பாபர் மசூதியில் இந்துக்கள் சிலர் வழிபட முயன்றதால் முசுலீம்களுக்கும் இந்துக்களுக்கும் இடையே மோதல் ஏற்பட்டது. இப்பகை தொடர்ந்தது. அயோத்தி நகரம் அடங்கிய பகுதி அவந்த் எனப்பட்டது. 1857-இல் நவாபிடமிருந்து அவந்த் பகுதியைப் பிரித்தானியர் கைப்பற்றினர். பிரித்தானியர் முசுலீம்-இந்து மோதலைத் தடுக்க பாபர் மசூதி வளாகத்திற்குள் மூன்று கவிகைகள் (Domen) கொண்ட மசூதியின் கட்டடப் பகுதியிலிருந்து நூறு அடி தள்ளி இரும்புக் கம்பிகளாலான தடுப்பு வேலி அமைத்தனர். இரும்புத் தடுப்பை ஒட்டிய மசூதியின் வெளிமுற்றப் பகுதியில் 17 x 21 x 6 அடி நீள, அகல, உயர அளவு கொண்ட ஒரு மேடையை இந்துக்கள் கட்டினர். இது இராம் சபுத்தரா எனப்பட்டது. **சபுத்தரா என்றால் மேடை. இது இராமர் பிறந்த மேடை-இராமஜென்மபூமி எனப்பட்டது. இராம்சபுத்ராவில் வழிபாடு செய்யத் தொடங்கினர்.**

நிர்மோகி அகாரா பிரிவைச் சேர்ந்த தலைமைப் பூசாரி இரகுபர்தாசு என்பவர், இராம் சபுத்ரா மீது கோயில் கட்ட அனுமதி கோரி வழக்குத் தொடுத்தார். பைசாபாத் மாவட்டத் துணை நீதிபதி, இது மோதலுக்கு வழிவகுக்கும் என்று கூறி வழக்கைத் தள்ளுபடி செய்தார். இரகுபர்தாசு மாவட்ட நீதிபதியிடம் மேல்முறையீடு செய்தார். அவரும் 1866 மார்ச்சு மாதம், கோயில் கட்டும் கோரிக்கையை ஏற்க மறுத்தார். இரகுபர்தாசு விடாப்பிடியாக அவந்தின் நீதித்துணை ஆணையரிடம் மேல்முறையீடு செய்தார். அவரும் இதை 1886 நவம்பரில் தள்ளுபடி செய்தார். **அம்மூன்று நீதிபதிகளிடமும், மசூதியின் வெளிமுற்றத்தில் இருந்த இராம்சபுத்ரா தான் இராமர் பிறந்த இடமாகக் குறிக்கப்பட்டுள்ளது என்பது மனங்கொள்ள வேண்டிய ஒன்றாகும். மசூதியின் உள் முற்றத்தின் உரிமையைக் கோரவில்லை.**

**1949 திசம்பர் 22 நள்ளிரவில், நிர்மோகி அகாராவைச் சேர்ந்த 50-60 பேர் கொண்ட கும்பல் பாபர் மசூதியின் நடுவில் உள்ள கவிகையின் கீழ் இராம்லல்லா (குழந்தை இராமர்), சீதை, இலட்சுமணன் சிலைகளைத் திருட்டுத்தனமாக நாட்டினர். முசுலீம்கள் இதைக் கடுமையாக எதிர்த்தனர். சிலைகளை வைத்தவர்கள் மீது காவல்துறை வழக்குப் பதிவு செய்தது. இந்து-முசுலீம் இடையே மோதல் ஏற்படும் சூழ்நிலை ஏற்பட்டதால் பைசதாலாத் நீதிமன்றம் (பைசாபாத் என்பது அண்மையில் அயோத்தி என்று பெயர் மாற்றப்பட்டது) 1949 திசம்பர் 29 அன்று பாபர் மசூதி இடத்தை அரசின் பொறுப்பில் ஒப்படைத்தது. பாபர் மசூதி பிரச்சனைக்குரிய பகுதியாக அறிவிக்கப்பட்டு அதன் நுழைவாயில் பூட்டப்பட்டது.**

1950 சனவரியில் கோபால் சிங் விசாரத், பரமஹம்ச இராமசந்திர தாசு ஆகிய இருவரும் குழந்தை இராமர் சிலைக்குப் பூசை நடத்த அனுமதி கோரி, பைசாபாத் நீதிமன்றத்தில் வழக்குத் தொடுத்தனர். இப்போது நவம்பர் 9 அன்று உச்சநீதிமன்றம் தீர்ப்பளித்த வழக்கின் தொடக்கப் புள்ளி இதுதான். உள்முற்றத்திற்கு (Inner Courtyard) வெளியில் பூசை செய்து கொள்ள நீதிமன்றம் அனுமதி அளித்தது.

1959-இல் நிர்மோகி அகாரா, பாபர் மசூதி நிலத்தின் மீது உரிமை கோரி வழக்குத் தொடுத்தது. அயோத்தியில் வாழ்ந்த முசுலீம்களின் சார்பில் சன்னி வக்பு வாரியம்

1961 திசம்பர் 18 அன்று வழக்குத் தொடுத்தது. அதில் மசூதியில் வைக்கப்பட்ட சிலைகளை அகற்றவும், மசூதி இடம் தங்களுக்குச் சொந்தம் என்று அறிவிக்கவும் கோரியிருந்தது.

1989-இல் ஸ்ரீமான் விராஜ்மன் எனப்படும் இராம் லல்லாவின் நெருங்கிய நண்பர் என்ற பெயரில், விசுவ இந்து பரிசத் அமைப்பைச் சேர்ந்த வழக்குரைஞர் தியோகி நந்தன் அகர்வால் என்பவர், பாபர் மசூதி இடம் இராமர் பிறந்த இடம் என்பதால் அதை அவருக்கே வழங்க வேண்டும் என்று கோரி வழக்குத் தொடுத்தார்.

1989 சூலை 10 அன்று இந்த வழக்குகள் அனைத்தும் அலகாபாத் உயர்நீதிமன்றத்துக்கு மாற்றப்பட்டன. பதினொறு ஆண்டுகள் கழித்து 2010 செப்டம்பர் 30 அன்று அலகாபாத் உயர்நீதிமன்றம் பிரச்சினைக்குரிய 2.77 ஏக்கர் நிலத்தை இராம்லல்லா, சன்னி வக்பு வாரியம், நிர்மோகி அகாரா ஆகிய மூவருக்கும் சமமாகப் பிரித்தளிக்கப்பட வேண்டும் என்று தீர்ப்பளித்தது. இத்தீர்ப்பை எதிர்த்து 14 மேல்முறையீட்டு வழக்குகள் உச்சநீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டன. 2018 செப்டம்பரில் தான் இது விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. 2019 நவம்பர் 9 அன்று அய்ந்து நீதிபதிகள் கொண்ட அமர்வு தீர்ப்பளித்தது.

### இராமஜென்ம பூமி இயக்கமும் பாபர் மசூதி தகர்ப்பும்

பாபர் மசூதி - இராமஜென்ம பூமி தொடர்பாக 1950 முதல் நீதிமன்றத்தில் வழக்கு இருந்த போதிலும், பொதுவெளியில் அது குறித்து எத்தகைய விவாதமும் நடக்கவில்லை. ஆர்.எஸ்.எஸ். தலைவர் எம்.எஸ். கோல்வால்கர், கே.எம். முன்ஷி ஆகியோரின் ஆலோசனையின் பேரில் 1964-இல் ஆர்.எஸ்.எஸ்.-இன் கிளை அமைப்பாக விசுவ இந்து பரிசத் உருவாக்கப்பட்டது. 1984-இல் விசுவ இந்து பரிசத், இராமஜென்ம பூமியை மீட்போம் என்று அறிவித்தது. இதற்காக ''இராமஜென்ம பூமி முக்தி யக்ஞ சமிதி'' என்ற அமைப்பை உருவாக்கியது. அதே ஆண்டில் பஜ்ரங்தள் (குரங்குப்படை) என்கிற இளைஞர் அமைப்பையும் ஏற்படுத்தியது. இராமஜென்ம பூமியை மீட்போம் என்கிற முழக்கத்தை முன்வைத்து பீகாரில் சீதாமர்ஹி (சீதை பிறந்த இடம்) என்ற ஊரிலிருந்து 1983 செப்டம்பர் 23 அன்று இரத யாத்திரையைத் தொடங்கியது. இது அயோத்தியை அடைந்தது. அங்கிருந்து தில்லிக்குச் செல்லவிருந்த நிலையில், 1984 அக்டோபர் 31 இந்திரா காந்தி கொலை செய்யப்பட்டதால் அந்த இரதயாத்திரை கைவிடப்பட்டது. வட இந்தியாவில் பாபர் மசூதி இடத்தில் இராமர் கோயில் கட்ட வேண்டும் என்ற எண்ணத்தையும் முசுலீம்கள் மீதான பகை உணர்வையும் இந்த இரத யாத்திரை இந்துக்களிடம் ஏற்படுத்தியது.



*பாபர் மசூதி தகர்க்கப்பட்டதற்கு துணையாக இருந்த உ.பி.முதல்வர் கல்யாண் சிங்-இடிக்கப்படுவதற்குத் தலைமை தாங்கிய பஜ்ரங்தள் தலைவர் வினய் கட்டியார்*

பிரதமர் இராசிவ் காந்தியின் அறிவுறுத்தலின் பேரில் 1986 பிப்ரவரி 1, அன்று பாபர் மசூதியின் பூட்டு திறக்கப்பட்டு மசூதியின் கவிகையின் கீழ் வைக்கப்பட்ட இராமர் சிலையை வழிபட இந்துக்கள் அனுமதிக்கப்பட்டனர். 1989 அக்டோபர் - நவம்பர் மாதங்களில் இராமர் கோயில் கட்டுவதற்காக இந்தியாவின் எல்லாப் பகுதிகளிலிருந்தும் 'ஸ்ரீராம்' என்று பொறிக்கப்பட்ட செங்கல்கள் ஊர்வலமாக அயோத்தி நோக்கி எடுத்துச் செல்லப்பட்டன. இது ''சிலன்யா பூசை'' எனப்பட்டது. இதற்கிடையில் 1989 ஏப்பிரல் மாதம் இமாச்சலப்பிரதேசத்தில் பலம்பூரில் நடந்த பா.ச.க.வின் செயற்குழுக் கூட்டத்தில், அயோத்தியில் இராமர் கோயில் கட்டுவது என்பது கட்சியின் கொள்கையாக முறைப்படி அறிவிக்கப்பட்டது.

1990 ஆகத்து மாதம் பிரதமர் வி.பி. சிங் இந்திய அரசு வேலைகளில் பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு 27 விழுக்காடு இடஒதுக்கீடு அளித்தார். பா.ச.க. ஆதரவுடன் வி.பி. சிங் ஆட்சியில் இருந்தார். பிற்படுத்தப்பட்டவர்களுக்கு இடஒதுக்கீடு வழங்கியதை வடஇந்தியாவில் மேல்சாதி மாணவர்கள் எதிர்த்துப் போராட்டங்கள் நடத்தினர். இந்தப் பின்னணியில் மேல்சாதி இந்துக்களின் வாக்குகளை ஈர்க்கும் நோக்குடன், எல்.கே. அத்வானி 1990 செப்டம்பரில் சோமநாதபுரத்திலிருந்து அயோத்தி நோக்கி இராம இரத யாத்திரை நடத்தினார். இரத யாத்திரை சென்ற வழிநெடுகிலும் மோதல்கள், தாக்குதல்கள் நடந்தன.

1991 மே மாதம் தமிழ்நாட்டில் தேர்தல் பரப்புரையின் போது இராசிவ் காந்தி கொல்லப்பட்ட அனுதாப அலையால், பி.வி.நரசிம்மராவ் தலைமையில் காங்கிரசுக் கட்சி ஆட்சியில் அமர்ந்தது. சங் பரிவாரங்கள் அயோத்தியில் இராமர் கோயில் கட்டுவதற்கான அணிதிரட்டல்களை மேலும் முடுக்கிவிட்டன. மேலும் மதுராவில்

கிருஷ்ணர் கோயில் அருகில் உள்ள மசூதி, காசியில் விசுவநாதர் கோயிலையொட்டியுள்ள மசூதியையும் இடித்துக் கோயில்களை மீட்போம் என்று சங் பரிவாரங்கள் முழங்கின. எனவே 1991 செப்டம்பரில் ஒன்றிய அரசு ஒரு சட்டம் இயற்றியது. பாபர் மசூதி தவிர 1947 ஆகத்து 15 அன்று நாட்டில் இருந்த வழிபாட்டு இடங்கள் அனைத் தின் நிலை, இச்சட்டத்தால் பாதுகாக்கப்படும். அவற்றின் மீது உரிமைகோரி வழக்குத் தொடர முடியாது.

1992 ஆகத்து 15 அன்று செங்கோட்டையில் உரை யாற்றிய பிரதமர் பி.வி. நரசிம்மராவ், பாபர் மசூதி காக்கப்படும் என்று உறுதி அளித்தார். சங் பரிவாரங்கள் அயோத்தியில் 1992 திசம்பர் 6 அன்று கரசேவை நடக்கும் என்று அறிவித்தன. அப்போது உ.பி.யில் பா.ச.க. ஆட்சியில் முதல்வராக இருந்த கல்யாண் சிங், தேசிய வளர்ச்சி மன்றத்திலும் உச்சநீதிமன்றத்திலும் பாபர் மசூதி பாதுகாக்கப்படும் என்று உறுதி அளித்தார். அயோத் தியில் படைகள் குவிக்கப்பட்டன. ஆயினும் அயோத்தியில் திரண்ட இரண்டு இலக்கம் சங் பரிவாரங்களால் 6.12.1992 அன்று பாபர் மசூதி இடித்துத் தகர்க்கப்பட்டு, தற்காலிக இராமர் கோயிலும் அமைக்கப்பட்டது. பி.வி. நரசிம்ம ராவ் பாபர் மசூதி தகர்ப்பைத் தொலைக்காட்சியில் பார்த்துக் கொண்டிருந்தார். மதச்சார்பின்மையின் கறுப்பு நாள் அது. கரசேவர்கள் பாதுகாப்பாக அவரவர் ஊர்களுக்குத் திரும்பிட, தொடர் வண்டிகளும் பேருந்துகளும் ஏற்பாடு செய்து அளித்தார் பிரதமர் பி.வி. நரசிம்மராவ்.

**பாபர் மசூதியை இடித்ததற்காக இரண்டு வழக்குகள் பதிவு செய்யப்பட்டன. ஒன்று பெயர் தெரியாத எண்ணற்ற கரசேவர்கள் மீது; மற் றொன்று எல்.கே. அத்வானி, முரளி மனோகர் ஜோஷி, உமா பாரதி, வினஸ் கட்டியார் உள்ளிட்ட தலைவர்கள் மீது. இந்த வழக்கு உ.பி. மாநில லக்னோ உயர்நீதிமன்றத்தில் விசாரணையில் இருந்து வருகிறது. 1993 சனவரி 7 அன்று பாபர் மசூதியைச் சுற்றியுள்ள 67.7 ஏக்கர் நிலத்தை ஒன்றிய அரசு தன் பொறுப்பில் எடுத்துக் கொண்டது.**

பாபர் மசூதி தகர்ப்பைக் கண்டித்து மும்பையில் ஊர்வலம் சென்றதற்காக, நூற்றுக்கணக்கில் முசுலீம்கள் கொல்லப்பட்டனர். 2002இல் கோத்ரா இரயில் பெட்டி எரிப்பில், 59 கரசேவர்கள் கொல்லப்பட்டனர். அதையொட்டி குசராத்தில் முசுலீம்கள் மீது நடத்தப்பட்ட தாக்குதல்களில் 2000-க்கு மேற்பட்ட முசுலீம்கள் கொல்லப்பட்டனர். முசுலீம் தீவிரவாதிகள் அயோத்தியில் பாபர் மசூதி இடத்தில் ஏற்படுத்திய இராமர் கோயிலை ஊர்தியில் வெடிகுண்டு களுடன் வந்து தாக்க முயன்றனர்.

உச்சநீதிமன்றத் தீர்ப்பு குறித்து...

வெளிப்படைத்தன்மையுடன் செயல்பட வேண்டும்; எதற்கும் பணியாமல் அஞ்சாமல் தீர்ப்புகளை வழங்க வேண்டும் என்று உச்சநீதிமன்றத்திடம் மக்கள் எதிர் பார்க்கிறார்கள். ஆனால் மிகவும் முதன்மை வாய்ந்த இத்தீர்ப்பில், இத்தீர்ப்பை எழுதிய நீதிபதியின் பெயர் குறிப்பிடப்படவில்லை. தீர்ப்பை எழுதிய நீதிபதியின் பெயரைக் குறிப்பிடும் நடைமுறை ஏன் பின்பற்றப்பட வில்லை. அதேபோல் இத்தீர்ப்புக்கு 116 பக்கங்கள் கொண்ட இணைப்பு அளிக்கப்பட்டுள்ளது. இதை எழுதிய நீதிபதியின் பெயரும் குறிக்கப் பெறவில்லை. இது பல ஊகங்களுக்கு இடமளிக்கிறது.

அலகாபாத் உயர்நீதிமன்றம் 2003-ஆம் ஆண்டு பாபர் மசூதி இடிக்கப்பட்ட இடத்தில் அகழாய்வு நடத்தி அறிக்கை அளிக்குமாறு இந்திய தொல்லியல் துறையைக் கேட்டுக் கொண்டது. தொல்லியல் துறையின் அறிக்கை யைப் புறந்தள்ள முடியாது என்று கூறிய உச்சநீதி மன்றம், தீர்ப்பின் பத்தி 788 உட்பிரிவு 1, 2, 3 ஆகிய வற்றில் தன் கருத்தைப் பதிவு செய்துள்ளது.

''மசூதியின் அடியில் இருந்த பொருள்கள் இசுலாமியக் கூறுகளைக் கொண்டவையாக இல்லை; இந்து மதம் சார்ந்தவையாக உள்ளன என்று தொல்லியல் அறிக் கையில் கூறப்பட்டுள்ள போதிலும், 1. மசூதி கட்டப்படு வதற்கு முன் இருந்த கட்டுமானம் இடிக்கப்பட்டதற்கான காரணம் எது என்று கூறப்படவில்லை, 2. பாபர் மசூதி கட்டுவதற்காகத்தான் அதற்குமுன் இருந்த கட்டடம் இடிக்கப்பட்டதாகக் கூறமுடியாது. 3. மசூதியின் அடியில் கண்டெடுக்கப்பட்ட பொருள்கள் கி.பி.12-ஆம் நூற் றாண்டைச் சேர்ந்தவை; ஆனால் பாபர் மசூதி 16-ஆம் நூற்றாண்டில் கட்டப்பட்டது. எனவே இடைப்பட்ட 400 ஆண்டுகள் காலத்தில் என்ன நடந்தது என்று தெரிய வில்லை'' என்று தீர்ப்பின் பத்தி 788-இல் கூறப்பட்டுள்ளது.

**சங் பரிவாரங்கள் அயோத்தியில் இராமர் பிறந்த இடத்தில் கட்டப்பட்ட இராமர் கோயிலை பாபரின் தளபதி மீர்பாகி இடித்து விட்டுத்தான், மசூதியைக் கட்டினார் என்று கூறிவந்தது உண்மை யல்ல என்பது தெளிவாகிறது.**

தீர்ப்பின் பத்தி 788 உட்பிரிவு 4-இல் வெளிநாட்டுப் பயணிகள் - குறிப்பாக டைபன்தலர், மாண்ட்கோமரி மார்டின் ஆகியோர் 18-ஆம் நூற்றாண்டில் எழுதியுள்ள குறிப்புகளிலிருந்து 1. பிரச்சனைக்குரிய இடத்தில்தான் இராமர் பிறந்தார் என்ற நம்பிக்கை மக்களிடம் இருந்தது. 2. பிரச்சனைக்குரிய இடத்தில் வழிபாடு செய்யும் நடை முறை இருந்தது. பண்டிகை நாள்களில் பக்தர்கள் திரளாகக் கூடினர். 3. அவந்தி பகுதியைப் பிரித்தானியர் கைப் பற்றுவதற்கு முன்பிருந்தே அதாவது 1857-இல் தடுப்புச் சுவர் கட்டப்படுவதற்கு முன்பிருந்தே பிரச்சனைக்குரிய இடத்தில் இந்துக்கள் வழிபட்டு வந்தனர் என்கிற செய்தி

கள் தெரிய வருவதாகத் தீர்ப்பில் கூறப்பட்டுள்ளது. வெளிநாட்டுப் பயணிகள் மக்களிடம் கேட்டறிந்தவற்றை எழுதியிருந்தனர். மக்கள் தங்கள் நம்பிக்கையைத் தெரிவித்ததால் இக்கூற்றுகளை தகுந்த சான்றுகளாக ஏற்கக் கூடாது.

பத்தி 888 உட்பிரிவு 5-இல், ‘‘மசூதி இருந்த போதிலும் இராமர் பிறந்த இடம் என்று தாங்கள் நம்பும் இடத்தை இந்துக்கள் தொழுவது தடுக்கப்படவில்லை, மசூதி இருப்பதை பொருட்படுத்தாமல் இந்துக்கள் 1856-7-க்கு முன்பிருந்தே வழிபட்டு வந்துள்ளனர். முசுலீம்கள் 1856-7-க்கு பாபர் மசூதியில் தொழுகை நடத்தியதற்கான ஆதாரத்தை அளிக்கவில்லை என்பது சான்றுகள் மூலம் தெரிய வருகிறது’’ என்று கூறப்பட்டுள்ளது.

பத்தி 888 உட்பிரிவு 7-இல் ‘‘1857-இல் இரும்புத் தடுப்புச் சுவர் அமைத்த பிறகு ராம்சபுத்ரா கட்டியது இராமர் பிறந்த இடத்தின் மீது வரலாற்று ரீதியாக தங்களுக்கு உள்ள உரிமையை இந்துக்கள் நிலைநாட்டுவதாக இருந்தது. தடுப்புச் சுவர் அமைத்த பிறகும் உள்முற்றத்தில் (கவிகையின் கீழ்)தான் இராமர் பிறந்தார்; அங்கு வழிபட உரிமை வேண்டும் என்று இந்துக்கள் கோரி வந்தனர். சிலர் உள்முற்றத்தில் சிலைகளை வைக்க முயன்றதற்கான ஆதாரங்கள் உள்ளன. ராம் புத்தாவில் வழிபாடு நடத்திய போதிலும் மசூதியின் உள்முற்றத்தையே கருவறையாகக் கருதி கைகூப்பித் தொழுதனர். அதே சமயம் மசூதி முழுவதும் தங்கள் கட்டுப்பாட்டின்கீழ் இருந்தது என்பதற்கான சான்றுகளை முசுலீம்கள் தரவில்லை’’ என்று கூறப்பட்டுள்ளது.

நீதிமன்றத்தில் கூறிய வாக்குமூலங்களையே ஆதாரமாக எடுத்துக் கொண்டுள்ளது. பிரச்சனைக்குரிய இடத்தில்தான் இராமர் பிறந்தார் என்பதற்கு கந்தபுராணம் உள்ளிட்ட மத நூல்களை ஆதாரமாக உச்சநீதிமன்றம் காட்டுகிறது. கந்த புராணத்தில் அயோத்தில் இராமர் பிறந்தார் என்று எழுதப்பட்டுள்ளதே தவிர, குறிப்பிட்ட இந்த இடத்தில்தான் பிறந்தார் என்று சொல்லப்படவில்லை. சீக்கியர்களின் மதகுருவான குருநானக் கி.பி.1510-இல் அயோத்தியில் வழிபட்டார் என்பது ஆதாரமாக எடுத்துக் கொள்ளப்பட்டது. இதன் உண்மைத் தன்மையை ஆராயவில்லை. குருநானக் சிலை வழிபாட்டையும் புனித இடங்களுக்குச் செல்வதையும் எதிர்த்தார். இதேபோன்று மசூதியின் உள்முற்றத்தைக் கருவறையாகக் கருதி தொலைவில் நின்று வழிபட்டனர் என்று சொல்லப்பட்டதை ஏற்பது என்பது இந்துக்களின் மத நம்பிக்கையையே முழுமையான ஆதாரமாகக் கொண்டதாகிறது. இந்துக்களின் மத நம்பிக்கை என்பதைத் தவிர பாபர்



*1992 திசம்பர் 6 அன்று பாபர் மசூதி இடிக்கப்படுவதற்கு முன் கரசேவர்கள்*

மசூதி இடம் இந்துக்களுக்கு உரியது என்பதற்கான திட்டவட்டமான சான்று எதுவும் இத்தீர்ப்பில் காட்டப்படவில்லை.

மசூதியின் வெளிமுற்றத்தில் இராம்சபுத்தராவில் இந்துக்கள் தங்குதடையின்றி வழிபட்டனர் என்பதாலேயே அது அவர்களுக்குச் சொந்தமானதாகிவிடுமா? ‘தி இந்து’ ஆங்கில நாளேட்டின் செய்தியாளர் வி. வெங்கடேசன், மசூதியின் வெளிமுற்றத்தில் வழிபாடு நடத்த விடாமல் தடுத்து இந்துக்களை விரட்டாமல், சகிப்புத் தன்மையுடன் முசுலீம்கள் செய்ததுதான் அவர்கள் செய்த குற்றமா? என்கிற கேள்வியை எழுப்பியிருந்தார்.

மசூதியின் உள் முற்றத்தில்தான் இராமர் பிறந்தார் என்கிற இந்துக்களின் நம்பிக்கையை உறுதியான சான்றுகள் இல்லாமல் ஏற்றுக்கொள்கின்ற உச்சநீதிமன்றம் 1528 முதல் 1857 வரையில் மசூதியில் தொழுகை நடந்ததற்கான சான்றினை முசுலீம்களிடம் கேட்பது என்ன நியாயம்? 300 ஆண்டுகளுக்கு மேலாக ஒரு மசூதியில் தொழுகை நடக்காமல் இருந்திருந்தால் அது பழுதடைந்து குட்டிச்சுவராகி விட்டிருக்காதா? அதேசமயம் 1857 முதல் 1949 வரை மசூதியில் தொழுகை நடந்

திருப்பதாக உச்சநீதிமன்றம் கூறுகிறது. 300 ஆண்டு களாக மசூதியில் தொழுகை நடத்தப்படவில்லை என்பதா லேயே அது முசுலீம்களுக்குச் சொந்தமில்லை என்று ஆகிவிடுமா?

பத்தி 788 உட்பிரிவு 15-இல், ''மசூதியின் உள் முற்றத்தின் மீதான உரிமை தொடர்பாக 1934-இல் இந்துக்களுக்கும் முசுலீம்களுக்கும் மோதல் ஏற்பட்டது. இதில் மசூதியும் கவிகைகளும் (Domes) சேதமடைந்தன. பிரித்தானிய அரசு, அரசின் செலவில் ஒரு முசுலீம் ஒப்பந்தக்காரர் மூலம் பழுது நீக்கம் செய்து கொடுத்தது. அதன்பின் முசுலீம்கள் தொடர்ந்து தொழுகை நடத்தி வந்தனர்'' என்று பதிவு செய்யப்பட்டுள்ளது. இது, மசூதி முசுலீம்களுக்குச் சொந்தம் என்பதைக் காட்டுகிறது.

**பத்தி 788 உட்பிரிவு 18-இல் 1934-இல் மசூதி மீது தாக்குதல் நடத்தியதும், 1949-இல் மசூதி யினுள் சிலைகள் வைக்கப்பட்டதும் 1992-இல் மசூதி அடியோடு தகர்க்கப்பட்டதும் சட்டத்தைக் கடுமையாக மீறிய குற்றச் செயல்களாகும் என்று கூறப்பட்டுள்ளது. ஆனால் இக்குற்றங்களைச் செய்தவர்களிடமே இந்த நிலம் ஒப்படைக்கப் பட்டிருப்பதை என்னவென்று சொல்வது? பாபர் மசூதி இடிக்கப்படாமல் இருந்திருந்தால், உச்ச நீதிமன்றம் அப்படியான தீர்ப்பை வழங்கியிருக்குமா? 1992-இல் மசூதியை இடித்தவர்கள் மீதான வழக்கு லக்னோ நீதிமன்றத்தில் உள்ளது. இதை ஓராண்டிற்குள் விரைந்து முடித்து குற்றவாளிகள் தண்டிக்கப்படுவதே ஓரளவுக்கு நியாயம் சேர்ப்ப தாக இருக்கும். இதைச் செய்ய வேண்டிய பொறுப்பு ஒன்றிய அரசுக்கு இருக்கிறது.**

பத்தி 800-இல் ஒப்பீட்டளவில் முசுலீம்கள் முன் வைத்த ஆதாரங்களைவிட இந்துக்கள் முன்வைத்த ஆதாரங்கள் கூடுதலாக மேம்பட்டவையாக இருப்ப தால், இந்த நிலம் இந்துக்களுக்கு அளிக்கப்படுகிறது என்று கூறப்பட்டுள்ளது. இந்துக்கள் முன்வைத்த ஆதாரங்கள் அனைத்தும் நம்பிக்கை சார்ந்ததாகவே இருந்தன என்பதே உண்மையாகும். அதே பத்தியில், எந்தவொரு வழக்கிலும் முழுமையான தீர்ப்பு வழங்கு வதற்கான அதிகாரம் அரசமைப்புச் சட்டம் பிரிவு 142-இல் வழங்கப்பட்டுள்ளது; இதன் அடிப்படையில் ஒரு மதச்சார்பற்ற நாட்டில் நடக்கக் கூடாத வகையில், பாபர் மசூதியின் மீதான உரிமை பறிக்கப்பட்டதற்கு நியாயம் செய்யும் வகையில் முசுலீம்களுக்கு 5 ஏக்கர் நிலம் அளிக்க வேண்டும் என்று தீர்ப்பளிக்கப்படுகிறது என்று சொல்லப்பட்டுள்ளது.

**எல்லா மதங்களும் சமம். ஆனால் இந்து மதம் கூடுதலாகச் சமமானது என்று கூறுவது போல் இருக்கிறது உச்சநீதிமன்றத்தின் தீர்ப்பு.** நில உரிமை தொடர்பான வழக்கில் நிலம் யாருக்குச் சொந்தம் என்று தீர்ப்பளிப்பதுடன் நில்லாமல், அந்நிலத் தில் இராமர் கோயில் கட்டும் பொறுப்பை ஒன்றிய அரசிடம் உச்சநீதிமன்றம் ஒப்படைத்திருப்பது எந்த வகையான மதச்சார்பின்மை? மதச்சார்பின்மையே இந்திய அரசமைப்புச் சட்டத்தின் அடிப்படை என்று இத்தீர்ப்பில் கூறப்பட்டுள்ள போதிலும், இத்தீர்ப்பின் பிழிவான கருத்து நடப்பில் சிறுபான்மை மதத்தவர் சமமாக நடத்தப்பட மாட்டார்கள் என்கிற உண்மையை எதிரொலிப்பதாகவே இருக்கிறது.

நாட்டில் அமைதியையும் நல்லுறவையும் மத நல்லிணக்கத்தையும் விரும்புகின்ற அனைவரும், ''அப்பாடா! நீண்டகாலமாக இருந்துவந்த பெரும் சிக்கலான வழக்கு ஏதோவொரு வகையில் முடிவுக்கு வந்ததே'' என்று ஆறுதல் அடைகின்றனர்.

ஆயினும் சங்பரிவாரங்கள் இந்த அமைதியை நீடிக்க விடுவார்களா? என்கிற கேள்வி நம்முன் நிற்கிறது. ஏனெனில் அவர்களின் தத்துவத் தந்தை கோல்வால்கர், ''இந்துஸ்தானத்தில் இருக்கும் இந்துக்கள் அல்லாதார், ஒன்று இந்துக் கலாச்சாரத்தையும் மொழியையும் ஏற்றுக்கொள்ள வேண்டும். இந்து மதத்துக்கு மரியாதை செலுத்த வேண்டும். இந்து மதத்தின் புனிதத் தன் மையை உயர்த்திப் பிடிக்க வேண்டும். இந்து இனத்தின் கலாச்சாரத்தைப் போற்றுவதைத் தவிர, வேறு கருத்து எதையும் ஆதரிக்கக்கூடாது. இந்து தேசத்துக்குத் தம்மை முழுமையாக அடிமைப்படுத்திக் கொண்டு இந்த நாட்டில் அவர்களும் வாழலாம். எதற்கும் அவர்கள் உரிமை கொண்டாடக்கூடாது. சலுகை கொடுப்பது என்கிற பேச்சுக்கே இடமில்லை என்பது மட்டுமல்லாமல், எந்த உரிமை யும் இன்றி-குடியுரிமைகூட இல்லாமல் வேண்டுமா னால் இங்கே தங்கி வாழலாம்'' என்று கூறியுள்ளார். சங் பரிவாரங்களின் கொள்கையாக இது இன்றளவும் பின்பற்றப்படுகிறது. 2014-இல் நரேந்திர மோடி ஆட்சிக்கு வந்த பின், சிறுபான்மையினருக்கும், தலித்துகளுக்கும் எதிராக சங் பரிவாரங்கள் நடத்திய தாக்குதல்களைக் கோல்வால்கரின் கூற்றின் பின்னணியில் புரிந்து கொள்ள வேண்டும்.

**இப்போது ஒரே தேசம், ஒரே மொழி, ஒரே பண்பாடு, குடியுரிமைப் பதிவேடு என்கிற புதிய ஆயுதங்களுடன் வருகிறார்கள். மதத்தின் பெய ரால் நடத்தும் எந்தவொரு வன்முறையையும் எந்த மதத்தவர் செய்தாலும் அதைக் கடுமை யாக எதிர்ப்பதன் மூலமே உண்மையான மதச்சார் பின்மையை, சமூக நல்லுறவை நிலைநாட்ட முடியும்.**

❖

# சட்டமா? நம்பிக்கையா?

- குட்டுவன்

இந்தியத் துணைக் கண்ட வரலாற்றில், பாபர் மசூதியை இடித்த நாள் டிசம்பர் 6 1992. இந்நிகழ்வு பன்முகத் தன்மையின் கூறுகளை அடியோடு தகர்த்த நாள்; கறுப்பு நாள் அகும். இடித்த இடத்தில் இராமர் கோயில் கட்ட வேண்டும் என்பது சங் பரிவாரங்களின் கோரிக் கையாக முன்வைக்கப்பட்டதே ஒரு பயங்கரவாத செயலை ஊக்குவிக்கும் செயலாகும். இந்த அநீதியான செயல் நடந்து 27 ஆண்டுகள் கடந்துவிட்டன. பாபர் மசூதியை இடிக்கும் நிகழ்வில் பங்கு கொண்ட பாசக விலிருந்து ஒதுக்கி வைக்கப்பட்டுள்ள அத்வானிக்கு 92 வயது ஆகிறது. இந்த வன்செயலை வெறும் மசூதி இடிப்பு-இராமர் கோயில் கட்டுவது என்று மட்டும் பார்த்துவிட முடியாது. காரணம் ஒரு மதவாதக் கூட்டம், தொடர்ந்து இராமரை முன்னிறுத்தி அரசியலாக்கி இன்றைக்கு ஒன்றிய அரசில் இரண்டாவது முறையாக ஆட்சியைப் பிடிக்கும் அளவிற்கு வந்த எதிர்மறையான அரசியல் பயணமாகப் பார்க்க வேண்டும். காங்கிரசுக் கட்சியாக இருந் தாலும், பாசகவாக இருந்தாலும் இராமனை ஒரு கடவுள் அவதாரமாக ஆக்கி வழிபடுவதற்கு வழி வகுத்தனர். இந்து தீவிரவாத அரசியலுக்கு அடித்தளம் அமைத்தனர்.

1947இல் இந்தியா விடுதலை பெற்ற பிறகு, இந்து-முசுலிம் பாகுபாடும் வேறுபாடும் ஓர் அரசியலாகவே வளர்ந்தது. வடநாட்டில் இந்த எதிர்மறை அரசியலைத் தேசியக் கட்சிகள் எனக் கூறப்படுகிற காங்கிரசும், மற்ற கட்சிகளும் கண்டு கொள்ளவே இல்லை. குறிப்பாக 1952ஆம் ஆண்டு அயோத்தித் தொகுதியில் ஆச்சாரியார் நரேந்திர தேவ் சோசலிஸ்ட் கட்சியின் சார்பாகப் போட்டி யிட்டார். அவரை எதிர்த்து நின்ற காங்கிரசுக் கட்சியினர் ஆச்சாரியார் நரேந்திர தேவ் ஒரு நாத்திகர் என்றும் அவர் வெற்றி பெற்றால் இராமர் கோயில் கட்ட அனுமதிக்க மாட்டார் என்றும் பரப்புரை செய்தனர். பகுத்தறிவாளரான பிரதமர் நேரு காலத்திலேயே, இதைத் தடுக்க முடிய வில்லை. காங்கிரசுக் கட்சியில் சனாதனவாதிகளின் ஆதிக்கம் பெருமளவில் செல்வாக்கோடு செயல்பட்டது. மதவாதக் கருத்துகளை இந்திய அரசமைப்புச் சட்ட அவையிலேயே எதிரொலித்தனர். இந்துச் சட்டத்தில் பல முற்போக்கான திருத்தங்களை அரசமைப்புச் சட்டத்தில் அறிஞர் அம்பேத்கர் முன்மொழிந்த போது, காங்கிரசுக் கட்சியின் சார்பாக இடம் பெற்ற அரசமைப்புச் சட்ட உறுப்பினர்கள் கடும் எதிர்ப்பைத் தெரிவித்தனர். இந்துச் சட்டத்தில் பெண்களுக்கு வாரிசு உரிமை உட்பட பல முற்போக்கான சமூகம் சார்ந்த சட்ட விதிகளை அம்பேத்கர் முன்மொழிந்த போது, அதற்கு ஆதரவு தர மறுத்தனர். புது தில்லியில் பூரி சங்கராச்சாரியார் உட்பட இந்து மத வெறியர்கள் அம்பேத்கரின் உருவப் பொம்மையை எரித்தனர்.

அடுக்குமுறைச் சாதியமைப்பில் சூத்திரனுக்குக் கீழ் நிலையில் உள்ள பஞ்சமர், அரசமைப்புச் சட்டத்தை உருவாக்குவதா என்று வெளிப்படையாகச் சுட்டினர். மற்றொரு நிகழ்வும் அரசமைப்புச் சட்ட அவையில் நடந்தது. அரசமைப்புச் சட்ட அவையிலும் காங்கிரசுப் போர்வையில் பசுப்பாதுகாவலர்கள் இருந்தனர். குறிப்பாகச் சேத் கோவிந்ததாஸ், தாக்கூர் தாஸ் பார்கவா போன்ற பிராமணர்களும், மார்வாடி உறுப்பினர்களும் சேர்ந்து கொண்டு பசுப் பாதுகாப்பை அடிப்படை உரிமையாக அரசமைப்புச் சட்டத்தில் இணைக்க வேண்டும் என வாதிட்டனர். பார்ப்பன-பனியாக்கள் கூட்டம் இந்த அவை யில் பல பிற்போக்கான கருத்துகளை முன் மொழிந்தன. காங்கிரசுக் கட்சி விதைத்த நச்சு என்ற விதை பசுப் பாது காப்பு எனும் நச்சுக் காடாக பாசக ஆட்சியில் விரிந்தது.

2019ஆம் ஆண்டில்கூட பசுமாட்டை வைத்து, அரசியல் செய்யும் நிலையை ஊக்குவித்தது. சங் பரிவாரங்கள் பசு மாட்டு இறைச்சியை உண்ணும் இசுலாமியர்களையும், தலித்துகளையும், பசுப்பாது காவலர்கள் என்ற பெயரில் கொல்லும் அளவிற்கு மத வெறி ஓங்கி வளர்ந்துள்ளது.

அரசமைப்புச் சட்டத்தின் வரையறைக் குழுவின் தலைவர் என்ற முறையில், மனிதர்களின் உரிமை களைத்தான் அடிப்படை உரிமைகளாக அறிவிக்க முடியும் என்று குறிப்பிட்டு இந்துமத வெறியர்களின் கோரிக் கையை அண்ணல் அம்பேத்கர் நிராகரித்தார். இருப்பி னும் பசுப் பாதுகாப்பை அரசுமைப்புச் சட்டத்தின் வழி காட்டு நெறிகளின் 48ஆவது பிரிவில் (Directrive Principles of State Policy) இணைத்தனர். உலகில் எந்த நாட்டிலாவது பசுவைப் பாதுகாக்கவேண்டும் என்று அரசமைப்புச் சட்ட விதியில் குறிப்பிடப்பட்டுள்ளதா? இந்த இணைப்பு, ஒரு மதவாத அரசமைப்புச் சட்டம் என்பதைத் தானே சுட்டுகிறது. இதற்கு அரசமைப்புச் சட்ட அவைக்கு வெளியே நின்று துணை நின்றவர்கள், அன்றைய இந்து மகாசபை உறுப்பினர்களும் சங்கராச்சாரியர்களும் என்பதை யார் மறுக்க முடியும்?

அண்மையில் 2018இல் எடுக்கப்பட்ட புள்ளிவிவரங் களின்படி தென் மாநிலங்களான தமிழ்நாடு கேரளா ஆந்திரம் தெலங்கானா ஆகிய மாநிலங்களின் மக்கள் தொகையில் 98 விழுக்காட்டு மக்கள் இறைச்சி உண்பவர் களாக உள்ளனர். மேற்கு வங்கத்திலும் 98 விழுக்காட்டினர் இறைச்சி உணவை உண்கின்றனர். இராஜஸ்தான் (26 விழுக்காடு) அரியானா (31 விழுக்காடு) பஞ்சாப் (33 விழுக்காடு) குஜராத் (39 விழுக்காடு) மத்தியப்பிரதேசம் (51 விழுக்காடு), உத்திரபிரதேசம் (55 விழுக்காடு) மக்கள் இறைச்சியை உண்கின்றனர். இதைத் தவிர இதர

மாநிலங்களில் ஏறக்குறைய 50 விழுக்காட்டு மக்கள் இறைச்சியை உண்கின்றனர். இந்திய மக்கள்தொகையைக் கணக்கிட்டாலும் சராசரியாக 50 விழுக்காட்டிற்கு மேற்பட்ட மக்கள் இறைச்சியை உண்கிறார்கள் எனச் சான்றுகள் பகர்கின்றன. மக்களின் விருப்பத்திற்கு எதிராக எப்படி ஓர் அரசமைப்புச் சட்டத்தில் பசுவதையைச் தடை செய்ய வேண்டும் என்று சட்டப் பிரிவை இணைக்க முடியும் என்ற வினா எழுகிறது. எனவேதான் தந்தை பெரியார், அண்ணல் அம்பேத்கர் அறிஞர் அண்ணா ஆகிய தலைவர்கள் மதவாதத்தை எதிர்த்தார்கள். இராமன் படத்தைத் திராவிடர் இயக்கம் எரித்தது. அண்ணல் அம்பேத்கர் புராணங்களை சாத்திரங்களை எண்ணிலடங்கா வகையில் உற்பத்தி செய்து பார்ப்பான் அதைப் புதையலாக்கி கடுமையான வகையில் படிப்பறிவில்லாத மூடநம்பிக்கையில் மூழ்கிய இந்துக்களையும் பெரும்பான்மையான மக்களையும் வஞ்சகத்தால் முட்டாள்களாக்கி மோசடி செய்தான் பிராமணன் என்று குறிப்பிட்டுள்ளார்.

தந்தை பெரியார் இராமன் படத்தை எரித்தார். அரசமைப்புச் சட்டத்தையும் எரித்தார் என்பதை இன்று கடும் விமர்சனம் செய்பவர்கள், அரசமைப்புச் சட்டத்தில் உள்ள ஒரு மதச்சார்பு நிலையை ஏன் கண்டிக்க முன் வருவதில்லை? 1961இல் அறிஞர் அண்ணா ஹோம் லேண்ட் ஏட்டில் வடநாட்டில் இருந்து வரும் காரவன் ஏட்டில் வெளியிடப்பட்ட பகுத்தறிவுக் கருத்தைச் சுட்டிக் காட்டி ''இராம லீலா கொண்டாடலாமா? என்ற கேள்வியை எழுப்பியுள்ளார். இதிகாசப் புராணங்களில் இருக்கும் கருத்துகளைத் தங்களின் வாதத்திற்கு ஆதாரங்களாகக் காட்டி மதத்தின் பெயரால் செய்த அறிவற்ற அட்டுழியங்கள் பல உள்ளன என்று குறிப்பிட்டுள்ளார்.

இராமலீலா வட நாட்டினர் கொண்டாடும் போது, திராவிட இயக்கத்தினர் இராவண லீலா கொண்டாடினால் இந்தியத் தண்டனைச் சட்டம் 295வது பிரிவைப் பயன்படுத்தி வழக்குப் போடுவது என்ன நியாயம்? என்றும் கேட்டுள்ளார். இந்தியத் தண்டனைச் சட்டத்தில், இராமனுக்கு ஒரு நீதி இராவணனுக்கு ஒரு நீதியா? என்ற வினாவையும் எழுப்பியுள்ளார். இதுபோன்று எண்ணற்ற அறிவு சார்ந்த கேள்விகள் தென் இந்தியாவில் மட்டும்தான் கேட்கப்பட்டுள்ளன. பாபர் மசூதி இடிக்கப்பட்டதற்குப் பல காரணங்களைப் பல ஆய்வாளர்கள் தங்கள் நூல்களில் குறிப்பிட்டுள்ளனர்.

ஸ்டார்ட் கார்பிரிட்ஜ், ஜான் ஹாரிஸ் என்ற இரு ஆய்வாளர்கள் மீண்டும் இந்தியா (Reinventing India) என்ற நூலில் (பக்கம் 190)-1987 சனவரி தொடங்கி ஆகஸ்ட் 1989 வரை ஒன்றிய அரசின் ஊடகமான தூர்தர்ஷனில் இந்து தேசியம் ஊட்டி வளர்க்கப்பட்டது. வாரா வாரம் இராமயண நிகழ்ச்சிகள் அரசுத் தொலைக் காட்சியில் காண்பிக்கப்பட்டன. அயோத்தி இயக்கத்தை மக்கள் கண் முன்னே நிறுத்தினர். இதை ஒரு மதச் சார்பற்ற அரசே செய்தது பெரும் வியப்பாகும் என்று குறிப்பிட்டுள்ளனர். எனவே வடமாநில நீதிபதிகள் உட்பட, இந்த இராமயணக் காட்சியைக் கண்டார்கள். பலர் தொலைக் காட்சிப் படம் நின்றவுடன், இராம பஜனை செய்தார்கள். இதெல்லாம் நடந்தது காங்கிரசு ஆட்சியில் என்பதை மறந்துவிட முடியாது. அரசமைப்புச் சட்டம் நடைமுறைக்கு வந்த நாள் முதல் இன்று வரை இந்து மதவாதம் இந்து தேசியமாகச் சித்தரிக்கப்பட்டது என்பதைப் பல ஆய்வாளர்கள் சுட்டியுள்ளனர்.

இச்சூழலில்தான் உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதி கோகாய் தலைமையில் அமைந்த 5 நீதியரசர்கள் அமர்வு, பாபர் மசூதி இருந்த இடத்தில் இராமர் கோயிலைக் கட்ட வேண்டும் என ஒரு மனதாக அளித்தத் தீர்ப்பு பெரும் அதிர்ச்சியை அளிக்கிறது.

அரசமைப்புச் சட்ட அறிஞரான ஏ.ஜி.நுரானி, டிசம்பர் 6, 2019, பிரன்ட்லைன் ஏட்டில் உச்ச நீதிமன்றம் நீதியை மறுக்கிறது (Supreme Court Denies Justice) என்ற தலைப்பில் எழுதிய கட்டுரையில், பல சட்டத் தரவுகளை அளித்துள்ளார். பொதுவாக உச்ச நீதிமன்றம் ஒருமனதாக அளித்தத் தீர்ப்பு ஆர்.எஸ்.எஸ்., பாஜக, விசுவ இந்து பரிஷத் ஆகிய இந்து அமைப்புகளின் எதிரொலியாகவே அமைந்துள்ளது என்று குறிப்பிட்டுள்ளார். கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த பேராசிரியர் ஹிரேன் முகர்ஜிக்கு, வாஜ்பாய் ஜுன் 5 1989 அன்று எழுதிய மடலை மேற்கோள் காட்டியுள்ளார். அம்மடலில் இராமன் எங்கே பிறந்தான் என்று குறிப்பிட்டுக் காட்ட முடியாது என்று வாஜ்பாய் கூறியுள்ளார். ஆர்.எஸ்.எஸ். அமைப்பின் தலைவராக இருந்த தேவராஸ், நீதிமன்றம் தன் தீர்ப்பின் வழியாக இப்பிரச்சினையைத் தீர்க்க இயலாது என்று குறிப்பிட்டுள்ளார். 1950ஆம் ஆண்டு ஏப்ரல் 20ஆம் நாள் உத்திரபிரதேச மாநிலத்தின் பசிதாபாத்தின் வருவாய்த் துறை துணை ஆணையர் இந்த வழக்கில் உள்ள பாபர் மசூதி இடம், நீண்ட காலமாகத் தொழுகைக்காகப் பயன்படுத்தப்பட்டது. இராமனை வழிபடும் இடமாக இல்லை என்றும் குறிப்பிட்டுள்ளார். இது போன்ற ஏராளமான சட்டபூர்வமான தரவுகள் இருந்தும், இந்த அமர்வின் ஒருமனதான தீர்ப்பு பெரும்பான்மையான இந்து மக்களின் உணர்வுகளை மதித்து மட்டுமே அளிக்கப்பட்டுள்ளது என்று நுரானி குறிப்பிட்டுள்ளார். ''பிரன்ட் லைன்'' சிறப்பிதழில் பல சட்ட அறிஞர்கள்-சிந்தனையாளர்களின் கருத்துகள் இடம் பெற்றுள்ளன. எல்லோரும் இந்தத் தீர்ப்பு நம்பிக்கையின் அடிப்படையில் மட்டுமே எழுதப்பட்ட தீர்ப்பு என்று கூறியுள்ளனர். நம்பிக்கைதான் தீர்ப்பின் அடிப்படை என்றால் அரசமைப்புச் சட்ட விதிகள் எல்லாம் செத்துவிட்டனவா என்ற வினா எழுகிறது. வைத்தால் முடி எடுத்தால் மொட்டை என்பதுபோல் நாங்கள் சொல்வதுதான் நீதி என்று சொல்ல முடியுமா? மொகலாய மன்னர்கள் காலத்தில்கூட பன்முகத் தன்மைகள் வடமாநிலங்களில் போற்றி வளர்க்கப்பட்டன என்பதை வரலாறு சுட்டுகிறது.


மொகலாய மன்னர்களின் மகன்கள் பலர் சமஸ் கிருதம் உருது, அரபி மொழிகளைப் பயின்றவர்கள். அக்பர் சுதந்திரமான கருத்துகளைத் திறந்த மனதுடனும் வெளியிட வேண்டும் என்று வலியுறுத்தியவர். சமண பௌத்த, பார்சி உட்பட அனைத்துச் சமய சிந்தனையாளர் களையும் அழைத்து சமூக மத நல்லிணக்கத்திற்கு வழி காண முற்பட்டார். குறிப்பாக நாத்திகர்களையும் இந்த உரையாடல்களில் கலந்து கொள்ள அழைத்தார். 'ஜகானின் மகனான தாராசு சிறந்த இலக்கியவாதி. எல்லோரும் சமம் என்கிற கொள்கையுடைய சுபி இயக்கத்தின் கொள்கை களில் பிடிப்புக் கொண்டு பல நூல்களைப் படைத்தவர். 50 உபநிடதங்களைச் சமஸ்கிருதத்தில் இருந்து பெர்சியன் மொழிக்கு மொழி பெயர்த்தார். பாபா லால் என்கிற பார்ப்பன குருவிடம் பல முறை விவாதித்து மத நல்லி ணக்கத்தை வலியுறுத்தினார். பல சாஸ்திர மத நூல் களை மொழி பெயர்த்துள்ளார்.

இது போன்ற எண்ணற்ற சான்றுகள் வரலாற்றின் பல பக்கங்களில் இடம் பெற்று இருக்கும் போது, ஐந்து நீதியரசர்கள் அமர்வு ஒரு மதத்தின் நம்பிக்கையின் அடிப்படையில் தீர்ப்பை வழங்கியிருப்பது பெரும் தீமையாகவும் தவறான முன்னுதாரணமாக அமைந்து விடும் என்று பல சட்ட அறிஞர்கள் குறிப்பிட்டுள்ளனர். இந்த அமர்வுக்குத் தலைமை வகித்த நீதியரசர் ரஞ்சன் கோகாய் மீது ஏற்கெனவே பாலியல் குற்றச்சாட்டு சுமத்தப் பட்டது. நீதியரசர் கோகாய் இந்த அமர்விலும் இடம் பெற்று புகாரளித்த பெண்ணை அழைத்து, விசாரணை என்ற பெயரில் ஒரு மனதான தீர்ப்பை வழங்கியபோதே பல் வேறு அச்சங்களை ஏற்படுத்தின. ஓய்வு பெற்ற பிறகு தனக்குப் பல கசப்பான சம்பவங்கள் இருந்தன என்று அவரே ஒப்புக் கொண்டுள்ளார். எவை எவை கசப்பானவை? எவை எவை இனிப்பானவை? என்பதை கோகாய் குறிப்பிடுவாரா? மக்களாட்சியின் மாண்பையும் நீதிமன்றத் தின் சிறப்பையும் காப்பது நீதித்துறையின் பொறுப்பும் கடமையும் என்பதை மறுக்க முடியுமா?

பணி ஓய்விற்குப் பிறகு திருப்பதிக்கு வந்து மலையப் பனை வழிபட்டது மதச்சார்பா? மதச்சார் பின்மையா? இசுலாமிய மதத்தைச் சேர்ந்த ஒரு நீதியரசர் அம்மதத் திற்குச் சார்பான ஒரு திர்ப்பினை வழங்கிவிட்டு மசூதிக்குச் சென்று தொழுகை நடத்தினால் சங் பரிவாரங்கள் எற்றுக் கொள்ளுமா?

தந்தை பெரியாரும், அண்ணல் அம்பேத்கரும் இந்திய அரசமைப்புச் சட்டம் ஒரு இந்து தர்மச் சட்டமாக உள்ளது என்று, அன்றே எதிர்ப்புத் தெரிவித்தனர். சட்ட அமைச்சர் பதவியில் இருந்து அம்பேத்கர் விலகி, புத்த மதத்தைத் தழுவினார். **பெரியார் இறுதி வரை இந்த அரசமைப்புச் சட்டம் சனாதான சட்டம் என்றே வாதிட்டார். சட்டம் தோற்றுவிட்டது. நம்பிக்கை வென்றுவிட்டது. இது நம்பிக்கையா? மூட நம்பிக் கையா? என்ற வினா ஒவ்வொருவர் எண்ணத்திலும் தற்போது எழத் தொடங்கியுள்ளது.**

# தமிழ்ச் சான்றோர் மெய்யப்பனார் மறைவு



இவர் 15.1.1943-இல் பிறந்தார். 14.11.2019-இல் மறைந்துவிட்டார். மின்வாரியத்தில் துணை நிலைத் தலைமைப் பொறியாளராக இருந்து 2001-இல் ஓய்வு பெற்றார். B.E., MBA, PG Dip. in யோகா முதலான பட்டங்களைப் பெற்றார்.

இவருடைய துணைவியார் திருமதி. தெய்வானை மெய்யப்பன் மூன்றாண்டுகளுக்கு முன்பே மறைந்து விட்டார். இவர்களுக்கு உலகம்மை என்று ஒரே ஒரு மகள் உண்டு. அவருக்குத் திருமணமாகிவிட்டது. திருவாளர் மெய்யப்பன் அவர்கள் 'தமிழ் நூலகம்' என்னும் பதிப்பகம் வாயிலாக, முனைவர் பொற்கோவின் நூல்கள் வெளிவரச் செய்தார்.

யோகச் சிகிச்சையில் ஆசிரியராக இருந்து பலருக்கு அந்தக் கலையைக் கற்பித்திருக்கிறார். இவர் நிரம்ப நூல்களைப் படித்தவர். இவர் பல நூல்களை எழுதி வெளியிட்டிருக்கிறார். இயற்கை மருத்துவத்தில் மிகுந்த ஆர்வத்தோடு பல முகாம்களில் பங்குபெற்றிருக்கிறார். இயற்கை மருத்துவ ஆலோசகராக இருந்து பல அன்பர்களுக்கு ஆலோசனை வழங்கியிருக்கிறார்.

நூற்றுக்கணக்கானவர்கள் இவருடைய ஆலோச னைகளால் பயன்பெற்று இருக்கின்றனர். கல்வி கற்கும் மாணவர்களுக்கும், நோய் வாய்ப்பட்ட எளியவர் களுக்கும் ஏராளமான உதவிகளைச் செய்திருக்கிறார்.

**இவருடைய மறைவு இவருடைய குடும்பத் தாருக்கும், நண்பர்களுக்கும், புலமை என்ற ஆய்விதழின் வாசிப்பாளர்களுக்கும் ஈடுசெய்ய முடியாத இழப்பு ஆகும்.**

திரு.மெய்யப்பன் அவர்கள் எளிமைக்கும், நேர்மைக் கும், உண்மைக்கும், உழைப்புக்கும் இலக்கணமாக வாழ்ந்தவர். மனித உறவை மாண்போடு காத்தவர்.

இவருடைய அன்பு மகள் உலகம்மை அவர்களுக்கும் மற்றும் அவருடைய குடும்பத்தாருக்கும், இவருடைய நண்பர்களும், தமிழ்நேயர்களும் ஆழ்ந்த துயரம் நிறைந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

# சிந்தனையாளன் பொங்கல் மலர் - 2020

*வெளியீட்டு விழா*

## ❖ தமிழ்நாட்டுக் கல்வி உரிமை மாநாடு
## ❖ சுயமரியாதை மாநாடு

நாள் : **05-01-2020, ஞாயிறு** ★ இடம் : **சந்திரசேகர் திருமண மண்டபம்**

**ஆ.சுசீலா அம்மையார் அரங்கம் - கவிஞர் தமிழேந்தி மேடை**

மேற்கு மாம்பலம், சென்னை-33.

முதல் அமர்வு : முற்பகல் 10.00 மணிமுதல் 11.30 மணிவரை

**சிந்தனையாளன் பொங்கல் மலர் – 2020 வெளியீட்டு விழா**

வரவேற்புரை :
தாம்பரம் **மா. சுப்பிரமணி**
காஞ்சி மாவட்டத் துணைச் செயலாளர், மா.பெ.பொ.க.

தலைமை :
**சி. நடராசன்**
காஞ்சி மாவட்டச் செயலாளர், மா.பெ.பொ.க.

மலரை வெளியிட்டுச் சிறப்புரை : கோவை **கு.இராமகிருட்டிணன்**
பொதுச் செயலாளர், தந்தை பெரியார் திராவிடர் கழகம்

முதல்படி பெறுபவர் : மாம்பலம் **ஆ. சந்திரசேகர்** தலைவர், உலகச் சான்றோர் பேரவை

***மலர் பெறுவோர் :***

**ஆ.கு. ஆறுமுகம்**
விழுப்புரம் மாவட்டச் செயலாளர், மா.பெ.பொ.க.

வரகூர் **மா. நாராயணசாமி**
பெரம்பலூர் மாவட்டச் செயலாளர், மா.பெ.பொ.க.

**இரா. கலியபெருமாள்**
திருச்சி மாவட்டச் செயலாளர், மா.பெ.பொ.க.

**பா.வை. அருண்மொழி**
சென்னை மாவட்டத் துணைச் செயலாளர், மா.பெ.பொ.க.

**மு. செயப்பிரகாசு**
காஞ்சி நகரச் செயலாளர், மா.பெ.பொ.க.

முனைவர் **ப.வெங்கடேசன்**
மா.பெ.பொ.க. வாலாசாப்பேட்டை

தோழர் **சீனி.பழனி**
மா.பெ.பொ.க. வாணியம்பாடி

தோழர் **இரா.பகுத்தறிவாளன்**
மாணவர்-இளைஞரணி, மா.பெ.பொ.க.

***கருத்துரை :***

தோழர் **முத்து அன்பழகன்**
நாகை மாவட்டச் செயலாளர், மா.பெ.பொ.க.

தோழர் **இரா.கலியமூர்த்தி**
அரியலூர் மாவட்டச் செயலாளர், மா.பெ.பொ.க.

தோழர் **பொ.சுப்பிரமணியன்**
திருவண்ணாமலை மாவட்டச் செயலாளர், மா.பெ.பொ.க.

தோழர் **செ.ஆனையப்பன்**
சேலம் மாவட்டச் செயலாளர், மா.பெ.பொ.க.

தோழர் **பா.மோகன்**
கடலூர் மாவட்டச் செயலாளர், மா.பெ.பொ.க.

தோழர் **மு.சாமிநாதன்**
மா.பெ.பொ.க. வேலூர்

தோழர் **ந.கருணாகரன்**
பு.க.க.இ.மன்றம், திருச்சி

தோழர் **நா.மதனகவி**
மா.பெ.பொ.க.வாணியம்பாடி

நன்றியுரை : தோழர் **கு.தொல்காப்பியன்,** மா.பெ.பொ.க. ஓசூர்

இரண்டாம் அமர்வு : காலை 11.30 மணிமுதல் பகல் 1.30 மணிவரை

## தமிழ்நாட்டுக் கல்வி உரிமை மாநாடு

வரவேற்புரை : **மோ.சி.சங்கர்,** வேலூர் மாவட்டச் செயலாளர், மா.பெ.பொ.க.

தலைமை : **சா.குப்பன்,** தொழிலாளரணிச் செயலாளர், மா.பெ.பொ.க.

மாநாட்டுத் தொடக்கவுரை : தோழர் **பொழிலன்,** ஒருங்கிணைப்பாளர், தமிழக மக்கள் முன்னணி

### கருத்துரை :

**ஆ. முத்தமிழ்ச்செல்வன்**
மாணவர்-இளைஞர் அணிச் செயலாளர், மா.பெ.பொ.க.

முனைவர் **சி.இரா.இளங்கோவன்**
பு.க.க.இ.ம. சிரம்பம்

தோழர் **கோ.கோதண்டராமன்**
வேளாண் அணிச் செயலாளர், மா.பெ.பொ.க.

பேரா. **இர.நடராசன்**
வேலூர்

தோழர் **குறளமிழ்தன்,** பு.க.க.இ.ம. காஞ்சிபுரம்

சிறப்புரை :

பேரா. **சோம.இராசேந்திரன்** தமிழ்த்துறைத் தலைவர், நேரு நினைவுக் கல்லூரி, புத்தனாம்பட்டி, திருச்சி

நன்றியுரை : தோழர் **மீ.டில்லிபாபு** வேலூர் நகரச் செயலாளர், மா.பெ.பொ.க.

மூன்றாம் அமர்வு : மாலை 3.00 மணிமுதல் இரவு 7.00 மணிவரை

## சுயமரியாதை மாநாடு

வரவேற்புரை : தோழர் **மா.முருகேசன்,** புரட்சிக் கவிஞர் கலை இலக்கிய மன்றம்

தலைமை : **வாலாசா வல்லவன்,** சென்னை மாவட்டச் செயலாளர், மா.பெ.பொ.க.

மாநாட்டுத் தொடக்கவுரை : கொளத்தூர் **தா.செ.மணி,** தலைவர், திராவிடர் விடுதலைக் கழகம்

### கருத்துரை :

தோழர் **ஓவியா**
புதிய குரல்

தோழர் **சி.பெரியசாமி**
துணைப் பொதுச் செயலாளர், மா.பெ.பொ.க.

தோழர் **கோவிஇராமலிங்கம்**
மாநில மகளிரணிச் செயலாளர், மா.பெ.பொ.க.

தோழர் **இரா.பச்சமலை**
மா.பெ.பொ.க.

தோழர் **தி.துரைசித்தார்த்தன்**
துணைப் பொதுச் செயலாளர், மா.பெ.பொ.க.

தோழர் **மரு.நா.எழிலன்**
நிறுவனர், இளைஞர் இயக்கம்

தோழர் **துரை.கலையரசு**
செயலாளர், பெரியார்-நாகம்மை கல்வி அறக்கட்டளை

தோழர் **இரா.திருநாவுக்கரசு**
மா.பெ.பொ.க. புதுச்சேரி மாநில அமைப்பாளர்

தோழர் **க.முகிலன்**
மா.பெ.பொ.க.

தோழர் **தி.ச.குணசேகரன்** பாவேந்தர்-
பல்லவன் இலக்கியப் பாசறை

நிறைவுரை :

தோழர் **வே.ஆனைமுத்து**
பொதுச் செயலாளர், மார்க்சியப் பெரியாரியப் பொதுவுடைமைக் கட்சி

நன்றியுரை : தோழர் **ப.வடிவேலு** மா.பெ.பொ.க. சென்னை

## மார்க்சியப் பெரியாரியப் பொதுவுடைமைக் கட்சி

# எதற்காகக் காத்துக் கொண்டு இருக்கிறோம்?

- இராமியா


“தி லான்செட்” என்ற மருத்துவ வாரப் பத்திரிக்கை 1823ஆம் ஆண்டில் தாமஸ் வேக்லி என்ற ஆங்கிலேய மருத்துவரால் இலண்டனில் தொடங்கப்பட்டது. இன்று இது இலண்டன், நியூயார்க், பெய்ஜிங் ஆகிய நகரங்களில் இருந்து வெளிவந்து கொண்டு இருக்கிறது. இதில் மருத்துவ அறிவியல் பற்றிய ஆராய்ச்சிக் கட்டுரைகள் இடம் பெறுகின்றன. அண்மையில் உலக சுகாதார நிறுவனம், பல்கலைக் கழகக் கல்லூரி, இலண்டன், திசுங்குவா பல்கலைக் கழகம், பெய்ஜிங் உட்பட உலகின் மிக உயர்ந்த 33 நிறுவனங்களைச் சேர்ந்த 120 நிபுணர்கள் ஆராய்ந்து எழுதிய கட்டுரை ஒன்று இதில் வெளியாகி உள்ளது. இது புது தில்லியில் 13.11.2019 அன்று பத்திரிக்கையாளர்களின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டது.

**இக்கட்டுரையில், புவி வெப்ப உயர்வு தொடர்ந்து உயர்ந்து கொண்டு இருக்கிறது என்றும், இதன் காரணமாக, உணவு தானிய உற்பத்தி 2 விழுக்காடு குறைந்து உள்ளது என்றும் குறிப்பிடப்பட்டு உள்ளது. மேலும் புவி வெப்ப உயர்வு, ஏழை நாடுகளில் உள்ள குழந்தைகளின் உடல் நலத்தை மட்டும் அல்ல; பணக்கார நாடுகளின் குழந்தை களின் உடல் நலத்தையும் ஏற்கெனவே பாதித்து உள்ளது என்றும், இது தொடர்ந்தால் எதிர்காலத் தில் உலகில் உள்ள குழந்தைகளின் உடல் நலம் வெகுவாகப் பாதிக்கப்படும் என்றும் அக்கட்டுரை யில் தெரிவிக்கப்பட்டு உள்ளது.**

இச்செய்தி மருத்துவர்களுக்கு வருத்தம் அளிக்கக் கூடியதாக இருக்கலாம்; ஆனால் மருத்துவ வணிகர்கள் மகிழ்ச்சி அடைவார்கள் என்று பலர் எதிர்பார்க்கலாம். ஆனால் மருத்துவத் துறையின் ஆற்றலை விட, புவி வெப்ப உயர்வின் நோய்த் தாக்குதலின் ஆற்றல் விரைவில் வென்றுவிடும் என்ற அச்சத்தை இக்கட்டு ரையில் உள்ள செய்திகள் ஏற்படுத்துகின்றன.

சரி! நாம் புவி வெப்ப உயர்வையும், அதன் விளைவுகளயும் கண்டு எவ்வளவு காலம்தான் அஞ்சிக் கிடக்கப் போகிறோம்?

ஆண்டுக்கு ஒரு முறை ஒரு மணி நேரம் மின் விளக்குகளை அணைத்துவிட்டு மெழுகுவர்த்திகளை ஏற்றுவது, ஆங்காங்கே மரக் கன்றுகளை நடுவது போன்ற "நடவடிக்கைகளை" முதலாளிகளும், முதலா ளித்துவ அறிஞர்களும் செயல்படுத்திக் காட்டி, புவி வெப்ப உயர்வைப் புறம் கண்டு கொண்டு இருப்பதாக மக்களை நம்ப வைத்துக் கொண்டு இருக்கிறார்கள். இது ஒரு கொடூரமான அயோக்கியத்தனம் ஆகும். இப்படிச் செய்வதன் மூலம் அவர்கள் புவி வெப்ப உயர்வுக்கு எதிரான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுவிட்டன என்ற உணர்வை மக்களிடையே ஏற்படுத்தி அமைதிப்படுத்தி விடுகிறார்கள். ஆனால் புவி வெப்ப உயர்வும், அதன் கேடான விளைவு களும் தொடர்ந்து கொண்டே இருக்கின்றன. அப்படி என்றால் இதற்குத் தீர்வுதான் என்ன? முதலாளிகளும் முதலாளித்துவ அறிஞர்களும் அத்தீர்வை நோக்கி ஏன் செல்வது இல்லை?


THE LANCET.

VOL. I.

LONDON:

PRINTED AND PUBLISHED BY J. ONWHYN, 4, CATHERINE STREET, STRAND: AND SOLD BY ALL RESPECTABLE BOOKSELLERS IN THE KINGDOM.

1823.

இதற்கான தீர்வைப் புரிந்து கொள்வது கடினமே அல்ல. புவி வெப்ப உயர்வை அதிகரிக்கும் பண்டங்களின் உற்பத்தியை வெகுவாகக் குறைக்க வேண்டும். முடிந் தால் அடியோடு நிறுத்திவிடவும் வேண்டும். புவியைக் குளிர்விக்கும் பண்டங்களை மிக மிக … மிக அதிகமாக உற்பத்தி செய்ய வேண்டும்.

அதற்கென்ன செய்ய வேண்டியது தானே என்கிறீர் களா? அங்கு உள்ள பிரச்சினையைத்தான் புரிந்து கொள்ள வேண்டும். புவி வெப்ப உயர்வை அதிகரிக்கும் பண்டங்கள் அனைத்தும் சந்தையில் இலாபம் ஈட்டித் தருகின்றன. அவற்றை உற்பத்தி செய்ய வேண்டாம் என்றால் எந்த முதலாளியாவது ஒப்புக் கொள்வாரா? முதலாளிகளுக்குப் பிடிக்காத ஒன்றை ஒரு முதலாளித்துவ

அரசு செய்யுமா? அது கிடக்கட்டும்! புவியைக் குளிர்விக்கும் பண்டங்களை அதற்கெல்லாம் ஈடு கொடுக்கும்படி அதிக அளவில் உற்பத்தி செய்துவிடலாம் என்று அப்பாவித்தனமாக நினைத்து விடாதீர்கள். **அது இன்னும் கடினமானது, ஏன் தெரியுமா? காடு வளர்த்தல், மரம் வளர்த்தல், விவசாயம் போன்றவை தான் புவி வெப்பத்தைக் குறைக்கும். ஆனால் இவற்றில் எல்லாம் முதலீடு செய்தால் இழப்பு தான் ஏற்படும். பல சமயங்களில் போட்ட மூலதனம் அப்படியே காணாமலேயே போய் விடும். சில அதி மேதாவிகள் இது போன்றவற்றில் முதலாளிகளை எதிர்பார்க்காமல் அரசே மேற்கொள்ள வேண்டும் என்று அறிவுரை கூறுவார்கள்.** புவி வெப்பத்தைத் தேவையான அளவுக்குக் குறைக்க விவசாயம், மரம் வளர்த்தல், காடு வளர்த்தல் ஆகியவற்றில் முதலீடு செய்ய வேண்டும் என்றால் அரசின் மொத்த வருவாயே போதாது என்பது மட்டும் அல்ல; அரசின் மொத்த வருவாயைப் போல் ஆயிரம் மடங்கும் தேவைப்படலாம். அவ்வளவு வருவாய் வேண்டும் என்றால் அனைத்து முதலாளிகளின் உடைமைகளையும் பறிமுதல் செய்ய வேண்டி இருக்கும், முதலாளித்துவ அமைப்பில் இதைக் கற்பனை கூடச் செய்ய முடியாது.

**அப்படி என்றால் என்னதான் செய்ய வேண்டும்? சந்தைக்குத் தேவைப்படும் பண்டங்களை உற்பத்தி செய்யும் முதலாளித்துவ உற்பத்தி முறையை ஒழித்துக் கட்டி விட்டு, மக்களின் தேவைகளைக் கணக்கிட்டு அவற்றை உற்பத்தி செய்யும் சோஷலிச உற்பத்தி முறையை ஏற்படுத்த வேண்டும். அவ்வாறு செய்தால் புவி வெப்ப உயர்வுக்குத் தீர்வு காணும் அதே சமயத்தில், அனைத்து மக்களுக்கும் வேலை வாய்ப்பு அளிப்பதன் மூலம் அனைத்து மக்களுக்கும் பொருளாதார விடுதலையும் கிடைக்கும்.**

**அது நல்லதுதானே என்கிறீர்களா? ஆம். உழைக்கும் மக்கள் அனைவருக்கும் நல்லதுதான். ஆனால் "பிறரை அடிமை கொள்ளாமல் வாழ முடியாது; பிறரை அடிமை கொள்ளாமல் வாழும் வாழ்க்கையை ஏற்பதை விட, இந்த உலகம் அழிந்தே போகட்டும்" என்று தான் முதலாளிகளும் முதலாளித்துவ அறிஞர்களும் நினைக்கிறார்கள் / விரும்புகிறார்கள். ஆகவே அனைத்து வகுப்பு மக்கள் இணைந்து போராட வேண்டும் என்று காத்திருந்தால், அது கானல்நீரை நோக்கி ஓடுவதாகவே இருக்கும். முதலாளிகளையும், முதலாளித்துவ அறிஞர்களையும் தவிர்த்து மற்ற (உழைக்கும்) மக்கள் ஒன்றிணைந்து போராடுவது மட்டுமே சரியான வழியாகும்.**

ஆனால் நாம் அதைச் செய்யாமல் எதற்காகக் காத்துக் கொண்டு இருக்கிறோம்?

# விடியல் தோன்றும்!

வேற்றுமையில் ஒற்றுமையெனல் வாய்க்கொள்கை
வேறுபாட்டை உள்சுரக்கும் நச்சுப் பொய்கை.
நூற்றுவகை ஆரியத்தின் சூழ்ச்சிப் போர்வை
நுண்டமிழின் பெருமைகண்டு பொறாமைப் பார்வை
போற்றுவார் போல் காட்டிக் கீழறுக்கும் கொல், கை
பொதுமகள் போல் 'ஒரே'என்னும் மயக்கக்கூட்டில்
மேறகல்வி, 'நீட் தேர்வு' மொழி, மதங்கள்
பிறவுமடைக்க அலையும் ஆரியத்தின் மாயை.

ஒரேகுடைக்கீழ் ஒரே இந்து மதத்தைச் சாற்றும்
உள்நோக்கம் வேர்பிடித்து வலைவிரிப்பாய்
சரேலென்ற அதிகார அம்பு பாய்ச்சித்
தமிழரென்ற அடையாளம் குலையைச் செய்வாய்
அரோகராவும் (அரே)ராமாவும் அய்யப்பாவும்
அனைவராலும் உரத்தொலிக்க எதிர்பார்க்கின்றாய்
கரேலென்ற உடை அணிந்தார் (தி.க.)
உண்மைசொன்னால்
கருத்துவளப் பெரியாரின் சிலை உடைப்பாய்?

கீதைக்கண்ணன் "நானே நான்குவர்ணக்
கிளைகளையும் படைத்தேன்காண்; உழைக்கும் பாவப்
பாதைப்பட்ட பெண்கள் ஆண்கள் (சூத்திரர்) எல்லாம்
பிறப்பினாலே இழிந்தவர்கள்" என்று சொன்னான்.
(கீ.4-13); (கீ.9-32)
வாதைவிஞ்சும் அடிநெஞ்சில் மேற்சொல் கேட்டால்.
மானுடத்தின் வெற்றிநூல் குறளென்று கூறு
பேதை நாய், கீதைச் சாரம், குறளே என்று
பேரூளை (பேர்ஊளை) இடுகையில் சான்றெடுத்து வீசு.

செருப்பெடுக்கப் பெரியார்தாம் இல்லை என்று
சொரி நாய்கள் குறள்கோவை இந்துவாக்கும்.
கருப்புஆடு நமக்குள்ளே இருக்கும் போது
கண்டவனும் கழிசடையாய்க் கருத்துரைப்பான்.
மருப்புடைய களிற்றுமுக விநாயகர்க்குப்
பட்டைநாமம் சாத்தினால் 'பூணூல்' ஆடாதா?
திருக்காஞ்சி 'ஆச்சாரி' கருப்பு ஆடை
தரித்த காட்சி நாம் வரைந்தால் போர்மூளாதா?

விடியட்டும் இருட்டிரவு என்று காத்தோம்
விடியாமை யார்குற்றம்? சாதியத்தின்
முடிமுட்டும் இருள்தூக்கி எறியும்போது
முதிர்ந்திட்ட மதவெறியை வீழ்த்தும் போது
அழமுட்டாள் அடிமையிருள் உடைக்கும் போது
அரும்பெரியார் விதைத்திட்ட புதுநெல் நாற்றைப்
படிமுறையாய் வளர்த்து அறுவடையின் போது
புதுமறவன் வாளெடுத்தால், விடியல் தோன்றும்.

- பேராசிரியர் **இரா. சோதிவாணன்**

# திருக்குறளின் மெய்ப்பொருள் காண்பதுதான் அறிவு

## (திருவள்ளுவருக்குக் காவி பூசிட முற்படுவோர் சாயம் வெளுத்திடும்)

இரா. பச்சமலை

தமிழின் செவ்விலக்கியமாக விளங்கும் திருக்குறள் உலகளவில் இனம், மொழி, சமயம், நாடுகளின் எல்லைகள் கடந்த ஒரு பொது அறநெறி நூலாகத்தான், அவை சார்ந்த சான்றோர்கள், இலக்கிய ஆளுமைகள், பொது அறநெறிக் கோட்பாளர்கள் என அனைவராலும் ஒருமித்த தன்மையில் ஒட்டுமொத்த மானுடத்தின் போற்றுதலுக்குரிய, பெருமைக்குரிய அரும்பெரும் நூலாகக் கொள்ளப்பட்டு வருகிறது. அதைப் படைத்தவரான திருவள்ளுவர் பற்றியும் அவரின் மேற்சொன்ன இனம், மொழி, சமயம், நாடு தொடர்பான அவரது அடையாளம் பற்றியும் காலந்தோறும் பலரால் பல்வேறு கருத்துகள் சொல்லப்பட்டு வருகின்றன. இதில் ஒன்றைத் தவிர அவரை மற்றவற்றின் அதாவது இனம், மொழி, நாடு ஆகியவற்றுடன் தொடர்புபடுத்துவதில் அய்யங்கள் எழ வாய்ப்பில்லை என்ற நிலைப்பாட்டை எடுக்கலாம்.

அவர் திராவிட தமிழ் இனத்தவர் தமிழர், தமிழ் நாட்டவர் என இவையெல்லாம் மண்சார்ந்த, மக்கள் மாண்பு சார்ந்த, பண்புகள் தொடர்பானவை. இவ்வாறு திருவள்ளுவரை அடையாளம் காண்பதில் நெருடல் ஏற்பட வாய்ப்பே இல்லை. ஆனால் முதன்மையாக ஒருவரை ஒரு நம்பிக்கை சார்ந்தவர் (சமயம் மறுத்தவர், இறை மறுத்தவர், இவை இரண்டு பற்றியும் கவலை யற்றவர், சிந்தனையற்றவர் என்பவற்றை உள்ளடக் கியது இச்சொல்) ஒரு சமய நம்பிக்கை அல்லது இறை நம்பிக்கை கொண்டவர் என்பது மட்டுமின்றி மேற் சொன்ன அடையாளங்களையெல்லாம் முற்றிலும் ஒதுக்கி வைத்து விட்டுத்தான் அவரால் கூறப்பட்டவற்றைக் கருத்திற் கொள்ள வேண்டும்; ஆய்வுக்குட்படுத்த வேண்டும். அதன் அடிப்படையில் அவர் கருத்தை ஏற்பது, பொருட்படுத்தாமல் விட்டுவிடுவது அல்லது மறுப்பது என்பதைப் பிறர் தத்தம் அறிவு கொண்டு ஆராய்ந்து பார்த்து தெளிந்த முடிவுக்கு வர வேண்டும் என்பதைத்தான் வள்ளுவம் வலியுறுத்துகிறது.

**திருவள்ளுவர் மொழிகிறார் :**

"எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பது அறிவு" (423)

"எப்பொருள் எத்தன்மைத் தாயினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பது அறிவு" (355)

என அய்யம் திரிபுர அழகுபடி நெறிப்படுத்தி முன்வைத் துள்ளார் திருவள்ளுவர்.

இதேபோன்றுதான் திருவள்ளுவரின் சம காலத்த வராகக் கருதப்படும் உலகின் நிலப்பரப்பில், வேறொரு நிலப் பகுதியில் வரலாற்றின்படி வாழ்ந்தவரான புத்தர் இன்னும் வலிமையுடன் பதிவு செய்திருக்கிறார்.

யார் சொன்னார், அவர் யாராக இருப்பினும், என்ன சொன்னார் என்பதின் மெய்த்தன்மையை அவரவர் தத்தம் செறிவார்ந்த அறிவைக் கொண்டு ஆய்வுக்குட்படுத்தித் தமது அறிவுக்குச் சரி என்று பட்டதை ஏற்றுக் கொள்வதுதான் அறிவு நெறிப்பட்டது என்று மொழிவதுடன், அவ்வாறு சரியானது என்று கருதப்பட்டது நமக்கு நன்மை பயப்பது என்ற தன்மை யிலன்றி வெகுமக்களுக்கும் புரைதீர்த்த நன்மை பயப்பது என்ற கருத்துத் தான் முற்றும் முழுவதும் மெய்யானது, சரியானது என்று கொள்ளப்பட வேண்டும்.

இவ்விரு நிலைபாடுகளையும் தாண்டி, பெரியார் ஈ.வெ.இரா. இன்னும் ஒரு படி மேலே சென்று புத்தரும், வள்ளுவரும் பொது நிலையில் பொழிந்த கருத்துக்களைத் தன்னை முன்னிறுத்தி தான் வெளிப்படுத்தும் கருத்துக்களை எவ்வாறு மெய்யுணர வேண்டுமென்பதைத் திண்மையுடன் உரைக்கின்றார்.

ஈ.வெ.இரா. என்ற நான் என்ன பேசுகிறேன், என்ன கருத்து ரைக்கிறேன் என்பதை இவரே சொல்லிவிட்டார் என்று, என் போன்ற தனிமனிதனை ஏற்றி வைத்துச் சிந்திக்காமல், (அவர் சொற்பொழிவை கேட்போரைப் பார்த்து) சொல்லப்பட்டதைத் தத்தம் அறிவு கொண்டு ஆய்வுக்குட்படுத்தி அதன் அடிப்படை யில் அப்பொருள் மெய்மையை மட்டும் கருத்திற் கொள்ளுங்கள். அன்றேல் அதன் பகுதியையோ முழுவதையுமோ ஏற்றுக் கொள்ளுங்கள். அல்லது புறந்தள்ளுங்கள் என்கிறார். இதில் இன்னும் ஒரு படி மேல் சென்று, என் வாழ்நாள் தாண்டி 50 ஆண்டுகள் கழித்து ஈ.வெ.இரா. என்றொருவர் எதை எதையோ அறிவுக்கொவ்வாத கருத்துகளைச் சொல்லிச் சென்றுவிட்டார் என்று அவரவர் அறிவு ஆய்வுத் திறன் கொண்டு உரைப்ப ார்கள் எனில்-என் உயிர்க்கொள் கையான மனிதனின் தடையற்ற சிந்தனைக் கோட்பாடு வெற்றி பெற்றதாகக் கொள்வேன் எனச் சூளுரைத்துச் சென்றார் பெரியார் ஈ.வெ.இரா.

இந்தப் பின்னணியில், பெரியார் ஈ.வெ.இராவைப் புரிந்து கொள்ள முற்படுபவர்களால் மட்டுந்தான் அவர் தற்காலத்துக்கு 2000 ஆண்டுகளுக்கு முன்னான வள்ளுவத்தின் மீது அவர் தம் பொதுவான கருத்துக்களையும் குறிப்பிட்ட குறள்கள் மீதான கருத்துகளையும் சீர்தூக்கி ஆய்வுக்குட்படுத்த முடியும். அன்றி பொத்தாம் பொதுவாக வள்ளுவத்தைச் சாடிவிட்டார்; கழுந்துள்ளார் என்று மேம்போக்காகப் பேச முற்படுவதை வள்ளு வத்தையும் பெரியாரியத்தையும் முற்றும் புரிதலில்லாமல் வெளிப்படும் அறியாமை எனத்தான் கொள்ளப்படும்.

பெரியார் ஈ.வெ.இரா.வின் மக்கள் பற்று, மக்களின் தன்மான உணர்வையும் தடையற்ற விடுதலை உணர்வு டைய சிந்தனையையும் பெற்று, பேணிக்காத்து, கடைப்பிடித்து வாழவேண்டும் என்பதை உள்ளடக்கியதாகத்தான் இருந்து வந்திருக்கிறது. இதற்குத் தடையாக எதிர்கொள்ளப்படும்

எப்பொருளையும் கருத்தியலையும் கடுமையான வெளிப்படையான திறனாய்வுக்கு உட்படுத்திப் புறந்தள்ளிவிடுவதற்கு எதற்காகவெனினும் யாருக்காகவெனினும் சற்றும் தயங்காதவராகத்தான் அறியப்பட்டு வருகிறார் பெரியார். இதை இறை நம்பிக்கை, சமய நம்பிக்கை, இவை சார்ந்த வழிபாடு முறைகள், சமூக விழுமியங்கள் எனப் பல காலங்களாக பின்பற்றிவரப்படும் பண்பாடு பழக்கவழக்கங்கள் போன்ற எவையும் அவருடைய திறனாய்வுக்கு விதிவிலக்கல்ல. குறிப்பாக மனிதனின் தன்மானத்திற்கு, சமூக சம விடுதலைக்கு எதிரானவற்றை எள்ளி நகையாடுவார். என்புரிதலில், உலக வரலாற்றில், கண்ணில் கண்ட விதிவிலக்கற்று எப்பொருள் பற்றியும் பெரியார் போல் நம் கருத்தைப் பதிய வைத்திட ஒரு போதும் தவறாதவர் எவரும் இலர். அதே போன்று அதற்கான மாற்றுக் கருத்தையும் எதிர்கொள்ளவும் சற்றும் தயங்காதவர். அத்தன்மைத்தே மொழியாயினும், தமிழாயினும், அதன் செவ்விலக்கியங்கள், உலகளாவிய இலக்கணங்களுள் ஒப்பற்ற உயர் இலக்கணமான தொல்காப்பியம் என எவற்றின் மீதும் அவற்றைப் படிக்க நேரிடும் போதெல்லாம் அவரின் திறனாய்வுக் கருத்தைச் சொல்லிச் சென்றுள்ளார். அவ்வகையில் தமிழ்மொழி பற்றியும், தமிழ் எழுத்துக்கள் பற்றியும், தமிழ்க் காப்பியங்கள் பற்றியும் குறிப்பாகத் திருக்குறள், கம்பராமாயணம், சிலப்பதிகாரம் போன்றவை பற்றியும் பெரியார் பேசியுள்ளார். எனவே அவரது திறனாய்வுத் திறனை எந்த அடிப்படையில், பொருளில் பின்னணியில் எதற்காக என்பதையெல்லாம் கருத்துத்தளத்தில் எதிர்கொள்ளக் கையாலாகாதவர்கள் தான், மேலோட்டமாக பெரியாரைக் கொச்சைப்படுத்த முற்படுகின்றனர் எனக் கருதி இங்கு அவற்றைப் புறந்தள்ளிடுவோம்.

திருவள்ளுவர் அறிவு, அறன், அன்பு என்கிற முதன்மையான பொது அடித்தளத்தில் நின்றுதான் அரசு, சமூகம், இவற்றின் கூறுகள், தனிமனிதப் பண்புகள், நெறிகள் என்பன போன்ற எல்லாப் பொருள்கள் பற்றியும், சமூக மேம்பாட்டுக்கான உழவு, கல்வி ஆகியவற்றின் மேன்மை குறித்தும் ஆழமாகவும் விரிவாகவும் ஆய்ந்துரைத்துள்ளார் என்பதை உணரமுடியும். இதை விடுத்து அவரைச் சமயம், சமய நம்பிக்கை, இறை நம்பிக்கை என்பவற்றுள் சுருக்கிப் பார்க்க முற்படுவதைச் சிந்தனைப் பிறழ்வாகத்தான் கருதமுடியும்.

மன்னுயிர்க்கெல்லாம் மனிதகுலம் தோன்றி மற்ற உயிரினங்கள் எல்லாம் பெற்றிருந்திராத பகுத்துணரும் பகுத்தறிவான ஆறாம் அறிவைப் பெற்ற மனிதனாகி அவ்வறிவின் வளர்ச்சிப் போக்கின் ஊடே மனித அறிவு குறித்த இலக்கணத்தை பகுத்துப் படைக்கிறான் குறள்களாக வள்ளுவன் இவ்வாறு. (கூறியது கூறலை மீறுவதாகினும் அவை கீழே).

“எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பது அறிவு” (423)

“எப்பொருள் எத்தன்மைத் தாயினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பது அறிவு” (355)

இவ்விரு குறள்களுள் 'யார்யார் வாய்க்கேட்பினும்' என்பதும் 'எத்தன்மைத்தாயினும்' என இவ்விரு சொற்றொடர்கள் மட்டுமே மாற்றி அமைக்கப்பட்டுள்ளனவேயன்றி இவற்றிலுள்ள பிற சொற்றொடர்கள் மொழி மாறாமல் அப்படியே கூறியவை கூறல் என்ற தன்மையில் அமைத்துள்ளார் வள்ளுவர் எனில் 'கூறியது கூறல்' என்கிற வாக்கிய அமைவு இலக்கணத்தை மீறி-எவர் சொல்லினும், எதைச் சொல்லினும் அதுபற்றிய மெய்ப்பொருளை உணர முற்படுவதுதான் 'அறிவு' என்பதின் முதன்மை மேன்மை என வலியுறுத்தி அவ்விலக்கணப் பிழையையும் கொண்டே இச்செய்யுள்களை இயற்றிவிட்டார்.

ஆனால் இறை, இறை நம்பிக்கை, சமயம், சமய நம்பிக்கை இவையெல்லாம் அவை சொல்லும் எவற்றையும் 'அறிவு' கொண்டு கேள்விக்கே உட்படுத்தாது அப்படியே ஏற்றுக் கொள்ள வேண்டுமென்ற கோட்பாட்டைக் கொண்ட சொற்கள். எனவே அச்சொற்கள் வள்ளுவர் 'அறிவு'க்கு வகுத்தளித்த இலக்கண, வரம்புக்குள்ளேயோ, விளிம்பையோ வரவோ தொட்டிடவும் முடியாது விரட்டியடிக்கப்படுவதை எவராலும் உணர முடியும். இது ஒன்றே திருவள்ளுவர் இச்சொற்களுக்கெல்லாம் அப்பாற்பட்டவர் என்பதை உணர்த்தவில்லையா? பின் எப்படி இக்கயவர்கள் அவருக்குச் சமயச் சாயம் பூச முற்பட முயற்சிக்கின்றனர். முன்பே சொன்னது போல் இது இவர்களின் அறிவுப் பிறழ்வை வெளிப்படுத்துகின்றது.

பசிப்பிணி போக்கி உயிர்வாழப் பிச்சையெடுக்கும் நிலையில் உலகில் ஒரு தனிமனிதன் வைக்கப்பட்டுள்ளானெனில், அந்த உலகைப் படைத்தவன் அழிந்தொழிக என்கிறார் வள்ளுவர்.

“இரந்தும் உயிர்வாழ்தல் வேண்டின் பரந்து
கெடுக உலகியற்றி யான்” (1062)

வேறெவருக்கும் இக்குறள் பொருத்தப்பாடுடையதோ இல்லையோ-2019இல் உலகின் 117 நாடுகளில் பசிப்பிணியால் வாடும் மக்களை அளவீடு செய்து தரவரிசைப்படுத்திய ஓர் உலக நிறுவனம் இந்தியா 102-ஆம் இடத்தில் உள்ளது என்கிற புள்ளிவிவரத்தின் அடிப்படையில் இந்துத்துவப் பார்ப்பனியச் சனாதனக் காவிக்கும்பல் சொல்லும் இந்தியாவிலுள்ள கோடிக்கணக்கான கடவுள்கள் அழிந்தொழிவார்கள் என்ற வள்ளுவரின் கூற்றுப்படி, அவரை இந்து என இப்போது உயர்த்திப் பிடிக்கும் இக்கும்பல் அப்படிப்பட்ட கடவுள்கள் வேண்டாம் என்று ஒழிக்க முற்படுவார்களா? எனவே வள்ளுவர் 'இறை, நம்பிக்கை' என்ற வளையத்திற்கு வராதவர் என்றுணர வேண்டும். அதன் அடிப்படையில் குறளின் முதல் அதிகாரமான இறை வாழ்த்து இடைச்செருகல் என்றாகும்.

இந்தப் பகுத்தறிவு கொண்டு 'அறன்' நிலையைத் தான் உயர்த்திப் பிடித்து

“அறனெனப் பட்டதே இல்வாழ்க்கை அஃதும்
பிறன்பழிப்ப தில்லாயின் நன்று” (49)

“மனத்துக்கண் மாசிலன் ஆதல் அனைத்தறன்
ஆகுல நீர பிற” (34)

“அறத்தான் வருவதே இன்பம் மற்றெல்லாம்
புறத்த புகழும் இல” (39)

“மழித்தலும் நீட்டலும் வேண்டா உலகம்
பழித்து ஒழித்து விடின்” (280)

“அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை
பண்பும் பயனும் அது” (45)

என இக்குறள்களில், வள்ளுவர் அறத்திற்கு இலக்கணம் வகுத்து வழங்கியதுடன் அன்புடன் அறத்தையும் இணைத்துக் கடைப் பிடித்து வாழ்வதுதான் உயர் பண்புடனான பயன் பெற்ற தாகும் என வரையறுக்கின்றார். பொதுமைக் கோட்பாட்டைக் கடைப்பிடிப்பதின் சிறப்பியல்பை 2000 ஆண்டுக்கு முன் அவர் வாழ்ந்த காலத்திலேயே எடுத்துரைக்கின்றார்.

“பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல் நூலோர்
தொகுத்தவற்றுள் எல்லாம் தலை”

இதில் மானுடர்க்கான பொதுமையுடன் உயிரினங்கள் அனைத்துக்குமான பொதுமையை வலியுறுத்துகின்றார் வள்ளுவர். இதில் மண்ணுயிர்கள் அனைத்தின் நலம் பேணும் அறிவு, அறன், அன்பு இவையாவும் உள்ளடக்கப்பட்டுள்ளது. அன்றைய சமூகச் சூழலில் உயிரினங்களிடையே குறிப்பாக மனிதர்களிடையே வேறுபாடுகள், இல்லாமை, சிலரிடம் செல்வக் குவிப்பு என்றெல்லாம் இருந்திருக்கலாம் என எண்ணத் தோன்றுகிறது. அதனைக் கருத்திற்கொண்டுதான் வள்ளுவர் பொதுவாக உயிர்களுக்கு அடிப்படைத் தேவையான இயல்பாக, இயற்கையாகக் கிடைக்கும் வளி, வெளி, நீர், நிலம், நெருப்பு தவிர்த்து முதன்மையான அடிப்படைத் தேவை உணவு. அனைத்து உயிர்களுக்கும் கிடைக்கும் வகையில் பகிர்ந்து உண்ணப்பட வேண்டும் என்பதுடன் அவையாவும் பேணப்பட வேண்டும் என்கிறார். இச்செயல் பேணப்பட்டால்தான் அது தொடர்ந்து நிலைத்து நீடித்திருக்கும் என்பதை ‘ஓம்புதல்’ என்ற ஒரு சொல்லின் ஊடாக உணர்த்துகிறார். மேலும் இச்செயல்-அறன்சார் சான்றோர்கள் சொன்னவை எல்லாம் என்று சொல்லாமல், அவற்றுள் சிறப்பியல்பானவற்றைத் தான் தொகுக்கப்படும் என்ற தன்மையில், அதற்கெல்லாம் தலையானது முதன்மையானது என்றுரைக்கிறார்.

இதில் நாம் உணர்ந்து கொள்ள வேண்டியவை, வள்ளுவர் தம் கருத்துக்களை, மக்கள் சமூகத்தின் முன் வைத்துச் செயல்பட வேண்டுமென்று வலியுறுத்துகின்றாரே அன்றி, மண்ணுயிர்க்கப்பாற்பட்ட எதனிடமும் இறைஞ்ச முற்பட்டார் இல்லை. இறைக்கோட்பாட்டைச் சொல்லும் உலகிலுள்ள எல்லாச் சமயங்களுக்கும் அவர் விடுகின்ற அறைகூவல் எனத்தான் கொள்ளமுடியும். இதில் குறிப்பாக மனித சமூகத்தைக் குறுக்கும் நெடுக்குமாக கூறுபோட்டு அவற்றுள் ஏற்றத்தாழ்வை ஏற்றி வெகுமக்களை வஞ்சித்து உறிஞ்சிக் கொழுக்கும் ஒரு சிறு கூட்டத்தின் நலனையே உயர்த்திப் பிடிக்கும் பார்ப்பனச் சனாதன இந்து சமயத்திற்கு இது ஒரு சம்மட்டி அடி, மரண அடி-இந்திய ஒன்றியத்தில் 20 கோடி மக்களுக்கும் மேலாக பசிப்பிணியில் வாடி வதங்கிக் கொண்டிருக்கும் மக்களைப் பரிதவிக்கவிட்டு விட்டு, இந்துச் சமயத்தின் பேரால் காவிக்கும்பல் அரசின் அலகுகளான சட்டமன்றம், நிருவாகம், அறத்துறை என்று சொல்லப்படுவதும், நான்காம் அலகான ஊடகங்களும், பல இலக்கம் ஆண்டுகளுக்கு முன் காப்பிய இராமன் மாந்தன் என்பவனை அவன் தாய் மசூதி இருந்த இடத்தில்தான் பெற்றெடுத்தாள் என்ற நம்பிக்கையின் அடிப்படையில் அவனுக்கு அந்த இடத்தில் தான் பல ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பீட்டில் கோவில் கட்டுவோம் என்று வெறிபிடித்து அலைகின்றனர். இவர்களுக்கு அடிவருடிகளாக உள்ள பா.ச.க.வின் தமிழ் நாட்டுக் கிளை திருவள்ளுவருக்குச் சமய வண்ணம் பூச முனைவது அறிவுக்கு எட்டக்கூடியதாக எவருக்கேனும் தோன்றுமா? இது அறச்செயலா என்ற வினாவை இவர் களுக்கு முன் வைக்கத்தக்க தகுதி அறவே அற்றவர்கள் இவர்கள் என்பதாகத்தான் அவர்களின் செயல்பாடுகளால் நிறுவி வருகின்றனர்.

வள்ளுவர் உளம் மிகு தோய்ந்து அறிவு, அறம், அன்பு மூன்றையும் ஒரு சேர அவற்றின் சிறப்பியல்புகளையும், ஒன்றுக்கொன்று உறுதொடர்பான பண்புகளையும் மனித சமூகத்திற்கு உணர்த்துவதற்குப் பல்வேறு குறள்களைப் படைத்துள்ளார். அவற்றுள் கீழேயுள்ள குறளின் மேன்மை குறித்து குறிப்பாக அதன் மானுடவியல், சமூகவியல், அறிவியல், பொருளியல், பொருத்தப்பாடுகள் பற்றியும் இத்துறை சார்ந்த வல்லுநர்கள், அறிஞர்கள் பல காலக்கட்டங்களில் ஆழமாக வும், விரிவாகவும் ஆய்வுக்குட்படுத்தியுள்ளனர். இக்கட்டுரை யின் நிறைவாக அந்தக் குறள் குறித்து சில கருத்துக்களை முன்வைக்க முனைகிறேன்.

“பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் சிறப்பொவ்வா
செய்தொழின் வேற்றுமை யான்” (972)

இதற்கு, மண்ணுயிர்கள் எல்லாம் உயிருடையவை என்ற தன்மையில் அனைத்தும் ஒப்பானவையே. ஆனால் இவ் உயிரினங்கள் புரியும் தனித்தனித் தன்மையுடைய வெவ்வேறு செயல்களால் இவை யாவும் ஒப்பாகா எனப் பொதுவாகப் பொருள்கொள்ளப்படுகின்றது. இதில் ஒவ்வொரு வரும் மேற்கொள்ளும் பணிகள் வெவ்வேறு வகையானவை என்பதால் ஒரு உயிர் என்ற அளவில் அனைத்தும் ஒப்பான வை என்றாகினும் செயலளவில் வேறானவை. இந்தச் செயல் வேறுபாடு ஒவ்வொரு உயிருக்கும் வேறானது என்பதைத் தான் குறிப்பிடப்படுகிறது. ஆனால் பார்ப்பனச் சனாதனக் கூட்டம் தனிப்பட்ட உயிர்களின் வேறுபாட்டை ஒன்றிணைத்து, குழுக்களின் செயல் வேறுபாடுகள் என உள்நோக்குடன் திரித்து அத்தன்மையிலே இந்துத்துவக் கீதை சொல்லும் நால்வருணப் பிரிவுகளைத்தான் இக்குறள் குறிக்கிறது என்கின்றது. இந்துச் சமய, இந்துத்துவக் கோட்பாட்டை இழிவானது என்ற கருத்துடைய அம்பேத்கர், கீதையைக் கிறுக்கனின், முட்டாளின் உளறல் என்றுதான் சொல்வார். ஆனால் இந்துச் சமயத்தை ஏற்றிப் பிடிக்கும் விவேகானந்

தரும், அம்பேத்கர் கருத்தான கீதை முட்டாள்களின் உளறல் என்பதை ஓங்கி உரைக்கிறார். எனவே சமூகத்தைக் குறுக்கு நெடுக்காகக் கூறுபோட்டு குழுக்களாக வருணத் தொகுப்பாக்கி பிறப்பின் அடிப்படையில் ஏற்றத்தாழ்வு கற்பிக்கும் கொலைக் கருவியான கீதையுடன் திருக்குறளை ஒப்பிடுவது வக்கிரத்தின்-வஞ்சத்தின் உச்சம் என்றுதான் சொல்ல வேண்டும். பெரியாரியல் அறிஞர் தோழர் வே. ஆனைமுத்து இக்குறளுக்கு மிக நுட்பமான ஆய்வுக்குரிய கருத்தைத் தருகிறார்.

வள்ளுவர், மண்ணுயிர்கள் எல்லாம் பிறப்பால் உலகளவில் உணர்த்திடாத உயர் ஒப்பானவையே என்ற கருத்தை உலகிற்கு உரைக்கின்றார். அதாவது, ஓர் அறிவு, ஈரறிவு என ஆறு அறிவுடை புல், பூண்டு, புழு, புள், விலங்கு, மனிதன் என உயிரினங்கள் யாவும் ‘உயிர்’ என்ற ஒற்றை அலகில் மட்டும் ஒத்தவையே. வேறுபாடற்றவையே என்கிறார். ஆனால் ஏனைய உயிரினங்கள் எவையும் அவற்றிற்குள்ள அறிவு ஆற்றலைக் கொண்டு, எப்பொருளையும் செய்யவோ, படைக்கவோ இயலாதவை என்பதைச் ‘செய்தொழில்’ என்ற சொற்றொடரால் குறித்துவிட்டு, ஆனால் மனித உயிரினம் மட்டுமே பொருள்களைச் செய்யவும் படைக்கவும் அறிவும் ஆற்றலும் கொண்டது.

அவ்வகையில் மற்ற உயிரினங்களிலிருந்து வேறுபட்டுச் சிறப்பியல்பைக் கொண்டுள்ளது என்பதைக் குறிப்பிடுவதற்காகவும், அவை மனித இனத்திற்கு ஒப்பானவை அல்ல என்பதை வலியுறுத்துவதற்கும் அனைத்து உயிரினங்களும் ‘உயிர்’ என்ற ஓர் அலகில் ஒப்பும் என்றாலும், மனித இனம் சிறப்பான தன்மையுடைய ‘செய்தொழில்’ என்ற அறிவு ஆற்றல் கொண்டவன் என்பதால் அனைத்து உயிரினங்களையும் ஒரு நிரையில் வைத்திட முடியாது என அவற்றினிடையே ‘சிறப்பொவ்வா’ என்ற சொல்லை ஆளுகிறார் திருவள்ளுவர்.

எனவே, இச்சீரிய கருத்தின் படியும் சனாதனக் கும்பல், உயர் அறிவு, அறன், அன்புசார் குறளை எந்நிலையிலும் கொலையைத் தருமம் என்றும் மானுடத்தைப் பிளவுபடுத்தி அவற்றுள் ஏற்றத்தாழ்வு கற்பிக்கும் இழிநூலான கீதையை எவ்வகையிலும் ஒப்பீட்டுக்கு எடுத்துக்கொள்ள முற்படுவது அறியாமை, அறிவீனம் என்று மட்டும் ஒதுக்கிவிட முடியாது. தமிழகம், கேரள மாநிலங்கள் தவிர இந்திய ஒன்றியத்தின் பிற மாநிலங்களிலெல்லாம் வகுப்புவாத சமய வெறியை ஊட்டி பொய்மை வளர்ச்சி பெற்றிருந்த போதிலும், இங்கு அது காலூன்ற நயவஞ்சகத்துடனும் கயமையுனும் உள்நோக்கத்தினுடனானது தமிழக பா.ச.க. திருவள்ளுவரைக் கையிலெடுத்துக் கொண்டது என உணர்ந்து கொள்ள வேண்டும்.

தமிழகத்தில், கேரளத்திலும் கூட வள்ளுவம் வெகுமக்கள் உள்ளத்தில் உள்வாங்கிக் கொள்ளப்பட்ட அறிவுப் பெட்டகம், அறத்தின் விழுமியங்கள்-அன்பின் ஊற்று எனும் பொதுமறை நூல். அதன் எந்தப் பக்கமும் எந்தக் குறளும் வாழ்க்கைக்கான சமூக மேன்மைக்கான, மேம்பாட்டுக்கான கோட்பாடுகளையும் கொள்கைகளையும் கருத்துகளையும் வாரி வாரி வழங்கிடும் தன்மை கொண்ட வழிகாட்டு நூல். எனவே கருத்தியல் தளத்திலிருந்து திருவள்ளுவரை எதிர்கொள்ளவியலாத கயவர்கள், அவர் உருவின் மேல் எந்த வண்ணத்தையும் பூசினும், சேறை இறைப்பினும் அவரின் உள மாண்பை ஒரு நூலிழைகூட, எள் முனை அளவுகூட குறையவிடாது, அவரின் வள்ளுவம் அரணாகக் காத்து நிற்கும்.

மேலும் ‘உள்ளுவதெல்லாம் உயர்வுள்ளல்’ என்ற அவரின் கோட்பாட்டுத் தளத்திலிருந்து அவர்தம் அறிவு நெறி, அறநெறி, அன்பு நெறி காலமும் கடந்து நின்று நிலைத்திருக்கும். இதில் இந்த அற்பப் புல்லர்களான மேற்சொன்ன நெறிகளுக்கெல்லாம் எதிராக புன்மையான-கீழ்மையான தருமம் எனும் இழி கொலை நூலைத் தாங்கிப் பிடிக்கும் பாசிச இந்துத்துவ பார்ப்பனச் சனாதன அடிவருடிகளாக உள்ள பாரதியச் சனதாக் கட்சியின் சுவடு கூடத் தமிழ் மண்ணில் படமுடியாது என்பது திண்ணம்.

இருப்பினும் இங்கொன்றும் அங்கொன்றுமாகக் காணப்படும் சில சொற்களைக் கொண்டு அவற்றின் பின்புலம், உள்ளார்ந்த பொருள்களையெல்லாம் உணர்ந்திட வக்கற்ற இந்தக் கூட்டம், சமயச் சாயம் பூசிடவும் முனைவது அறிவீனத் தின் உச்சம் என்பதை வள்ளுவம் உணர்த்தும். பெரியாரின் மெய்யறிவுசார் ஆய்வின் அடிப்படையிலான திருவள்ளுவரின் காலக்கட்டத்திற்கான பெண்ணியம்-பார்வை, ஊழ் போன்றவற்றின் மீதான மாறுபட்ட கருத்தைக் கருத்துத் தளத்தில் எதிர்கொள்ளத் திராணி அற்ற இந்தக் காவிக் கூட்டம், தம் கொச்சைச் சொற்களால் அவர்களின் சிறுமையை வெளிப்படுத்துகின்றன.

மேற்சொன்னவை விடுத்து வள்ளுவத்தின் உயர்வைப் பரப்பிட அவர் குறட்பாக்களைப் பகுதி பகுதியாகப் பகுத்துப் பள்ளிக் கல்வியில், உயர்கல்வியில் அவர்களுக்கேற்ற தர அளவில் பாடங்களில் சேர்க்கப்பட்டு அனைத்துச் சமூக மக்கள் வாழ் நெறியை மேம்படுத்திடவும் வழிகாண வேண்டுமென வலியுறுத்திய வேலைத்திட்டம் அறியா மூடர்கள் இந்த காவிக் கும்பல் கூட்டம்.

திருவள்ளுவரின் உருக்குறித்து இதுகாறும் சற்றும் எண்ணிப் பார்க்காத இக்கயமைக் கூட்டம், இதுவரை பொது வெளியில், ஏன் ஊடகங்களிலெல்லாம் திரைக்காட்சி ஊடகங்களிலெல்லாம் காண்பிக்கப்பட்டிருந்ததையெல்லாம் அறியாதது போல் திடீரென செப்டம்பர் 2019-இல் இருந்து ஏன் தலை விரித்தாடுகிறது? இவர்களின் வாக்கரசியலுக்கு வேறு வழியே இல்லாததை உணர்ந்து கொண்டு, திருவள்ளுவரையும் கையில் எடுத்துள்ளது தமிழக பா.ச.க. பாசிசக் கூட்டம். திருவள்ளுவரின் வள்ளுவத்தின் உள்ளீடான அறிவு, அறம், அறன்சார் நெறிகள் இவர்களைத் தோலுரித்துக் காட்டிடும். இவர்கள் சாயம் வெளுத்திடும்.

எனவே மொழி, இனம், சமயம், இறைநம்பிக்கை கடந்து நிற்கும் திருவள்ளுவரை இவற்றுள் நிறுத்திட முனைபவர் படுதோல்வியுறுவர் என்பது உறுதி.

# நெல்லுக்கான ஆதரவு விலை: குவிண்டாலுக்கு ரூ.3000 என அரசு நிர்ணயிக்க வேண்டும்

பூலாம்பாடி **கு. வரதராசன்,** தலைவர், திருவள்ளுவர் உழவர் மன்றம்

**மா**நில அரசு நெல்லுக்கான ஆதரவு விலை-சன்னரக நெல்லின் ஆதார விலை ரூ.70/-; பொது ரக நெல்லின் விலை ரூ.50/- உயர்த்தப்பட்டு அறிவிக்கப்பட்டுள்ளது. இதைத் தொடர்ந்து மத்திய அரசும் சன்னரக மற்றும் பொது ரக நெல் குவிண்டால் ஒன்றுக்கு தலா ரூ.65/- ஊக்கத் தொகை யாக வழங்கப்படும் என அண்மையில் அறிவித்தது. இதன்படி ஒரு குவிண்டால் சன்னரக நெல் ரூ.1905/- ஆனது. பொது ரக நெல்லின் விலை ரூ.1865/- ஆனது. நெல்லுக்கான இந்தப் புதிய கொள் முதல் விலை 2019 அக்டோபர் 1-ஆம் தேதி முதல் செப்டம்பர் 2020 வரை நடைமுறைப்படுத்தப்படும் என அரசு அறிவித்துள்ளது. மத்திய, மாநில அரசுகளின் இந்த அறிவிப்பு விவ சாயிகளிடையே பெரும் ஏமாற்றத்தையே ஏற்படுத்தியுள்ளது.

விவசாயத் தொழிலாளர்களின் கூலி, டீசல் விலை, இயந்திர தளவாடங்களின் வாடகை, டி.ஏ.பி. உரம் விலை ஏற்றம்; யூரியா தட்டுப்பாடு, தண்ணீர்த் தட்டுப்பாடு ஆகியவற்றை மத்திய மாநில அரசுகள் கருத்தில் கொள்ளாததுதான் நெல்லுக்கான விலை நிர்ணய குளறுபடிகளுக்குக் காரணம். மேலும் சந்தையில் பொன்னி அரிசியின் விலை ஒரு கிலோ ரூ.50/- என விற்பனை யாகின்றது. இதன்படி கணக்கிட்டால் ஒரு கிலோ நெல்லுக்கு அரசு விலை ரூ.25/- என நிர்ணயிக்க வேண்டும். ஆனால் தற்போது ஒரு கிலோ நெல்லுக்கு ரூ.19/- மட்டுமே விலையாக நிர்ணயிக்கப்பட்டிருப்பது எந்த வகையிலும் நியாயம் இல்லை.

**ஒரு ஏக்கர் நெல் சாகுபடி செலவு விவரம்**

| | | |
|---|---|---|
| விதை நெல் 30 கிலோ | ரூ. | 1000 |
| நாற்றுக்கு உழவு | ரூ. | 1000 |
| உழவு 5 மணிநேரம் | ரூ. | 5000 |
| பரம்பு | ரூ. | 1000 |
| வரப்பு கட்ட 4 ஆள் | ரூ. | 1600 |
| நடவுக் கூலி | ரூ. | 3000 |
| மேல் உரம் யூரியா 2 மூட்டை | ரூ. | 600 |
| டி.ஏ.பி. உரம் 1 மூட்டை | ரூ. | 1300 |
| சிங் சல்பேட் 10 கிலோ | ரூ. | 700 |
| நுண் சத்து | ரூ. | 500 |
| களையெடுக்கும் போது அம்மோனியம் சல்பேட் | ரூ. | 750 |
| டி.ஏ.பி. உரம் 1 மூட்டை | ரூ. | 1300 |
| பொட்டாசியம் ½ மூட்டை | ரூ. | 475 |
| களையெடுக்கும் கூலி | ரூ. | 2000 |
| பயிர்ப் பாதுகாப்பு - மருந்து | ரூ. | 1500 |
| மருந்து அடிக்க | ரூ. | 1200 |
| அறுவடை செலவு | ரூ. | 1800 |
| | ரூ. | 24625 |

மேற்கண்ட செலவில், 4 மாதங்கள் அறுவடை வரை வயலுக்கு நீர் பாய்ச்சுவது, எலித் தொல்லையைக் கட்டுப் படுத்துவது, வரப்பு புல்லறுப்பது இதில் நடவில் இருந்து 3 மாதங்கள் மட்டும் நாளொன்றுக்கு ரூ.100/- கூலி நிர்ணயம் செய்து கணக்கிட ரூ.9000/- ஆகும். இதில் விவசாயக் கூலி யாள்களுக்கு குறைந்தபட்ச கூலியே கணக்கிடப்பட்டுள்ளது.

நெல் சாகுபடி செலவு ரூ.24,625/- + விவசாயியின் கூலி ரூ.9000/- ஆக ரூ.33,625/- ஆகிறது. தமிழக அரசின் பண்ணை நிர்வாகத்தில் ஒரு கிலோ நெல்லுக்கான உற்பத்திச் செலவு ரூ.27.50 என குறிப்பிடப்படும் நிலையில், விவ சாயிகளின் கோரிக்கையை ஏற்று கர்நாடகம், கேரளம் மற்றும் ஆந்திர மாநில அரசுகளைப் போல தமிழக அரசும் நெல்லுக் கான ஊக்கத் தொகையை உயர்த்தி வழங்க வேண்டும்.

பயிர்க்கடன் 1 ஏக்கர் நெல் சாகுபடிக்கு ரூ.33,500/- இதனை பொதுத் துறை வங்கி மற்றும் கூட்டுறவு விவசாயச் சங்கங்கள் வழங்குகிறது. 20 குவிண்டால் நெல் மகசூல் கிடைக் கப்பெறின் ரூ.38,100/- கிடைக்கும். எம்.எஸ்.சுவாமிநாதன் அறிக்கையின்படி உற்பத்திச் செலவுடன் 50 சதவீதம் இலாபம் சேர்த்து கொள்முதல் விலை நிர்ணயிக்க வேண்டும். மத்திய அரசாவது ஊக்கத் தொகையை உயர்த்தி வழங்க வேண்டும் என எதிர்பார்த்த விவசாயிகள் ஏமாற்றம் அடைந் துள்ளோம்.

மேற்கண்ட அனைத்துச் செலவுகள் செய்தும், ஒரு ஏக் கரில் 25 முதல் அதிகபட்சமாக 30 மூட்டை நெல் (77 கிலோ எடை கொண்டது) கிடைக்கும். சற்றொப்ப 20 குவிண்டாலாகக் கணக்கிட்டாலும் அரசு விலைப்படி ரூ.38,100/- கிடைக்கும். வேளாண் அறிஞர் எம்.எஸ்.சுவாமிநாதன் அறிக்கை விவசாய உற்பத்திச் செலவை விட விவசாய விளைபொருள்களுக்கு 50 விழுக்காடு கூடுதலாக விவசாயிகளுக்குக் கிடைக்க ண்டேும் என்று குறிப்பிடுகிறது.

**நெல்லுக்கான ஊக்கத் தொகை அறிவிப்பை மறு பரிசீலனை செய்து, மத்திய, மாநில அரசுகள் உயர்த்திட வேண்டும். நெல் விலை குவிண்டால் ஒன்றுக்கு ரூ.3000/- வழங்க வேண்டும் என மிக்கப் பணிவுடன் வேண்டுகிறோம்.**

### கண்டமங்கலம் தோழர் **மா.முத்தமிழனின்** தந்தையார் தோழர் **அ.மாணிக்கம்** மறைவு

மார்க்சியப் பெரியாரியப் பொதுவுடைமை கட்சியின் கண்டமங்கலம் தோழர் மா.முத்தமிழனின் தந்தையார் தோழர்.அ.மாணிக்கம் அவர்கள் உடல்நலக்குறைவால் 5.11.2019 அன்று இயற்கை எய்தினார். ‘‘அன்னாரின் உடலும் கண்களும் மருத்துவமனைக்கு கொடையாக வழங்கப்பட்டது. மேலும் அவரின் நினைவேந்தலும் படத் திறப்பும் 20.11.2019 அன்று கண்டமங்கலம் வெட்டுவாய்க் காலில் உள்ள அவரின் இல்லத்தில் தோழர் பா.மோகன் அவர்களின் தலைமையில் தோழர் புதுச்சேரி திருநாவுக்கரசு அவர்கள் படத்தை திறந்து வைத்து நினை வேந்தல் உரையாற்றினார். நிகழ்வில் தோழர் பசுமை வளவன், தோழர்.செந்நீநாகவரசன்,தோழர் த. பழநிசாமி, தோழர். சக்திவேல் இராவணன் தோழர் சதீசு குமார், தோழர் தி.துரை சித்தார்த்தன் ,தோழர் மா.முத்தமிழ் ஆகியோர் இரங்கல் உரையாற்றினர்.‘‘நிகழ்வில் சிந்தனையாளன் வளர்ச்சி நிதியாக ரூபாய் ஆயிரம் அளிக்கப்பட்டது.

# கொள்கை மறவர் நாத்திக நந்தனார்

## 19.11.2017-பத்தாம் ஆண்டு நினைவு நாள்

தங்க. சங்கரபாண்டியன்

**என்** 40 ஆண்டுகால நெருங்கிய நண்பர் ‘கொள்கைவேள்’ தோழர் நாத்திக நந்தனார். நாத்திகக் கொள்கையால் நாங்கள் இணைந்தோம். எங்கள் நட்பு அவர் மறையும் வரை நீடித்தது. கடைசி வரை அவர் என்பால் பொழிந்த அன்பை மறக்கவே முடியாது.

1968-ஆம் ஆண்டிலேயே அவரை நான் அறிந் திருந்தாலும், 1971-இல் ‘அறிவியக்கப் பேரவை’ தோற்று விக்கப்பட்ட போதுதான் இவரோடு பழக்கம் ஏற்பட்டது. பேராசிரியர் சாலை இளந்திரையன் இந்த அமைப்பின் அமைப்பாளர். அவர் தில்லியில் வசித்ததால் ஆண்டுக்கு ஒருமுறைதான் தமிழகம் வருவார். மே மாதம் முழுக்க அவர் இங்கிருப்பார். இந்த அமைப்பின் தொடக்கக்கால பொதுச் செயலாளராக நானும் நண்பர் நாத்திக நந்தனாரும் நியமிக்கப்பட்டோம். சில ஆண்டுகளிலேயே நான் ‘அறி வியக்கப் பேரவை’யிலிருந்து ஒதுங்கிக் கொண்டேன். ஆனால் நண்பர் நாத்திக நந்தனார் மட்டும் கடைசி வரை அந்த இயக்கத்தின் பொதுச் செயலாளராகத் தீவிரப் பணியாற்றினார். நான் அந்த அமைப்பை விட்டு ஒதுங்கிக் கொண்ட போதும் அவர் என்னை வெறுக்க வில்லை; பகைக்கவில்லை. அவர் மறையும் வரை எங்கள் நட்பும் நீடித்தது.

‘அறிவியக்கப் பேரவை’யின் சார்பில் இவர் பல ஆண்டுகள் தீவிரப் பணியாற்றினார். அந்த அமைப்பின் சார்பில் நிறைய பொதுக் கூட்டங்களையும் மாநாடு களையும் கருத்தரங்குகளையும் அறிஞர் பெருமக்களைக் கொண்டு ஏற்பாடு செய்து மக்களின் சிந்தனையில் ஓர் மாற்றத்தை ஏற்படுத்தக் கடுமையாகப் போராடினார்.

‘அறிவியக்கப் பேரவை’யின் சார்பில் நூல்களும் ஏடுகளும் வெளியிடப்பட்டன. அவைகளை முன்னின்று நடத்திக் காட்டியவர் தோழர் நாத்திக நந்தனார். ‘அறி வியக்கம்’ எனும் மாத ஏடு ‘அறிவியக்கப் பேரவை’ யால் பல ஆண்டுகள் வெளியிடப்பட்டது. அந்த ஏட்டின் ஆசிரியராகப் பொறுப்பேற்றும் வெளியீட்டாளராகப் பொறுப்பேற்றும் திறம்படச் செயலாற்றியவர் தோழர் நந்தனார். இந்த ஏட்டின் சிறப்பாசிரியர் பேராசிரியர் சாலை இளந்திரையன். சில ஆண்டுகள் திருமதி. சாலினி இளந்திரையனை சிறப்பாசிரியராகக் கொண்டு ‘மனித வீறு’ என்னும் இதழ் நடத்தப்பட்டது. இந்த ஏட்டையும் தம் பொறுப்பில் சிறப்பாக நடத்திய பெருமை தோழர் நந்தனாருக்கு உண்டு.

1971-ஆம் ஆண்டில் அப்போது சென்னைப் பல் கலைக்கழகத் துணைவேந்தராய் இருந்த திரு.நெ.து.சுந்தர வடிவேலு அவர்கள் தலைமையில் தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சார்ந்த பெண் மணியை இவர் சாதி மறுப் புத் திருமணம் செய்து கொண் டார். இவரின் திருமணத் தில் வரவேற்புரை ஆற்றும் அரிய வாய்ப்பு எனக்கு அந்த இளமைக் காலத்திலேயே கிடைத்தது. இவர் சாதி மறுப் புத் திருமணம் செய்து கொண்டதோடு இல்லாமல் தம் பிள்ளைகள் இருவருக் கும்சாதிமறுப்புத் திருமணமே செய்து வைத்தார். இவரின் மகளின் திருமணத்திலும் வாழ்த்துரை வழங்க எனக்கு வாய்ப்பளித்தார் தோழர் நந்தனார்.



சாதி ஒழிப்பில் அவர் தீவிர ஆர்வம் காட்டினார். கடவுள் நம்பிக்கை இல்லாதவராகவே இவர் கடைசி வரை வாழ்ந்தார். கருப்புச் சட்டை அணிந்து பெரியாரின் தொண்டராகத் தம்மை அடையாளப்படுத்திக் கொண்டார்.

மூடநம்பிக்கை ஒழிப்பிலும் இவர் தீவிர ஆர்வம் காட்டினார். சடங்கு முறையில் நடைபெற்ற எந்த நிகழ்விலும் இவர் கலந்து கொண்டதே கிடையாது.

பெரியாரின் நாத்திகக் கொள்கைகளில் அளவற்றுப் பற்றுக் கொண்ட இவர், 1960-களில் பெரியாரிடமிருந்து சூழ்ச்சியாளர்களால் விலக்கப்பட்ட ‘சுயமரியாதைச் சுடரொளி’ தோழர் குத்தூசி குருசாமியுடன் இவரும் பெரியார் இயக்கத்தை விட்டு வெளியேறினார். தோழர் குத்தூசி குருசாமியால் தோற்றுவிக்கப்பட்ட சுயமரியாதை இயக்கத்தில் இவர் சேர்ந்தார். தோழர் குத்தூசியாரின் சொற்பொழிவுகளைக் கேட்டதோடு அவரின் எழுத்து களையும் இவர் ஆர்வத்தோடு படித்தார். குத்தூசி, அறிவுப்பாதை ஆகிய ஏடுகளின் உறுப்பினராகி அந்த ஏடுகளைப் படிப்பதில் தனி ஆர்வம் காட்டினார்.

‘அறிவியக்கப் பேரவை’யில் சேருவதற்கு முன்னா லேயே இவர் குத்தூசியார் சுயமரியாதைக் கொள்கைப் பரப்புக் குழு எனும் பேரால் துண்டு வெளியீடுகளை ஆயிரக்கணக்கில் அச்சிட்டுப் பரப்பினார்.

**நண்பர் நாத்திக நந்தனார் ஆரம்பக் கல்வியைக் கூட முடிக்காதவர். முடிவெட்டும் கடையை வைத்து நடத்தி வந்த முடிவெட்டும் தொழிலாளியே தோழர் நந்தனார் என்றால் வியப்பாக உள்ளதல்லவா? ஆம்! அவர் ஒரு முடிவெட்டும் தொழிலாளிதான்.**

**என்றாலும் நாத்திகக் கொள்கை மறவராக அவர் கடைசி வரை விளங்கினார். நாத்திகப் பிழம்பு என்றும் இவரைச் சொல்லலாம்.**

அவரை நான் முதல்முறையாகச் சந்தித்த போது மிகவும் இளைஞரான அவர் முடிவெட்டும் தொழிலையே செய்து வந்தார். இவர் பிறந்து வளர்ந்ததெல்லாம் வண்டலூர்-ஓட்டேரிப் பகுதிதான். புதுப்பெருங்களத்தூர் தொடர்வண்டி நிலையத்தின் அருகில் இவர் தம் கடையை நடத்தி வந்தார்.

தம் இளமைக் காலத்திலே இவர் தம் தந்தையாரை இழந்தார். அதன் பொருட்டு குடும்பத்தைக் காப்பாற்றும் பொறுப்பு இவருக்கு ஏற்பட்டது. நல்ல முறையில் தொழில் செய்து இவர் தம் தாயையும் சகோதரிகளையும் காப்பாற்றினார். வண்டலூர்-ஓட்டேரி பகுதி அப்போது முன்னேற்றம் அடையாத காலம். வண்டலூர் உயிரியல் பூங்கா அமையாத காலம். அந்தக் காலத்தில் இவர் ஓர் ஓலைக் குடிசை வீட்டில் வாழ்ந்தார்.

ஒருமுறை நான் அந்தக் குடிசை வீட்டுக்குப் போயிருக்கிறேன். இவர் என்னை நள்ளிரவு நேரத்தில் நான் தங்கும் பொருட்டு என்னை அக்குடிசை வீட்டுக்கு அழைத்துச் சென்றார். குடிசையின் கதவைத் திறந்து விளக்கைப் போட்டார். அங்கே ஒரு பெரிய மர பீரோவில் நிறைய புத்தகங்கள் பைண்டு செய்யப்பட்டு அடுக்கி வைக்கப்பட்டிருந்தன. குத்தூசி, அறிவுப்பாதை போன்ற அறிவியக்க ஏடுகளை இவர் பைண்டு செய்து பாதுகாத்ததோடு அவற்றைப் பயிலவும் செய்தார். இவர் படிப்பதற்கு அந்தக் குடிசை வீட்டில் ஒரு மேசையையும் நாற்காலியையும் வாங்கிப் போட்டிருந்தார். மேஜையில் டேபிள் லைட்டையும் பொருத்தி இருந்தார். பள்ளிக் கல்வி இல்லாத தோழர் நந்தனாரின் படிப்பார்வம், வியக்கத்தக்கது. இன்றைக்கும் அவரின் படிப்பார்வம் என்னை வியக்க வைத்துக் கொண்டுள்ளது.

பல ஆண்டுகளுக்கு முன் தம் மாமன் மகளான மீஞ்சூர்-நெய்தவாயிலைச் சேர்ந்த தம்பி மகேந்திரனை எனக்கு அறிமுகம் செய்து வைத்தார். மீஞ்சூரில் உள்ள தம் மாமா வீட்டுக்கு வரும் போதெல்லாம் மணலி புதுநகர் வந்து என்னைச் சந்திக்காமல் போகமாட்டார். நானும் அவர் நெய்தவாயிலுக்கு வரும்போதெல்லாம் அவரைத் தேடிப் போய் பார்ப்பதும் உண்டு.

என்மீது அவர் காட்டிய பேரன்பு உண்மையில் ஈடுஇணை இல்லாததாகும். என்னைப் பற்றிப் பெருமையாக எல்லாரிடமும் சொல்லுவார். அவர் இறப்பதற்குச் சில ஆண்டுகளுக்கு முன்பாகவே அவர் பாரிச வாயு நோயால் பாதிக்கப்பட்டுச் சிதைந்த கோட்டையானார். அவருக்கு உடல்நலக் கோளாறு ஏற்பட்ட போதும் அவர் அந்த நோயுடனேயே அறிவியக்கப் பணியாற்றினார்.

பிறகு திடீரென ஒருநாள் அவர் மறைந்துவிட்ட தகவலை நண்பர் சிலர் தெரிவித்தனர். அவரின் மறைவை என்னால் இன்றுவரை செரித்துக் கொள்ளவே முடியவில்லை. அவரின் மரணத்தின் போது நடைபெற்ற இரங்கல் கூட்டத்தில் இரங்கலுரை ஆற்றும் அரிய வாய்ப்பும் எனக்குக் கிட்டியது.

**அவரின் மறைவு குறித்து நடத்தப்பட்ட இரங்கல் கூட்டத்தில் தமிழ்நாடு மார்க்சியப் பெரியாரியப் பொதுவுடைமைக் கட்சிப் பொதுச் செயலாளர் தோழர் வே.ஆனைமுத்து, சென்னைப் பல்கலைக் கழக முன்னாள் துணைவேந்தர் டாக்டா பொற்கோ, ‘கொள்கை வேழம்’ தோழர் தியாகு, கவிஞர் இன்குலாப், அறிஞர் சங்கமித்திரா போன்ற அறிஞர் பெருமக்கள் இரங்கலுரை ஆற்றினர். ஏராளமான கொள்கைத் தோழர்கள் அணிதிரண்டு வந்து அவரின் இறுதி நிகழ்வில் பங்கேற்றது குறிப்பிடத் தக்கதாகும்.**

அவருடைய உடல் போரூர் ராமச்சந்திரா மருத்துவ மனைக்கு அளிக்கப்பட்டது. அவரின் மரணம் தமிழக அறிவியக்கவாதிகள் மத்தியில் மிகப் பெரிய தாக்கத்தை ஏற்படுத்தியது. குறிப்பாக வண்டலூர்-ஓட்டேரி பகுதியில் அவர் மரணம் ஓர் பெரிய அதிர்வலையை உருவாக்கியது என்றால் அது மிகையாகாது.

**தாம் ஏற்றுக்கொண்ட கொள்கையில் இறுதி வரை மாறாமல் உறுதி காட்டிய அவரின் கொள்கை உள்ளம் காலங்காலங்களுக்கு என் நெஞ்சில் நிலைத்து நிற்கும். இறப்புக்கு முன்வரை அவர் என் நண்பர். இறப்புக்குப் பின் அவர் என் தலைவர்.**

**வாழ்க நாத்திக நந்தனாரின் புகழ்!**

## கெடுமதிக்கு, கெடு விதிப்பு!

அள்ள அள்ளப் பெருகும்
அறிவுக் கடல்களாம்!
விந்தை வள்ளுவரும்
தந்தை பெரியாரும்!
இவ்விரு ஞானிகளும்
தமிழினத்திற்கே கிடைத்த
தனி நன் மதிப்பு!

எவராலும் எட்டாப்புகழை
இவர்களே எட்டினார்கள்!
எவரோ சிலர் கெடுமதியால்
இவர்களின் உருவச் சிலையை
இடிப்பதனால் ஏற்படாது
இனி அவமதிப்பு!

இருந்தாலும் இவ்இழி செயலில்
திருந்தாமல் ஈடுப்படுவோரை
திரும்பவும் செய்யாத படி
தெருவில் நிற்க வைத்து
செருப்படி கொடுத்து கிடைக்கச்
செய்வோம் மதிப்பிழப்பு!

**- கவிஞர் சீனி. அறிவுமழை**

# இந்திய ஒன்றிய அரசுத் துறை வெளியிடும்
# பொருளாதார வளர்ச்சிக் கதையுடன் முரண்

*(அண்மையில் கசியவிடப்பட்ட மக்கள் செலவிடும் அளவு குறித்தது போன்ற ஆய்வுகள், பொருளாதாரம் பேரிடறும் நிலையிலுள்ளதைச் சுட்டுகிறது - ஆர். நாகராஜன்)*

தமிழில் : **இரா. பச்சமலை**

பின்னாளில் இந்திய ஒன்றியம் எப்படி வளர்ந்து வந்துள்ளது? மேலும் எந்த அளவுகோல்களின் அடிப்படையில் நாட்டின் செயல்திறன் கணக்கிடப்படுகிறது? இவையெல்லாம் விவாதத்திற்குரிய வினாக்களாக உள்ளன. பத்தாண்டுகளாகப் பெரும் பொருளாதார வளர்ச்சியைத் தொடர்ந்து, 2011-12-லிருந்து குறிப்பாகத் தேசியச் சனநாயகக் கூட்டணி ஆட்சியில்-அது தலைகீழாகக் கவிழ்ந்து மந்தமான வளர்ச்சியாக உள்ளது. அண்மைக்காலம் வரையில் இன்றைய அரசு நிகரளவில் தனி மனிதன் செலவிடும் அளவு அடிப்படையிலான பொருளாதார வளர்ச்சி முறையைச் சிறப்பாகச் சொல்லிக் கொண்டது. அதே நேரத்தில் முன்னைய பத்தாண்டுக் காலத்தில் முதலீடு நன்னிலையிலான வளர்ச்சியாக இருந்தது.

நாட்டின் பொருளாதார வளர்ச்சியை அளவிட 2004-05-ஐ அடிப்படை ஆண்டாகக் கொண்டிருந்ததை மாற்றி, 2011-12 ஆண்டை அடிப்படையாகக் கொண்டு 2015 தொடக்கத்தில் ஒன்றிய அரசின் புள்ளிவிவரத் துறை மக்களின் வருமானம், செலவு குறித்த தேசிய அறிக்கைத் தொடர்களை வெளியிட்டது. இது அத்துறையின் வழக்கமான பணிதான். இருப்பினும் உள்நாட்டு மொத்த உற்பத்தி (உ.மொ.உ.-GDP) ஆண்டு வளர்ச்சி விழுக்காடு, பழைய தொடரின் அடிப்படையில் இருந்ததைக் காட்டிலும் புதிய தொடரின் அடிப்படையிலானது பெரும் அளவு உயர்ந்திருந்தது தெளிவாகத் தெரிந்தது. பழைய தொடரின் படி 4.8 விழுக்காடு அளவிலான வளர்ச்சி, புதிய தொடரின்படி கணக்கிட்ட போது 6.2 விழுக்காடு அளவுக்குச் சட்டென உயர்ந்தது வியப்பாக இருந்தது. அதேபோன்று பழைய தொடரின் படியான 2013-14-இன் உற்பத்தித் துறையின் வளர்ச்சி - 0.7 விழுக்காடாக இருந்தது புதிய தொடரின்படி கணக்கிட்ட போது 5.3 விழுக்காடு என்ற அளவுக்கு உயர்ந்து விட்டது. ஆனால் பொருளாதார வளர்ச்சிக்குத் தொடர்பான வங்கிகள் வழங்கிய கடன் அளவு, தொழில்களின் திறன் பயன்பாட்டளவு, நிலை முதலீடு வளர்ச்சி யாவும் வீழ்ச்சியடைந்து வரும் நிலையில் மேற்சொன்ன திருத்தப்பட்டுள்ள வளர்ச்சி மதிப்பீடுகள் உயர்ந்துள்ளன என்பது பரவலாக அய்யத்தை ஏற்படுத்துகிறது.

**பணத்தாள் தடைக்குப்பின் 'பெருக்கம்'**

மிகு மதிப்புப் பணத்தாள் மதிப்பிழப்பால் உற்பத்தியும், வேலைகளும் சுருங்கியுள்ளதாகப் பெரும்பாலான தொழில் வல்லுநர்களும், பரவலான கணக்கீடுகளும் சொல்லும் போது, 2016-17-இல் வளர்ச்சி என்பது பெரும் முரணாக உள்ளது. இந்த ஆண்டின் வளர்ச்சி பெரும்பாலான கணிப்பாளர்களுக்கும், பன்னாட்டு நிறுவனங்களுக்கும் ஏமாற்றமளிப்பதாக இருப்பினும் உ.மொ.உ. 8.2 விழுக்காடு அளவுக்கு உயர்ந்துள்ளது என அரசுப் புள்ளிவிவரங்கள் வியப்பளிப்பதாக உள்ளது. உ.மொ.உ.யை மதிப்பீடு செய்வது முதலாவதாக உலக அளவில் பின்பற்றப்படும் அளவீடுகள், இரண்டாவதாக மேம்படுத்தப்பட்ட குறைகள் மற்றும் மூன்றாவதாக மிகப் பெருமளவிலான விவரங்கள் அடிப்படையில் என்பதுடன், இந்த மதிப்பீடுகள் மரபு சார்ந்தவை எனச் சொல்லி மய்யப் புள்ளிவிவரத் துறை மேற்சொன்ன அந்தத் திறனாய்வுகளைப் புறந்தள்ளிவிட்டது.

புதுமையான தளங்களிலும் மின்னணு பொருளாதாரத்திலும் உற்பத்தி, உருவாக்கப்பட்ட வேலைகளையும் (ஓலா மற்றும் பிளிப்கார்ட் போன்றவை மூலம்) பல்வேறு நுண்ணிய முத்திரா மற்றும் உதன் போன்ற சிறப்பான முயற்சிகளின் விளைவுகளைக் கணக்கில் எடுத்துக் கொள்ள வழக்கமான முறையான ஆய்வுகள் தவறவிட்டன என்று சொல்லி, உயரளவு பொருளாதார வளர்ச்சி மதிப்பீடுகளை அரசு சரிதான் என்கிறது. மேலும் வேலை வாய்ப்புகள் பெருகியுள்ளதிற்குத் தொழிலாளர் வைப்பு நிதி, தொழிலாளர் பாதுகாப்பு போன்ற சமூகப் பாதுகாப்புத் திட்டங்களில் உறுப்பினர்கள் சேர்க்கை அதிகரித்துள்ளதை நம்பத்தக்க அறிகுறிகளாகக் கொள்ள வேண்டும். உற்பத்திப் பெருக்கம் (விரும்பத்தக்கத் தொழிலாளர்களுக்கான சமூகப் பாதுகாப்பு ஏற்பாடுகளுடன்) மற்றும் பொருளாதாரத்தை முறைப்படுத்தியதன் வழி ஊரக, நகர அமைப்புச்சாரா துறைகளை விட்டுவிட்டு நாட்டின் அமைப்புசார் துறைகளில் வேலை பெற்றுள்ளோர் எனக் கொண்டாலும், அதில் அவர்கள் 15 விழுக்காடுதான் உள்ளது என்பதால் மேற்சொன்ன விவாதம் ஏற்கத்தக்கதாக இல்லை. தேசிய மாதிரி ஆய்வுத் துறையின் காலத்திற்குமான அய்ந்தாண்டு கால அளவிலான குடும்பங்களின் விவரம் பெறும் ஆய்வு அரசால் கைவிடப்பட்டுள்ள நிலையில் பொருளாதார நிலையை உணர்த்தும் தொழில், குடும்பச் செலவு பற்றிய விவரங்கள் பெறமுடியாது. தேசிய மாதிரி ஆய்வுத் துறையின், வேலைகள், வேலையின்மை பற்றிய ஆய்வுகளுக்குப் பதிலாக 2017-18-இல் கால அளவிலான தொழிலாளர்கள் தொடர்பு குறித்த ஆய்வு (பி.எல்.எப்.எஸ்.) நடத்தப்பட்டது. மேலும் அதே ஆண்டில் குடும்பச் செலவு குறித்த ஆய்வும் முன்னெடுக்கப்பட்டது.

சென்ற ஆண்டு முதலில் கசியவிடப்பட்டுப் பின் மே திங்களில் அரசால் வெளியிடப்பட்டுள்ள பி.எஸ்.எப்.எஸ்.இன் முடிவுகள் கலக்கம் தரும் போக்கில் உள்ளன. அவற்றில் முதலாவதாக வேலை செய்யும் திறன் உடையவர்களுள் 40 ஆண்டுகளில் இல்லாத அளவில் வேலை இல்லாதோர் 8.35 விழுக்காட்டு அளவுக்கும் அதிகமாகிவிட்டது என்பதாகும். இரண்டாவதாக முதன்முறையாக 2012-2017 காலத்தில் எப்போதும் இல்லாத அளவில் வாய்ப்பு அளவு குறைந்து விட்டது. வேலையிலிருந்தோரின் 6.6 மில்லியன் - 15.5 மில்லியன் பேர் அளவில் குறைந்துவிட்டனர்.

மக்கள் பெருக்க விழுக்காடு பற்றிய பல ஊகங்களின் அடிப்படையில் மூன்றாவதாக, ஊரக நகர்ப்புறச் சம்பள அளவு தேக்க நிலை அடைந்துவிட்டது என அந்த ஆய்வு காட்டுகிறது. இருப்பினும் பி.எல்.எப்.எஸ். புள்ளிவிவரங்கள், அறிவுசார் புள்ளியலாளர்கள் ஒதுக்கித் தள்ளிவிட்ட கி.யு.எஸ்.இன் முன்னைய புள்ளி விவரங்களுடன் மற்றும் ஒப்பிட முடியாது என வாதிட்டு மேலே சுட்டியுள்ளதை அரசு புறந்தள்ளிவிட்டது. தொழிலாளர்கள் சந்தையில் பரவலாக உள்ள சம்பள அளவு தேக்க நிலை தனிமனித செலவு அளவைக் குறைத்துவிடும் என்பதைப் பொது அறிவு உணர்த்தும். இதைத்தான் கசியவிடப்பட்ட புள்ளிவிவரங்கள் வெளிப்படுத்தியுள்ளது.

தனி மனிதன் மாதம் செலவிடும் அளவு 1972-73-க்குப்பின் இப்போது தான் முதன்முறையாகச் சரிந்துள்ளது. மேலும் அது பணவீக்கத்தைக் கணக்கில் கொண்ட உண்மையான செலவு அளவு 2011-12-இல் ரூ.1501 ஆக இருந்தது. 3.7 விழுக்காடு குறைந்து 2017-2018-இல் ரூ.1446 என்ற அளவுக்குக் குறைந்துவிட்டது. ஆறு ஆண்டுகளுக்கும் மேலாக தனிமனிதன் செலவிடும் அளவு ஊரகப் பகுதியில் 8.8 விழுக்காடு அளவுக்குக் குறைந்துவிட்டது. நகர்ப்புறத்தில் அது பெயரளவில் 2 விழுக்காடு அதிகரித்துள்ளது. இவை நிருவாகத் துறையின் புள்ளிவிவரங்களிலிருந்து வேறுபடுகின்றன எனச் சொல்லி இவற்றை அரசு தள்ளுபடி செய்துவிட்டது. இவ்வாறாக, பொருளாதாரம் அவல நிலையில் உள்ளது என்று நாடு தழுவிய மாதிரி ஆய்வுகள் தற்போது சமூக ஊடகப் புள்ளிவிவரங்கள் ஒரே தன்மையில் சுட்டுகின்றன. வேலை இழப்புகள், சம்பளத் தேக்கம், தனிமனிதன் செலவிடும் அளவு, எப்போதுமில்லாது தேங்கியுள்ளது அல்லது வீழ்ந்துள்ளது என அறிக்கைகள் தெரிவிக்கின்றன. ஏழ்மை விழுக்காடு (செலவிடும் அளவை பண மதிப்பில் முழுமையாக மதிப்பிட்டால்) அதிகமாக உயர்ந்திருக்கும். நாட்டின் தற்போதைய பத்தாண்டு காலத்தில் அவலமான பொருளாதாரத்தைத்தான் பெறமுடியும் என்பதற்கு இது தேசிய அளவில் சான்றாகும்.

**முன் ஆய்வு முறையில் மாற்றங்கள்**

உ.மொ.உ. சரிவுற்ற போதும் சென்ற சில ஆண்டுகளில், அதன் மதிப்பீடு நிகரளவில் ஆண்டு வளர்ச்சி 5.6 விழுக்காடு என மதிக்கத்தக்க அளவில் இருந்ததாக அரசு சொல்கிறது. இவ்வாறான வேறுபாடுகள் பெருநிலைப் பொருளாதாரக் (Macro Economics) குறியீடுகளில் தொழிலாளர்கள் சந்தையிலும் தனிக்குடும்பம் செலவிடும் அளவிலும் வீழ்ச்சியுற்ற நிலை மற்றும் மேலே சொன்ன வளர்ச்சி விழுக்காடு எண்கள் இவற்றில் வேறுபாடுகள் உள்ளதால் மேலே சொல்லப்பட்ட அரசின் கூற்று உண்மையில் நம்பும்படி உள்ளதா? என்ற வினா எழுகிறது.

கேள்விக்குள்ளாகும் மதிப்பீட்டுக் குறைகளும் சரிபார்க்கப்படாத புள்ளிவிவரப் பயன்பாடுகளும் உ.மொ.உ.ஐயக் கணக்கிடுவதில் குளறுபடி இருப்பதாகத் தெரிகிறது.

முடிவாக, 2015-லிருந்து இது தனித்தனியான ஆனால் தொடர்புடைய வரைவு முறைகள் ஒன்று மாற்றப்பட்ட தேசியக் கணக்குப் பட்டியல் அதிகப்படியாகக் கணக்கிட்டுள்ள அலுவலக உ.மொ.உ., இரண்டு உ.மொ.உ. வளர்ச்சி விழுக்காடு அளவுக்கும் பல பெருபொருளாதார (Macro Economics) அளவு பல வேறுபாடுகள் உள்ளவற்றுக்கும் இடையில் ஒத்த தன்மை இல்லை எனப் பொருளாதார விளக்க உரைகளில் நிறைந்து கிடக்கின்றன. இருப்பினும் இதுபோன்ற அய்யங்களைப் புறந்தள்ளிவிட்டு திருந்திய உ.மொ.உ. மதிப்பீடு தொடர்களில் அடிப்படையில் பெருமளவு செலவு அதிகமான பொருளாதார வளர்ச்சி மாதிரியான அதிக வளர்ச்சி விழுக்காடு அடைந்துள்ளதாக வெளிப்படுத்தி அரசு அதை வலிந்து கடைப்பிடித்து வருகிறது.

கசியவிடப்பட்ட, மக்களின் செலவிடும் அளவு விவரங்கள் உண்மை எனில், 2011-12 மற்றும் 2017-18 இடையிலான தனி மனித பணவீக்கம் கணக்கில் கொள்ளப்படாது தனிமனித நிகரளவு உண்மையான செலவு அளவுகள் சரிவடைந்துள்ளது. அரசு தரும் வளர்ச்சிக் கதையைக் கேள்விக்குள்ளாக்குகிறது. பி.எல்.எம்.எஸ். புள்ளிவிவரங்கள் தெரிவிப்பது போல் வேலைகள் குறைந்துள்ளதையும், சம்பளம் தேக்கமடைந்துள்ளதையும், அடுத்து செலவு அளவு வீழ்ச்சியடைந்துள்ளது. எனவே அண்மையில் கசியவிடப்பட்ட புள்ளிவிவரங்கள் கேள்விக்குள்ளாக்கப்படுவதோடு-கேள்விக்குள்ளாக்கப்படும் முறையிலான மாற்றங்களும் உள்நாட்டு உற்பத்தியை அதிகப்படியாக மதிப்பிடுவதற்குச் சரிபார்க்கப்படாத விவரங்களையுடைய தரவுகள் அடிப்படையிலானது என்பது உ.மொ.உ. வளர்ச்சி விழுக்காடு அதிகப்படியாக மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது விவாதத்திற்குத் துணை நிற்கின்றது.

(நன்றி : 'தி இந்து' (ஆங்கிலம்) 21.11.19)

## பெரியாரியல் தோழர் பொன். இராமச்சந்திரன் 80ஆம் அகவை பிறந்தவிழா



பம்பல் பெரியாரியல் தோழர் பொன். இராமச்சந்திரன் அவர்களின் 80ஆவது பிறந்த நாளையொட்டி, அவருடைய தமிழ்ப்பணியைப் பாராட்டி, பம்மல் இலக்கிய மன்றத்தின் சார்பில் பாராட்டு விழா 10.11.2019 ஞாயிற்றுக்கிழமை மாலை 6 மணிக்கு பம்மல் வி.கே.கே. அம்மணியம்மாள் மெட்ரிக் மேல்நிலைப் பள்ளியில் கோ.வி. பழனி தலைமையில் நடைபெற்றது. சூ.ஜெரோம் டேவிட்ராஜ் வரவேற்புரையாற்றினார். தி.க. லோகநாதன், சி. முத்தையா, கவிஞர் எழில் முடியன், அ.ஜோ. ஆரோக்கிய ஜெயசாமி, கை. பார்த்திபன், புலவர் த. வேலு, இரா. வீரமணி, சௌ. ஆரோக்கியராசு, பொன். செல்வராஜ், கை. நடராசன், புலவர் ஈ. ஆறுமுகம் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். பொன். இராமச்சந்திரன் ஏற்புரை நிகழ்த்தினார். நீ. வாசுதேவன் நன்றியுரையாற்றினார். விழா இனிதே முடிவுற்றது.

# பாலாற்றில் தடுப்பணைகள்: வித்தூன்றியவர் அரங்க. சானகிராமன்

காஞ்சி அமுதன்

பாலாற்றில் தடுப்பணைகள் கட்ட வேண்டி, நீண்டநெடிய மக்கள் கோரிக்கை இப்போது நடை முறைக்கு வந்திருக்கிறது. நாம் கோரிய தடுப்பணைகள் பலவாகினும் இப்போது பாலாற்றின் கடைநிலைப் பகுதியான வாயலூர், வள்ளிபுரத்தில் தடுப்பணைகள் கட்டி முடிக்கப்பட உள்ளன. திருமுக்கூடல், பெரும் பாக்கம் உள்ளிட்ட இன்னும் பல இடங்களில், அறிவித்தபடி தடுப்பணைகள் கட்டப்படும் எனத் தமிழக அரசு அறிவித்துள்ளது. இது மக்களின் தொடர் போராட்டத்திற்குக் கிடைத்துள்ள வெற்றி யாகும், பாலாற்றில் தடுப்பணைகள் கட்ட முதன் முதலில் கோரிக் கை வைத்துத் தன் வாழ்நாளெல்லாம் குரலெழுப்பிய தோழர் அரங்க. சானகிராமன் அவர்களின் பங்களிப்பு இதில் முதன்மை யானதாகும்.

திராவிடர் இயக்கத்தின் தொடக்காலத் தூண்களாய் இருந்த பெரிய காஞ்சியில் திரு.அரங்கசாமி அவர்களும், சின்ன காஞ்சி யில் திரு. அ.க.தங்கவேலரும் இன்னும் பலரும் அமைப்பை வளர்த்தனர். அப்படிப்பட்ட சுயமரியாதைக் குடும்பத்தில் அரங்கசாமி அவர்களுக்கு மகனாய்ப் பிறந்து, தொடக்கமுதலே திராவிடர் கழகத்தில் வளர்ந்து, அக்கழகத்தின் மாவட்டச் செய லாளராகவும், பின் மார்க்சியப் பெரியாரியப் பொதுவுடைமைக் கட்சி யின் மாநில விவசாய அணி தலைவராகச் செயலாற்றியவர் முதுபெரும் தோழர் ஐயா அரங்க.சானகிராமன் அவர்கள்.

உழவர் நலன், சமூகநீதி, இட ஒதுக்கீடு, தமிழர் நலன், ஈழத்தமிழர் உரிமைப் போராட்ட ஆதரவு என்பதோடல்லாமல், பாலாற்று உரிமைக்காக்கவும், பாலாற்றில் தடுப்பணைகள் அமைக்கவும் நெடிய போராட்டங்களைக் கண்டவர். பாலாற்றுப் பாதுகாப்புக் கூட்டியக்கத்தின் தலைமை வழிகாட்டியாகவும் இருந்து, பல போராட்டங்களில் பங்கேற்றவர் ஐயா அரங்க சானகிராமன் அவர்கள்.

1968 ஆம் ஆண்டு அண்ணா தமிழக முதல மைச்சராக இருந்த போது பாலாற்றில் தடுப்புச்சுவர்கள் கோரி முதன் முதலாவதாக விண்ணப்பம் தந்தவர் ஐயா சானகிராமன், வேளாண் உற்பத்திக்குழு உறுப்பினராக இருந்த அவர், அரசின் உழவர் குறைதீர் நாள் கூட்டத்தில் பல ஆண்டுகளாக முறையிட்டுள்ளார். தமிழக முதலமைச்சர், பொதுப்பணித்துறை அமைச்சர், வேளாண்துறை அமைச்சர், மாவட்ட ஆட்சியர் எனப் பலருக்கும் தன்வாழ்நாள் முழுவதும் தொடர்ந்து பல விண்ணப் பங்களை அனுப்பியுள்ளார். தனக்கிருக்கும் செல்வாக்கைப் பயன்படுத்தித் தமிழக முதல்வர்கள், பொதுப்பணித்துறை அமைச் சர்களையும் நேரில் சந்தித்துத் தடுப்பணை கோரிக்கையை வலியுறுத்தியுள்ளார். இவர் வைத்த கோரிக்கைகளுக்குப் பொதுப் பணித்துறை பாலாற்றில் தடுப்புச்சுவர் கட்ட திட்ட மதிப்பீடுகள் அரசிற்கு அனுப்பி உள்ளதாக பல்லாண்டுகளாக தகவல் அளித்ததோடு, சரி. உதாரணமாக: 2001 இல் பெரும்பாக்கம் கிராமத்தில் 75.00 இலட்சத்திலும், குருவி மலை கிராமத்தில் 145.00 இலட்சத்திலும், பழைய சீவரம் கிராமத்தில் 225.00



இலட்சத்திலும், செங்கற்பட்டு நகரத்தில் 225.00 இலட்சத்திலும், 2008 இல் திருக்கழுகுன்றம் வட்டம் வாயலூர் கிராமத்தில் 80.00 கோடி செலவில் தடுப்பணை கட்டுவதற்கு அரசால் நிர்வாக ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது எனவும்;

2013 இல் பாலூர் அருகே 2,070 இலட்சத்திலும், ஆலப்பாக்கம் அருகே 1,450 இலட்சத்திலும் தடுப்ப ணைகள் கட்ட திட்டமதிப்பீடு அரசிற்கு அனுப்பி உள்ள தாகவும், நல்லாத்தூரில் தடுப்பணைகள் கட்ட ஆய்வுகள் மேற் கொண்டுள்ளதாவும் பொதுப்பணித்துறை ஐயா அரங்க சானகிராமன் அவர்களுக்குப் பல கடிதங்களை அரசு அனுப்பி உள்ளது.

2014 இல் தகவல் உரிமைச் சட்டத்தின்கீழ் பாலாற்றுப் பாதுகாப்புக் கூட்டியக்கத்தின் சார்பில் பல தகவல்களைநான்கோரிய போது, காஞ்சிபுரம் வட்டத்தில் பெரும்பாக்கத்திலும், பழையசீவரம் பினாயூர் பகுதியிலும் இரண்டு தடுப்பணைகள் கட்ட உத்தேசிக் கப்பட்டுள்ளதாகப் பொதுப்பணித்துறை கடிதம் அனுப்பியது.

2015 இல் பாலாற்றில் பெரு வெள்ளம் வந்து உழவருக்கும் பொதுமக்களுக்கும் நிலைத்த பயன் தராமல் கடலில் போய்க் கலந்தது.

2005இல் ஆந்திராவில் முதல்வராக இருந்த இராசசேகர், பாலாற்றில் கணேசபுரத்தில் 1892 ஆம் ஆண்டு ஒப்பந்தத்திற்கு விரோதமாக பெரிய அணை ஒன்றைக்கட்ட முயன்ற போது, தமிழகத்தில் பாலாறு குறித்த விழிப்புணர்வு அதிகமானது. அப்போது மா.பெ.பொ.க உள்ளிட்டுப் பல்வேறு அமைப்புகள் ஒருங்கிணைந்து பாலாற்றுப் பாதுகாப்புக் கூட்டியக்கம் தொடங்கப்பட்டுப் பாலாற்றைக் காக்கும் பல போராட்டங் களை நடத்தியது. இதில் மிக ஆர்வமாகக் கலந்து கொண்டு இயங்கினார் ஐயா அரங்க சானகிராமன் அவர்கள்.

அதுவரை ஆட்சியர்களிடம் மனுக்களில் கோரிய பாலாற்றில் தடுப்புச்சுவர் இயக்கம், மக்கள் இயக்கமாக மாற்றப்பட்டுப் பாலாற்றில் தடுப்பணை கோரிக்கையாக முகிழ்ந்து மக்கள் பங்கேற்கும் போராட்ட இயக்கமாக மாற்றப்பட்டது.

இதன் தொடர்ச்சியாகப் பல்வேறு தன்னார்வ இயக்கங்கள், விவாசாயச் சங்கங்கள் இக்கோரிக்கையைக் கையிலெடுத்துப் போராட முன்வந்தனர். ஆயினும் பொதுப்பணித்துறையோ, தமிழக அரசோ பாலாற்றில் தடுப்பணைகள் அமைக்காமல் திட்ட மதிப்பு, திட்ட அறிக்கை வெளியிட்டுப் பாலாற்றில் தடுப்பணைகள் கட்டாமல் காலம் கடத்தி வந்தது. இரயில் நீர் என்ற பெயரில் தொடர்வண்டித்துறை பாலாற்றில் தண்ணீர் எடுத்து விற்க நீர் செறியூட்டும் தரைமட்டத் தடுப்புச்சுவர் ஒன்றைப் பாலூரில் கட்டப்பட்டது. ஆனால் உழவர்களின், பொதுமக்களின் பாலாற்றில் தடுப்பணை கோரிக்கையையும், அனைத்து இயக்கங்களின் போராட்டத்தை அரசும் பொதுப்பணித்துறையும் அலட்சியப் படுத்தித் தடுப்பணை கோரிக்கையைக் கிடப்பில் போட்டிருந்தனர்.

இந்நிலையில், 2017 ஆம் ஆண்டு ஆகஸ்டு 16 இல் எம்.ஜி.ஆர். நூற்றாண்டு விழாவிற்காகப் புதுச்சேரி வரை பயணம் செய்த தமிழக முதல்வர் எடப்பாடி பழனிச்சாமி அவர்களிடம் பாலாற்றுப் பாதுகாப்புக் கூட்டியக்கம் மற்றும் உழவர்கள் அமைப்புகள் புதுப் பாக்கத்தில் சந்தித்து விண்ணப்பம் கொடுத்தோம். பாலாற்றில் தடுப்பணைகள் கட்ட வேண்டியதன் அவசியம் குறித்தும், அண்ணா காலம் முதல் இந்நாள்வரை கிடப்பில் உள்ள இப் பிரச்சினையை விளக்கிக் கூறினோம். நெருக்கடியான நிலையில் புதியதாக முதல்வர் பொறுப்பேற்றிருந்த அவரும் உரிய கவனம் செலுத்தி, பாலாற்றில் தடுப்பணைகள் கட்ட ஆவனசெய்வதாக அறிவித்தார்.

அதன் பின் ஆகஸ்டு 30இல் வண்டலூரில் நடைபெற்ற எம்.ஜி.ஆர் நூற்றாண்டு விழாவில், பாலாற்றில் மதுராந்தம் வட்டம் ஈசூர் வள்ளிபுரத்திலும், வாலாசாபாத் வட்டம் வெங்குடி மற்றும் உள்ளாவூர், திருக்கழுகுன்றம் வட்டம் வாயலூர், செங்கற்பட்டு வட்டம் பழவேரி, மற்றும் பாலூர், காஞ்சிபுரம் வட்டம் வெங்கடாபுரம் ஆகிய ஏழு இடங்களில் தடுப்பணை கட்ட ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுத் தடுப்பணைகள் கட்ட நட வடிக்கை எடுக்கப்படும் எனத் தமிழக முதல்வர் எடப்பாடி பழனிச் சாமி அறிவித்தார். காஞ்சிபுரத்தில் நடைபெற்ற கூட்டத்திலும் மீண்டும் இதை அறிவித்தார். ஆனாலும் அவ்வாண்டின் நிதி நிலை அறிக்கையில் தடுப்பணைகள் கட்ட உரிய நிதி ஒதுக்கவில்லை.

2019 இல் வரலாறு காணாத வறட்சியால் பனை, தென்னை உள்ளிட்ட மரங்கள் காய்ந்து போனதாலும், சென்னைக்கு நீர் தரும் ஏரிகள் வற்றி, வரலாறு காணத தண்ணீர் பஞ்சம் ஏற்பட்ட நிலையில், உழவர்கள் மற்றும் பாலாறு பாதுகாப்பு இயக்கங் களின் தொடர் கோரிக்களாலும் பாலாற்றில் தடுப்பணைகள் கட்ட தமிழக அரசு அறிவிப்புகள் வெளியிட்டது. பாலாறு கடலில் கலக்கும் வாயலூரில் கல்பாக்கம் அணுவுலை தரும் நிதிப் பங் களிப்புடன் ஒரு அணையும், ஈசூர் வள்ளிபுரத்தில் ஒரு தடுப் பணையும் கட்டப்பட்டுள்ளது. இவ்வணைகள் வலிமையற்று இருப்பதைச் சுட்டிக் காட்ட வலிவுபடுத்தும் பணியை மேற் கொள்ளப்படுகிறது. மேலும் அறிவித்த 5 இடங்களில் தடுப்பணை கள் கட்டப்படும் எனவும் தமிழக அரசு அறிவித்துள்ளது.

ஆற்றில் ஏற்படும் வெள்ள நீரைத்தேக்கப் பாலாற்றில் தடுப்பணை கட்டக்கோரி 50 ஆண்டுகளாகப் போராடி வந்த ஐயா அரங்க சானகிராமன் அவர்களின் கோரிக்கை, பாலாற்றில் தடுப்பணை குறித்து அவர் ஊன்றிய வித்து முளைத்துவரத் தொடங்கிவிட்டது. அவர் மறைவிற்குப் பின் அவரின் கோரிக்கை வெற்றி பெற்றுள்ளது. அவரின் உழைப்பிற்கும் பாலாற்றுப் பாதுகாப்புக் கூட்டியக்கம் உள்ளிட பல்வேறு அமைப்புகளுக்கும், உழவர்களுக்கும் கிடைத்த பெரு வெற்றியாகும்.

பாலாறு, கர்நாடக மாநிலம், நந்தி மலையில் உற் பத்தியாகி, ஆந்திரம் குப்பம் வழியாக வாணியம்பாடி, அருகே தமிழகத்தில் நுழைந்து, மாமல்லபுரம் அருகே உள்ள வாயலூர் அருகே வங்கக் கடலில் கலப்பதை நாம் அனைவரும் அறிவோம். பாலாறு பன்மாநில ஆறாக விளங்குவதால் கர்நாடகம், ஆந்திரம் தங்கள் பகுதியில் ஓடும் பாலாற்றைத் தடுத்து சட்டவிரோதமாக அணைகள் கட்டுவதால், அதனை எதிர்த்து உச்சநீதி மன்றத்தில் வழக்குத் தொடுத்துள்ளது தமிழக அரசு.

**மேலும், ஆற்றில் வரைமுறை இன்றி மணல் அள்ளப்பட்டுள்ளதால், பாலாறு பாலைவனமாய் மாறிக்கொண்டிருக்கிறது. தோல்கழிவு, ஊர்க் கழிவுகள், ஆலைக்கழிவுகளால் சீரழிந்து வரும் பாலாற்றைக் காக்க வேண்டியது நம் அனைவரின் கடமையாக உள்ளது.**

**இந்நிலையில் பாலாற்றைக்காக்க, தடுப்பணை கள் கட்ட தன் வாழ்நாளெல்லாம் போராடிய பெரியவர் மறைந்த அரங்க சானகிராமன் அவர் களின் உழைப்பை நினைவு கூர்வோம். அவருக்குப் புகழ் வணக்கம் செலுத்துவோம். ஒன்றுபட்டு பாலாற்றைக் காப்போம் அனைவரும் வாரீர்.!**

## தோழர் சி.இராவணன் மறைவு



மதுரைக்கு அருகே உள்ள அதிகாரப் பட்டி என்னும் கிராமத்தைச் சார்ந்த இராவணன் திருப்பூருக்கு பணிக்கு வந்த போது சாதி ஒழிப்பை விரும்பி பெரியார் இயக்கத்தில் தன்னை இணைத்துக் கொண்டவர்.

இவர் திராவிடர் கழகம், தந்தை பெரியார் திராவிடர் கழகம், திராவிடர் விடுதலைக் கழகம், காட்டாறு குழு ஆகிய அமைப்புகளில் முழுநேரப் பணியாளராகப் பணியாற்றினார். இவர் 25 ஆண்டுகளாக தான் பிறந்த ஊருக்குச் செல்லாமல் இரத்த உறவுகளுடன் எந்த தொடர்பும் கொள்ளாமல் இயக்கப் பணியாகவே தமிழகம் முழுவதும் பல்வேறு மாவட்டங்களில் களப்பணியாற்றியவர். உடல் நலக்குறைவு காரணமாக 23.11.2019 சனி அன்று இயற்கை எய்தினார். அன்னாருடைய இழப்பு பெரியார் இயக்கங்களுக்கு பேரிழப்பாகும். அன்னா ருடைய குடும்பத்தாருக்கும் தோழர்களுக்கும் மார்க்சியப் பெரியாரியப் பொதுவுடைமைக் கட்சியின் ஆழ்ந்த இரங்கலைத் தெரித்துக் கொள்கிறோம்.

**வாழ்க இராவணின் புகழ்.**



## சாதி ஒழிப்புக்குச் சிறைசென்ற த. பொட்டக்கொல்லை தோழர் சா. துரைக்கண்ணு துணைவியார் திருமதி. சின்னம்மாள் நினைவேந்தல் நிகழ்ச்சி

உடையார்பாளையம் வட்டத்தில் தி.க. கோட்டையாக த. பொட்டக்கொல்லை திகழ்ந்தது. பெரியாரது சுயமரியாதைக் கொள்கைகளையும் பகுத்தறிவுக் கொள்கைகளையும் ஏற்றுக் கொண்ட தோழர்கள் தங்கள் வாழ்நாள் முதல் கடைப்பிடிக் கவும் பின்பற்றவும் செய்தனர். அவ்வகையில் பெரியார் நடத்திய சாதி ஒழிப்புப் போராட்டம், இராமன் பட எரிப்புப் போராட்டம், பிள்ளையார் சிலை உடைப்புப் போராட்டம், இந்தி எதிர்ப்புப் போராட்டம் முதலானவற்றில் கலந்துகொண்டு சிறை சென்று மீண்ட தோழர்களில் த. பொட்டக்கொல்லை சா.துரைக்கண்ணு, சி.இராமசாமி, வதியங்குட்டை கோவிந்த சாமி, தமிழரசன், அருணாசலம், தங்கவேல் முதலானவர்கள் சில பேர்.

இந்தப் பகுதியில் பெரியார் அடிக்கடி வரவும், நிகழ்ச்சி களில் கலந்துகொள்ளவும் தோழர் வே. ஆனைமுத்து அவர் களின் அயராத பணியே காரணம் ஆகும். 1947 முதல் 1952 வரை கால்நடையாகவும், மிதிவண்டியிலும் இந்தப் பகுதிக்கு வந்த ஆனைமுத்து அவர்கள் ஒரே நாளில் 2, 3 நிகழ்ச்சி களும் மாலையில் பொதுக் கூட்டம் நடத்தவும் ஏற்பாடு செய்துவிட்டு பெரியாரையும் அழைத்து வந்துவிடுவார்.

அப்படி வந்த பெரியார் அவர்கள், செயங்கொண்டம் தேவமங்கலம் அணைக்கரை, தா. பழூர் பொட்டக்கொல்லை, உல்லியக்குடி, இரும்புலிக்குறிச்சி செந்துறை பகுதிகளில் அடிக்கடி வந்து பகுத்தறிவு பிரச்சாரம் செய்தார். அதன் பயனாக இந்தப் பகுதியினர் பெரும்பாலோர் சுயமரியாதை உள்ள மக்களாக கருப்புத் துண்டு, கருப்புச் சட்டை அணிந்த வர்களுக்கு தனி மரியாதையே இருந்தது.

1954-இல் சா.துரைக்கண்ணு-சின்னம்மாள் திருமணம் சுயமரியாதைத் திருமணமாகவே நடந்தது. இவர்கள் பயிர்த் தொழிலை உயிர்த்தொழிலாகக் கொண்டனர். கடும் உழைப் பாளர்கள். ஓய்வு நேரத்தில் ஒரு தேநீர்க் கடை நடத்தினர். சின்னம்மாள் மூலமாக அன்புமணி, வீரமணி, பூங்கொடி, பூங்கோதை பிறந்தனர். 26.11.1957-இல் சாதி ஒழிப்புப் போராட்டத்தில் கைதாகி சிறைக்குச் சென்ற ஒரு வாரத்துக்குப் பின் பிறந்த மகனுக்கு அன்புமணி எனப் பெயரிட்டார். இராணுவத்தில் சேர்ந்து பணியாற்றிய அவர் திருமணத்துக் குப்பின் இறந்து போனார்.

உள்ளூர்ப் பள்ளியிலேயே இவர் படித்திருந்தாலும் பிள்ளைகளைப் படிக்க வைத்து நல்ல நிலைக்கு ஆளாக்கி உள்ளார். இந்த நிலையில் கடந்த 27.10.2019 அன்று மாலை கால்வழுக்கிக் கோடுமாடாக விழுந்த சின்னம்மாள், 5.30 மணிக்கு இறந்து போனார்.

11.11.19-இல் அன்னாரது படத்திறப்பு நிகழ்ச்சி உள்ளூர் சி. பன்னீர்செல்வம் பாட்டாளி மக்கள் கட்சி மாவட்டத் தலைவர் தலைமையில் நடந்தது. அரியலூர் மாவட்ட மா.பெ.பொ.க. மாவட்டச் செயலாளர் இரா.கலியமூர்த்தி, சின்னம்மாள் படத்தைத் திறந்து வைத்து மலரஞ்சலி செலுத்தி, கருத்துச் செறிவான இரங்கலுரை ஆற்றினார். அவரைத் தொடர்ந்து தோழர்கள் ப.வே.பரமசிவம், ந.பழநிமுத்து, சி.இராம சாமி, வா.இராசமாணிக்கம், கோ.கவுதமன், ந.இளங் கோவன், மூ.ரெ.சீனிவாசன், சா.சீனிவாசன் இரங்கலுரை ஆற்றினர். கவிஞர் அறிவுமழை உருக்கமாக மூன்று பாடல்கள் பாடினார்.

**சின்னம்மாள் துரைக்கண்ணு புகழ் ஓங்குக.**

செய்தி : புலவர் **இரா. கலியமூர்த்தி**
மாவட்டச் செயலர், அரியலூர்

## கோவையில், தமிழ்நாடு உருவான நாள் சிறப்புக் கருத்தரங்கம்



தமிழ்நாடு உருவான நாள் சிறப்புக் கருத்தரங்கம் பெரியாரிய உணர்வாளர்கள் கூட்டமைப்புச் சார்பில் கோவை காந்திபுரம் பெரியார் படிப்பகத்தில் 01.11.2019 வெள்ளி மாலை 5 மணிக்கு நடைபெற்றது.

முன்னதாக, தமிழ்நாடு படம் வரையப்பட்டு திராவிடர் தமிழர் கட்சி சு.இ. கலையரசன் அதன் முன்னர் கோரிக்கை முழக்கங் கள் எழுப்பப்பட்டது. பறை இசையும் முழங்கப்பட்டது.

புரட்சிகர இளைஞர் முன்னணி தோழர் மலரவன் வரவேற்புரையாற்றினார். ஆதித் தமிழர் பேரவைச் செயலாளர் இரவிக்குமார் தலைமை தாங்கினார். தமிழ்ப் புலிகள் கட்சி இளவேனில், திராவிடர் விடுதலைக்கழகம், நேரு தாஸ், மே 17 இயக்கத் தோழர் சுந்தரமூர்த்தி, தமிழர் விடியல் கட்சி நவீன், தமிழ்ச் சிறுத்தைகள் சு.அகத்தியன், தமிழ்நாடு மக்கள் சனநாயகக் கட்சி எஸ்.சிராஜ்தீன் ஆகியோர் உரையாற்றினர்.

தந்தை பெரியார் திராவிடர் கழகத்தின் பொதுச் செய லாளர் கோவை கு. ராமகிருட்டிணன் மார்க்சியப் பெரியாரியப் பொதுவுடைமைக் கட்சியின் சென்னை மாவட்டச் செயாளர் வாலாசா வல்லவன் ஆகியோர் சிறப்புரையாற்றினர்.



## வாழ்க்கை ஒப்பந்த விழா

### மா.பெ.பொ.க. காஞ்சி மாவட்டச் செயலாளர் சி. நடராசன் இல்ல வாழ்க்கைத் துணை ஏற்பு விழா
### ந. தமிழ்ச்செல்வன் - ஆர். வைஷ்ணவி



காஞ்சிபுரம் மாவட்டம், காஞ்சிபுரம் சி. நடராசன்-உஷாராணி இணையரின் மகன் ந.தமிழ்ச்செல்வன் அவர்களுக்கும், சித்தூர் மாவட்டம், நாராயணவளம் ஆர்.மு. செயசேகர் - சுமதி இணையரின் மகள் ஆர். வைஷ்ணவி அவர்களுக்கும், வாழ்க்கைத் துணைநல ஏற்பு விழா 11.11.2019 திங்கள் காலை 9 மணிக்கு காஞ்சிபுரம் ஸ்ரீசாரதா மகாலில் மா.பெ.பொ.க. சென்னை மாவட்டச் செயலாளர் வாலாசா வல்லவன் தலைமையில் நடை பெற்றது. காஞ்சி அமுதன் திருக்குறள் ஓதினார். சி. நடராசன் வரவேற்புரை ஆற்றினார். காஞ்சி நகர மா.பெ.பொ.க. செயலாளர் மு. செயப்பிரகாசு, மா.பெ.பொ.க. இரா. இராசசேகர், அகதி மு.க., கே.எஸ். செயக்குமார் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

தி.மு.க. தலைமைச் செயற்குழு உறுப்பினர் சி.வி.எம். சேகரன், காஞ்சி தி.மு.க. சட்டமன்ற உறுப்பினர் சி.வி.எம்.பி. எழிலரசன், தி.மு.க. காஞ்சி நகரச் செயலாளர் சன் பிராண்ட் கே. ஆறுமுகம், காமராசர் கல்வி அறக்கட்டளை நிறுவனர் ஜனதா மு.சம்பத், முற்போக்குச் சமூகநீதிப் பேரவை நிறுவனர் டாக்டர் விமுனாமூர்த்தி, பெரியார் பற்றாளர் புஞ்சை பூ. வில்லவன், காரை கு. அருளானந்தம், அறிவு வளர்ச்சி மன்றத் தலைவர் நாத்திகம் நாகராசன், பாலாறு பாதுகாப்புக் கூட்டியக்க ஒருங்கிணைப்பாளர் காஞ்சி அமுதன், உலகத் திருக்குறள் பேரவைச் செயலர் குறள் அமிழ்தன் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். மணமகன் நா.அறிவுச்செல்வன் நன்றியுரையாற்றினர்.

மா.பெ.பொ.க. தோழர்களும் தோழமை இயக்கத்தினரும் பெருந்திரளாகக் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்தினர். மணவிழாவிற்கு வந்ததிருந்த அனைவருக்கும் சுயமரியதை திருமண விளக்கம் நூல் வழங்கப்பட்டது. வாழ்க்கைத் துணைநல ஏற்பு மகிழ்வாக மணமகன் வீட்டார் சிந்தனையாளன் வளர்ச்சி நிதியாக ரூ.2000 வழங்கினர்.

### குயில்தாசன்-அற்புதம் இல்ல வாழ்க்கைத் துணை ஏற்பு விழா
### அ.இரா. செவ்வை - சி. கௌதம்



திருவாளர்கள் வேடியப்பன்-சின்னப்பிள்ளை, ஞானசேகரன் (எ) குயில்தாசன்-அற்புதம் ஆகியோர் பெயர்த்தியும், கிருட்டிண கிரி வட்டம் கீழ்ப்பையூர் வே. இராசா - அ.ஞா. அன்புமணி ஆகியோர் மகளுமாகிய அ.இரா.செவ்வை அவர்களுக்கும்; திருவாளர்கள் துரை சாமி-இரத்தினம்மாள், கண்ணன்-தங்கம்மாள் ஆகியோர் தம் பெயரனும், திருப்பத்தூர் வட்டம், ஏ.கே. மோட்டூர் து.சின்னத்தம்பி-சி.கல்யாணி ஆகியோர்தம் மகனுமாகிய சி. கௌதம் அவர்களுக்கும், வாழ்க்கைத் துணை ஏற்பு விழா 24.11.2019 ஞாயிறு காலை 9.00 மணிக்கு கிருட்டிணகிரியில், தேவராசு திருமண மண்டபத்தில் சிறப்புடன் நடைபெற்றது. இராசீவ் கொலை வழக்கில் சிறையிலிருந்த பேரறிவாளன், பரோலில் வந்திருந்து அக்காள் மகள் திருமணத்தில் கலந்து கொண்டார். பெரியாரியத் தோழர்களும் தோழமை அமைப்பினரும், திரைத் துறையைச் சார்ந்தவர்களும் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்தினர். பேரறிவாளன் விருந்தினர்களுடன் கலந்துரையாடினர்.

## கருப்பு உடை விழிக்கட்டும்! காவி உடை கிழியட்டும்!

- கவிஞர் சீனி. ஆறுமுகம்

முக்காலமும் உணர்ந்து
எக்காலமும் உயர்ந்து
எழுத்தாளுமையில் சிறந்து
கருத்தாளுமையில் தெளிந்து
காவியத் திருக்குறளை அளித்த நம்
காவிய நாயகன் வள்ளுவருக்கு
காவி உடை அணிவித்து
கறைப்படுத்தவும்
களவாடவும் முயல்கிறது
காவி உடைக் கயவர் கூட்டம்!

காவிகளின் சதிச்செயலை
கண்டு கொண்டிராமல்
நாவில் சூடு வைத்து அந்தப்
பாவிகளுக்குச் சொல்லுவோம்
வள்ளுவர் எங்களின்
வரலாறு அடையாளம் என்றும்
வையகமெங்கும் பாயும் முதல்
பகுத்தறிவுப் பெரியார்(று) என்றும்
கருப்பு உடைத் தமிழர் கூட்டம்!

# மக்களைச் சுரண்டும் வரி, வரி & கட்டணம், கட்டணம்

மத்திய அரசும், மாநில அரசும் மக்கள் மீது சுமத்தி வசூலிக்கும் வரிகள் பல. முக்கியமான வரிகள் (1) வருமான வரி, (2) மாநில அரசு சரக்கு மற்றும் சேவை வரி, (3) மத்திய அரசு சரக்கு மற்றும் சேவை வரி, (4) கலால் வரி, (5) சுங்க வரி, (6) நகர் சுங்கவரி (Octroi), (7) சொத்துவரி, (8) தொழில் வரி, (9) தொழிலாளர் வரி, (10) தண்ணீர் மற்றும் கழிவு நீர் வரி, (11) வீட்டுவரி, (12) நிலவரி, (13) கேளிக்கை வரி (Entertainment), (14) வாகன இருக்கை வரி, (15) கல்வி வரி, (16) உயர்கல்வி வரி, (17) உற்பத்தி வரி, (18) முனைய வரி (Terminal Tax), (19) மாநகராட்சி வரி, (20) நகராட்சி வரி, (21) சாலை வரி போன்ற பல வரிகள் பொதுமக்கள் மீதும் நுகர்வோர் மீதும் சுமத்தப்படுகின்றன. ஆனால் அப்படி வசூல் செய்த வரி மக்களுக்குக்காகச் செலவிடப்படுவதில்லை. காட்டாக சாலை வரி, இருக்கை வரி, வாகன உரிமம் கட்டணம், ஓட்டுநர் உரிமக் கட்டணம், போக்குவரத்து தொழில்வரி, தொழிலாளர் வரி, சுங்கச்சாவடி கட்டணம் போன்ற கட்டணத்தையும், வரியையும் விதித்துவிட்டு போதுமான சாலைகள் அமைக்கவில்லை, பராமரிக்கபடவும் இல்லை. பெரும் சுமையாக நாடு முழுவதும் சுங்கச் சாவடிகள் அமைத்து கட்டணம் கோடி கோடியாக தனியார் வசூல் செய்ய ஒப்பந்தம் செய்து அரசு கொள்ளையடிக்கிறது.

இதேபோல் கல்விக்காக வசூலிக்கும் கட்டணம் வரிகளும் கட்டணங்களும் செவ்வனே பயன்படுத்திச் சமச்சீர் கல்வியையும் தரமான கல்வியையும் கொடுக்க மறுத்துத் தனியார் கல்விக் கூடங்களைக் கொள்ளையடிக்க அனுமதித்துவிட்டு அரசு தன் பொறுப்பைக் கைகழுவிவிட்டது.

கட்டணம் என்ற பெயரில் (1) தொழிலாளர் காப்பீட்டுக் கட்டணம், (2) முத்திரைத்தாள் கட்டணம், (3) சுங்கக் சாவடிக் கட்டணம், (4) மருத்துவமனை நுழைவுக் கட்டணம், (5) விமான நடைமேடை கட்டணம், (6) ரயில் நடைமேடை கட்டணம், (7) கண்காட்சி மற்றும் பொருள்காட்சி நுழைவுக் கட்டணம், (8) பூங்கா கட்டணம், (9) சுடுகாட்டு-தகனக் கட்டணம், (10) கல்வி தேர்வுக் கட்டணம், (11) கல்விக்கூட நுழைவுத் தேர்வுக் கட்டணம், (12) வேலை வாய்ப்புத் தேர்வுக் கட்டணம், (13) பயிற்சிக் கட்டணம், (14) கழிவறைக் கட்டணம், (15) குளியலறைக் கட்டணம் போன்ற பல கட்டணங்களை வசூல் செய்கின்றது.

மக்கள் மீது சுமத்தப்படும் மறைமுக வரிகளும் கட்டணங் களும் ஏழைக்கும், பணக்காரனுக்கும் ஒரே விதியாக அமைத்து வசூல் செய்யப்படுகின்றன. அதேவேளை வருமான வரி, பெரு நிறுவனவரி என வெறும் 30 விழுக்காடு மட்டுமே வசதி படைத் தோரிடமிருந்து பெறப்படுகிறது. ஆனால் மொத்த வருவாயில் மிகப்பெரும் பகுதி வளமான பிரிவினரின் நலன்களுக்கு மட்டுமே செலவிடப்படுகிறது. ஆனால் 80 விழுக்காடு மக் களான விவசாயிகள், நெசவாளர்கள், தொழிலாளர்கள் நல ன்களுக்கு குறைந்த அளவே செலவிடப்படுகிறது.

உழவர் மகன் **ப.வடிவேலு**

# மக்களே போல்வர் கயவர்!

புத்தருடன் அம்பேத்கர் பெரியார் தம்மை
புறம்பேசி இழிவுசெய்த கயவர் கூட்டம்
சித்தர்நம் வள்ளுவரை இழிவு செய்து
சித்தரித்து வருவதுடன் மதம்பி டித்து
கத்துகிறார் சூரியனை நோக்கி இன்று
கயவர்தாம் மக்கள்போல் இருப்பார் என்று
இத்தரையில் ஈராயிரம் ஆண்டின் முன்னர்
எடுத்துரைத்த வள்ளுவரை நினைவில் வைப்போம்.

கற்சிலையைக் கடவுளென்று நம்பும் கூட்டம்
கயமையுடன் வள்ளுவரின் சிலையில் அந்த
தற்குறிகள் சாணியுடன் சேற்றைப் பூசி
தம்பட்டம் அடிக்கின்றார் வெட்கம்! வெட்கம்!
கற்பூர நறுமணத்தை அறியாக் கேடர்
காவிஉடை வள்ளுவர்க்கு உடுத்தி விட்டு
கற்சிலையைக் கடவுளெனப் பார்ப்ப தாலே
குறள்தந்த வள்ளுவரைக் காத்து நிற்போம்.

திருக்குறளில் சாதியில்லை கோவில் இல்லை.
தமிழென்ற சொல்லில்லை மதமும் இல்லை
கருத்தோட்ட நதியில்லை நிலமும் இல்லை
கடவுளில்லை அதனால்தான் உலகம் எங்கும்
பொருந்துகிற பொதுமறையாய் ஓங்கி நின்று
புரட்சியினை விதைக்கிறது இதனைக் கண்டு
மருட்டுகின்ற மதவாதி எதிர்ப்ப தாலே
மண்ணில்நாம் குறள்காக்கப் புரட்சி செய்வோம்.

உலகத்தில் உருசியாவில் கிரம்ளின் என்னும்
உலோகத்து மாளிகையில் அழியா வண்ணம்
உலகமதி திருக்குறளைப் பாது காப்பாய்
உணர்வுடனே அந்நாட்டார் வைத்து உள்ளார்
நலமிக்க எல்லீசர் வெள்ளைக் காரர்
நம்குறளை முதல்கண்டு அச்சில் ஏற்றி
உலகத்தில் புகழ்பெற்றார் அதனால் அந்த
உத்தமரைத் தாம்வாழ்த்தி உயர்ந்து நிற்போம்.

செல்லுமிடம் மழலைப்போல் குறளைப் பேசி
சிரிக்கின்ற பிரதமரை நம்ப லாமா?
ஒல்லுகிற வழியெல்லாம் கெடுக்கும் அந்த
உலுத்துவிழும் ஆட்சியினை நம்ப லாமா?
பல்லுக்குள் நஞ்சுடைய நல்ல பாம்பு
போலுள்ள ஆட்சியரை நம்ப லாமா?
வெல்லும்நம் தமிழினத்தின் பெருமை பேசி
வாழ்வாங்கு வள்ளுவத்தைக் காத்து நிற்போம்.

- கவிஞர் **முத்தரசன்**
பெரம்பலூர்.

**பெரியாரிய உணர்வாளர்கள் கூட்டமைப்பு**
**கோவையில் 2019 திசம்பர் 22இல் நடத்தும்**
**நீலச்சட்டைப் பேரணி - சாதி ஒழிப்பு மாநாடு**



நீலச்சட்டைப் பேரணி-சாதி ஒழிப்பு மாநாடு மாநாட்டுப் பொறுப்பு ஒருங்கிணைப்பாளர்கள்: **கோவை கு. இராமக்கிருட்டிணன், பொழிலன், கொளத்தூர் தா. செ.மணி, திருமுருகன் காந்தி, வாலாசா வல்ல வன், குடந்தை அரசன், நாகை திருவள்ளுவன்**

மாநாட்டுச் சிறப்புரை: **கி.வீரமணி வே. ஆனைமுத்து, தொல் திருமாவளவன், வேல்முருகன் பாலபிர ஜாபதி அடிகளார், பேராசிரியர் சுப வீரபாண்டியன், இரா. அதிய மான் வசந்தா கந்தசாமி,பேராசிரியர் நெடுஞ்செழியன், சொல்லாய்வறிஞர் அருளியார், நடிகர் சத்யராசு, இயக்குநர் வெற்றிமாறன், வழக்கறிஞர் ப.பா.மோகன், அரங்க குணசேகரன், பூ.சந்திரபோஸ், மீ.த. பாண்டியன், வழக்கறிஞர் பாலமுருகன், கே.எம்.செரிப், கு.ஜக்கையன், சி வெண்மணி, நிலவன், நிலவழகன், கா.சு.நாக ராசன், பாவெல், க.இரா தமிழரசன், பார்த்திபன், செல்வ மணியன், தெய்வமணி, செள. சுந்தர மூர்த்தி**

சிறப்பு அழைப்பாளர்கள்: **கோவை ஞானி``எஸ் வி.ராஜதுரை, செந்தலை ந.கவுதமன், பா. செயப் பிரகாசம், பல்லடம் மாணிக்கம், கோ. திருநாவுக் கரசு, கண. குறிஞ்சி, மதினி செல்வி, தழல் தேன்மொழி.**

பங்கேற்போர் : துரை சிங்கவேல், சு. அகத்தியன், காஞ்சிஅமுதன், பரிதி, சுப்பு மகேசு, திருமலை தமிழரசன், சின்னப்பா தமிழர், தகடூர் சம்பத், பன்னீர்செல்வம், இலை யோலா மணி, மா தங்கராசு, உலக நாதன், சே.இளைய ராசா, து.கு.கதிரவன், தம்பி மண்டேலா, நாவை செ.வேலு, மா. இராமசாமி, பிரதீப், சோழ நம்பியார், அரசெழிலன், முல்லை வேந்தன், தமிழ் இராசேந்திரன், பாபு இரா சேந்திரன், நாகேஸ்வரன், அருணா சுந்தரராசன், லூர்து சாமி, சோம சண்முகம், கல்யாணசுந்தரம், தேனி ராசா, வே. ஈஸ்வரன் மற்றும் பலர் பெரியாரிய கூட்டமைப்புப் பொறுப்பாளர்கள்.

**பெரியாரிய உணர்வாளர்கள் கூட்டமைப்பு**
**9443822256, 7904756556, 8608068002**

## சிந்தனையாளன் வளர்ச்சி நிதி - திசம்பர்-2019

| | | |
|---|---|---|
| **துரை சித்தார்த்தன்** | காட்டுமன்னார்கோயில் | 1000/- |
| **இரா.சோதிவாணன்** | சென்னை | 1000/- |
| முனைவர் **அ. ஆறுமுகம்** | திருமழபாடி | 500/- |
| **பாவேந்தன்** | அரக்கோணம் | 500/- |
| **இரா.பச்சமலை** | சென்னை | 500/- |
| பாவலர் **வையவன்** | திருவண்ணாமலை | 500/- |
| **தமிழ்நாடன்** | குவைத் | 500/- |
| **மதனகவி** | வாணியம்பாடி | 500/- |
| **சோ.அண்ணாதுரை** | பெங்களூரு | 500/- |
| **மோ.சி. சங்கர்** | வேலூர் | 200/- |
| **கி. இராமச்சந்திரன்-மேகலா** | வாலாசாபேட்டை | 200/- |
| **ப.வெங்கடேசன்-அரங்கமணிமொழி** | வாலாசாபேட்டை | 200/- |
| **வசந்தா மதியழகன்** | அரியலூர் | 200/- |
| **இளவரசன்,** தமிழ்க்களம் | அரியலூர் | 200/- |
| **சி. இலக்கியா** | சென்னை | 100/- |
| **அ. லயா** | கிழக்கு லண்டன் | 100/- |
| **சி. அகிலா** | சென்னை | 100/- |
| திருமதி. **சகுந்தலா குப்புசாமி** | சிறுநாத்தூர் | 100/- |
| **மா. சுப்பிரமணி - கஸ்தூரி** | தாம்பரம் | 100/- |
| **மு.செயபால்** வழக்குரைஞர் | திருவண்ணாமலை | 100/- |
| **க. நாகராசன்** | ஆவடி | 100/- |
| **கோ.நக்கீரன்** | சோளிங்கபுரம் | 100/- |
| **க.பிரபாகரன்** | தஞ்சாவூர் | 100/- |
| **இரா.காந்தி** | வடக்கு மாங்குடி | 100/- |

## மா.பெ.பொ.க. வளர்ச்சி நிதி - திசம்பர்-2019

| | | |
|---|---|---|
| புலவர் **இரா.கலியமூர்த்தி** | சிறுகடம்பூர் | .... 100/- |
| **பொ.சுப்பிரமணியன்** | கீழ்பென்னாத்தூர் | .... 100/- |
| **முத்து அன்பழகன்** | சீர்காழி | .... 100/- |
| **அழகு அன்பழகன்** | சீர்காழி | .... 100/- |
| **க. நாகராசன்** | ஆவடி | .... 100/- |

**மார்க்சியப் பெரியாரியப் பொதுவுடைமைக் கட்சிக்காக** வெளிடுபவர், ஆசிரியர் **வே.ஆனைமுத்து,**
மனை எண்.277/2, சென்னை-திருவள்ளூர் நெடுஞ்சாலை, அம்பத்தூர், சென்னை - 600 050.
அச்சிட்டோர் : **பெரியார் அச்சிடுவோர் வெளியிடுவோர்,** சென்னை-50. ☎ : 9597526990

Printed by **V. ANAIMUTHU** and Published by V. Anaimuthu on behalf of Marxist Periyarist Communist Party, and printed at Periyar Printers & Publishers Place of Printing No.277/2, Chennai-Tiruvallur High Road, Ambattur, Chennai-50. Editor : **V. ANAIMUTHU**